


கௌரவ ஆசிரியர்:
ந்யாயவேதாந்த வித்வான்
உ. வே. ஸ்ரீ [illegible] ஸ்வாமி.

நிர்வாக ஆசிரியரும்,
உரிமையாளரும்:
ஸ்ரீ எம். ஓ. அழகிய சிங்காரச்சாரி,
பி. எஸ். ஸி., பி. எல்.

காரியாலயம்—71, வெங்கடரங்கம் பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை—5. (போன் 86109)

மலர் 4. இதழ் 10. ஜய ஹு தை. 1955 ஜனவரி—பிப்ரவரி' 55

OFFICE
31 MAR 1955
MADRAS

# இந்துமரதம்

தை மாதமென்றால் ஒரு தனித்த இன்பம்! "பொங்கலோ பொங்கல்! பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!" என்ற ஆனந்த கோஷமே எங்கும் ஒலிக்க, சங்கராந்தி உத்தராயண புண்யகாலம் தொடங்குகிறது, தை பிறந்தால் வழிபிறக்கும் என்ற நல்வாழ்த்துடன். தைப் பூசத் திருநாள் தான்ய ஸம்ருத்தியைக் குறிப்பிடுகிறது. அய்யமதி பெற்ற **மழிசைப்பிரான்** வந்துதித்த தையில் மகமும், தர்சனத்துக்காகத் தம் தர்சனத்தையளித்த **கூரத்தாழ்வான்** வந்துதித்த தையில் ஹஸ்தமும், பட்டர்தொழும் **எம்பார்** வந்துதித்த மகர புனர்பூசமும், வால்மீகி நாரத ஆஞ்சநேய அம்சமான **ஸ்ரீ த்யாகய்யர்** ஸ்ரீராமனையடைந்த பகுளபஞ்சமியும், ஆஸ்திகர்களைவரும் ஆர்வத்தோடு கொண்டாடும் நாட்களன்றோ! இச்சிறப்புகளனைத்தும் இவ்விதழில் பரிமளிக்கின்றன. தவிர, திருப்பாவை மலரில் இடமின்றி விடப்பட்ட பல அம்சங்களும், வழக்கமான தொடர் அம்சங்களும் ஸ்ரீவானமாமலை ஜீயர்ஸ்வாமியின் ஆசிச் செய்தியும் இவ்விதழை அலங்கரித்துப் பெருவிருந்தளிக்கின்றன. அன்பர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ வானமாமலைஜீயர் ஆசிச்செய்தி. | 686 | திருப்பாவையும் எம்பெருமானும். | 717 |
| சிக்கதேவராஜ [illegible] | 688 | கீதாதாத்பர்யம் | 720 |
| [illegible] | 693 | அமலனாதிபிரான். | 728 |
| [illegible]ாலை | 701 | செய்திகள். | 737 |
| [illegible] | 703 | பக்தாபீஷ்டபலப்ரதன். | 74[illegible] |
| [illegible] | 705 | தையில் மகம். | 74[illegible] |
| [illegible]ும். | 710 | ஹஸ்தம், புனர்பூசம், | 75[illegible] |
| [illegible]றை) | 713 | தியாகராஜ கீர்த்தன ஸாரஸாரம். | 75[illegible] |

JL
N5 4.10
187283

[illegible]ும் கட்டுரைகளில் கண்டுள்ள அபிப்பிராயங்கள் யாவும் அவ[illegible]ர்களுடையவை; அதற்கு பத்தன் ஆசிரியர்களோ, உரிமையாளரோ பொறுப்பாளிகளல்ல.

# சென்னை நகரவாஸிகளுக்கு ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமி

## பத்தன் வாயிலாக அனுப்பும் ஆசிச் செய்தி



நான் சென்ற இரண்டு மூன்று மாத காலமாக உங்கள் மத்தியில் தங்கியிருக்க நேர்ந்தது பற்றி மிகவும் ஸந்தோஷமடைகிறேன். இந்நாட்களில் நீங்கள் என்னிடம் காட்டிய அன்பும் ஆதரவும் என்னால் என்றும் மறக்க முடியாதது. நான் இன்னும் சில நாட்களில் உங்களைப் பிரிய நேரிடுவதால் உங்களுக்குச் சில உபதேச மொழிகளைக் கூற முற்படுகிறேன். நமது ஸமயாசாரங்களைப் பிறர் என்ன தூஷித்தாலும் நாம் கைவிடக் கூடாது. நாம் பதிலுக்கு அவர்களைத் தூஷிக்கவும் வேண்டாம். நாம் மேலையார் செய்வனவற்றைச் செய்து வந்தோமானால், நெற்செய்யப் புல் தேயுமாபோலே அத்தூஷணமும் நாளடைவில் அகன்றுவிடும். நாஸ்திக்யம் மேலிட்டு துஷ்ப்ரசாரம் நடந்துவரும் இக்காலத்திலும் இந்நகரில் ஆஸ்திக்யம் எங்கும் மலிந்திருப்பதை நன்கு அறிந்தேன். எங்கும் ஸ்ரீராமாயணம், பாரதம், பாகவதம், திவ்யப்ரபந்த வ்யாக்யானங்கள் இவை விஷயமான உபந்யாஸங்கள் நடப்பதையும் அவைக் கேட்க ஜனங்கள் திரள் திரளாய்க் கூடுவதையும் காண்கிறேன். அது நமது பாரத மக்களின் உள்ளத்துள் ஊறிய ஆஸ்திக்யத்தாலல்லவா? ஆயினும், அந்த ஆஸ்திக்ய புத்திக்கு அநுகுணமான அநுஷ்டானங்களில்லாதிருக்கும் குறையை என்னால் சொல்லாதிருக்க முடியவில்லை. "வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமான்! விஷ்ணுராராத்யதே! பந்தா: நாந்யஸ்தத்தோஷகாரக:" "வர்ணாச்ரம தர்மங்களை அநுஷ்டித்து வரும் புருஷனாலேயே பரமபுருஷன் ஆராதிக்கப்படுகிறான்; அவனைச் சந்தோஷிக்கச்செய்ய வேறு மார்க்கமில்லை" என்பது இதன் பொருள். எல்லோரும் கூடுமானவரை வர்ணாச்ரம தர்மங்களைச்செய்துவரவேண்டும். உதாரணமாக, பையன்களுக்கு உரிய காலத்தில் உபநயனஞ்செய்து, உபயுக்தமான வேதம் ப்ரபந்தங்களையும் கற்பித்து ஸம்ஸ்க்ருத பாஷையிலும் கொஞ்சம் வ்யுத்பத்தி பெறும்படி பெரியோர்கள் முயலவேண்டும். பெண்கள் விவாஹ விஷயத்திலும் அரசாங்கத்தார் குறிப்பிட்ட காலத்திற்கும் மேலாகக் காலம் கடத்துவதும் கூடாது. ஆங்கில அரசாங்கம் அகன்றும் அந்த நாகரிக மோஹம் நம்மை விடவில்லை. நமது சிகைகளை இனி சித்திரத்திலாவது காணமுடியுமா என ஸந்தேஹம் எழுகிறது! நெற்றியும் பாழ்பட்டுப் பொலிவின்றி இருக்கிறது! மனதில் ஆஸ்திக்யம் இருந்தால் மாத்திரம் போதாது. அது ஆசாரணைகளிலும் இருக்க வேணும். "தர்மோ ரக்ஷதி ரக்ஷித:" நாம் தர்மத்தைக் காப்பாற்ற அது நம்மைக் காப்பாற்றும். எனவே அந்தந்த வர்ணாச்ரமங்களுக்குரியதாய் சாஸ்திரங்களால் கூறப்பட்டுத் தொன்றுதொட்டு வரக்கூடியதான ஸ்நானம், ஸந்த்யாவந்தனம், ஜபம், பகவதாராதனம், பகவந்நாம கீர்த்தனம் முதலியவற்றை சுத்தியையுடையனாய் சிகாபுண்ட்ராதிகளுடன் முறைப்படி யதோசிதம் செய்து ஸ்ரீராமாயணம், ஸ்ரீபாகவதம், திவ்யப்ரபந்தம் முதலியவற்றால் ஈசனுடைய சரிதங்களையும் குணங்களையும் நன்கு அறிந்து அநுபவித்து, அவனையே மனத்திருத்தி, அவனதின்னருளால் வாயு நன்மக்களைப் பெற்று மகிழ்ந்து, இங்கு நல்ல பதத்தால் கொண்ட பெண்டிர் மக்களுடன் மனைவாழ்ந்து, மறுமையிலும் பரமபலனை அடையும்படி ஆசி கூறுகிறேன்.

—வானமாமலை ராமாநுஜ ஜீயர்.

# ஸ்ரீ சிக்கதேவராஜ விண்ணப்பம்

ஸ்ரீ காரப்பங்காடு வெங்கடாசாரிய ஸ்வாமி

செய்த உபன்யாஸங்களின் ஸாராம்சம்.

❋

ஸ்ரீ ம. ர. ஸம்பத்குமாரன். எம். ஏ.

[கார்த்திகை இதழ்த் தொடர்ச்சி]

இனி பகவானுக்கு ஜன்மம், உருவம், இவை உண்டா இல்லையா என்பதை ஆராய்வோம். அவனுடைய உருவத்தைப்பற்றி முதல் விண்ணப்பத்திலேயே விசாரிக்கப் பட்டுள்ளது. அவனுடைய ஜன்மத்தைப்பற்றி சாஸ்த்ரார்த்தம் என்னவென்றால், அவனுக்கு நமக்குப்போல் ஹேயமான ஜன்மம் கிடையாதெனினும், அப்ராக்ருதமான அவதாரங்கள் உண்டு என்பதே. 'அஜாயமானோ பஹுதா விஜாயதே' (பிறவாதவன் பலவாறு பிறக்கிறான்) என்னும் ச்ருதிக்கு விரிவுரை ஆகும் வகையில் பல உபப்ரும்மணங்களை முனிவர்கள் செய்துள்ளனர். அங்கெல்லாம் இக் கருத்தைக் காணலாம். மேலும் கண்ணனே தன் அவதார ரஹஸ்யத்தைக் கீதையில் கூறியுள்ளான். "உன்னைக் கடையேற்றுவதற்காக இக் கர்ம யோகத்தை நான் புதிதாய் உனக்கு உபதேசிக்கவில்லை. வெகுகாலம் முன்பே இந்த யோகத்தை விவஸ்வானுக்குக் கற்பித்துள்ளேன்" என்கிறான் கண்ணன். அப்பொழுது அர்ஜுனனுக்கு ஐயம் எழுகிறது. 'கதம் ஏதத் விஜானீயாம் த்வம் ஆதௌ ப்ரோக்தவான் இதி?' (நீ இதை முதலில் கூறினாய் என்று நான் எவ்வாறு அறிகிறது?) என்று கேட்கிறான்.

இங்கு 'கதம்' (எவ்வாறு) என்னும் பதத்திற்கு ஸ்ரீராமானுஜர் கூறும் பொருள் ஆச்சரியப்படத்தக்க அழகுடன் அமைந்துள்ளது. மற்ற ஆசாரியர்கள் இவ்விடத்தில் இவ்வளவு விவரமாகப் பொருள் கூறியில்லை. கேள்விக்குப் பதில் கூறும் கண்ணனுக்குத்தான் அதன் உட்கருத்துத் தெரியும் எனக் கண்டு, கண்ணன் பதில் கூறும் ச்லோகங்களைக் கொண்டு, அர்ஜுனன் கேள்வி எத்தன்மையது என்பதை எடுத்துக் காட்டுகிறார் ஸ்ரீ பாஷ்யகாரர்.



'கதம்' (எவ்வாறு) என்னும் ஒரு சிறு கேள்விக்கு பஹூனி மே வ்யதீதானி', 'அஜோ'பி ஸந் அவ்யயாத்மா,' 'யதா யதா ஹி தர்மஸ்ய', 'பரித்ராணாய ஸாதூனாம்,' 'ஜன்ம கர்ம ச மே திவ்யம்' என்னும் ச்லோகங்களினால் கண்ணன் விரிவாக விடையளிக்கிறான். வேதாந்தமறிந்தவனாதலால் அர்ஜுனனின் ஸந்தேஹம் வேதாந்த தத்வங்களை அடிப்படையாகக் கொண்டது. உபநிஷத்துகளில் 'ந ஹ வை ஸசரீரஸ்ய ப்ரியா: ப்ரியயோ: அபஹதிரஸ்தி' (உடலோடு கூடியிருப்பவனுக்கு ப்ரியா ப்ரியங்களிடமிருந்து பிரிவு கிடையாது) என்று கூறப்பட்டிருக்கிறது. சரீர ஸம்பந்தமற்றிருந்தால் தான் ஸுகதுக்கங்களினின்றும் விடுதலை பெறலாம் என்று இதிலிருந்து ஏற்படுகிறது. இப்பொழுது ஆனந்த ஸ்வரூபனான பகவானுக்கு எவ்வாறு உடலோடு சேர்க்கை ஏற்படக்கூடும் என்னும் ஐயம் எழுகிறது. 'எவ்வாறு' என்று அர்ஜுனன் கேட்பதின் பொருள் என்னவென்றால்: "உன் சரீரம் மெய்யானதா, இந்திரஜாலத்தால் உண்டாக்கப்படும் பொய்த் தோற்றமா? அது பொய்யாயின், மேற்கொண்டு கேள்வி ஒன்றுமில்லை; உண்மையானதாயின், எக்காரணம் கொண்டு உனக்கு சரீர ஸம்பந்தம் ஏற்படுகிறது? இதற்குப் பலமென்ன? எப்பொழுதெல்லாம் நீ ஒரு உடலோடு கூடியிருப்பாய்?" என்று வினவுகிறான்.

இதற்கு விடையளிக்கும்பொழுது 'பஹூனி மே வ்யதீதானி' என்னும் ச்லோகத்தில் கண்ணன் அர்ஜுனனுக்குப் போல் தனக்கும் அநேக ஜன்மங்கள் உண்டெனக் கூறுகிறான். இங்கு அர்ஜுனனின் பிறப்புகளை உவமையாகக் கொண்டமையால், கண்ணனின் ஜன்மங்கள் அவைகளைப்போல் ஸத்யமானவை என்று அறியலாம். 'அஜோ'பி ஸந் அவ்யயாத்மா' என்னும் ச்லோகத்தில் தன்னுடைய இறைத்தன்மையை விடாமலே அவன் அவதரிக்கிறான் என்பது விளக்கப்படுகிறது. 'ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா' (என்னுடைய ப்ரக்ருதியைப்பற்றி நான் [illegible] பிறக்கிறேன்) என்னுமிடத்தில் பகவானின் ப்ரக்ருதி எனப்படுவது திவ்யமானது, அப்ராக்ருதமானது என்று ஏற்படுகிறது. இங்கு 'மாயா' என்னும் பதத்திற்கு 'மாயா வயுநம் ஜ்ஞானம்' என்னும் நிகண்டின்படி 'ஜ்ஞானம், இச்சை' என்று பொருள்,

'மாயயா ஸததம் வேத்திப்ராணினும் ச சுபாசுபம்' என்னும் வாக்யத்தில் மாயைக்கு ஞானம் என்றே பொருள் என்பதைத் தெளிவாகக் காணலாம். 'ஆத்ய மாயயா' என்னுமிடத்திலும் இவ்வாறே 'தன் இச்சை அல்லது ஸங்கல்பத்தினல்' என்று கொள்ளவேண்டும்.

'ஸம்பவாமி ஆத்ம மாயயா' (என் மாயையினல் பிறக்கிறேன்) என்பதை ஸ்ரீராமாயணம் விவரித்துக் காட்டுகிறது. நாம் திருவாய்மொழியில் பாகவத" சேஷத்வத்தை உபதேசிக்கும் பாசுரங்களைக் 'கண்ணினுண் சிறுதாம்பு' என்றும், மங்களாசாஸனம் செய்யுமிடத்தைப் 'பல்லாண்டு' என்றும் பேசுவதுபோல் ராமாயணத்திலும் ஒரு கீதையைக் காணலாம். அதாவது, ராமாயணத்தில் கீதையின் பொருள் கிடைக்கும். தசரதனைப்பற்றி வால்மீகி பகவான் கூறுகிறார்: 'ஸுதார்த்தம் தப்யமானஸ்ய நாஸீத் வம்சகரஸ்ஸுத:' (மகன் பெறுவதற்காக வருந்திக் கொண்டிருந்த தசரதனுக்குக்குலத்தைப் பெருகிவைக்கும் பிள்ளை பிறக்கவில்லை). 'தப்யமானஸ்ய' என்றால் 'தாபப்படுகிறவனுக்கு', 'வருந்தி வெதும்புகிறவனுக்கு' என்று மேல்வாரியாகப் பொருள் தோன்றும். கோவிந்தராஜர் தன் வ்யாக்யானத்தில் 'தபச்சரத:' (தவம்புரிகிறவனுடைய) என்று பொருள் கூறியுள்ளார். இதனல் தசரதன் செய்த தவத்தால் அவனுக்கு மக்கட்பேறு கிடைக்கவில்லை என்பது தெளிவாகிறது. புத்ரகாமேஷ்டி என்னும் வேள்வியால் மட்டும் அது கிடைத்துவிடுமா? தேவர்கள் ராவணனிடமிருந்து தங்களைக் காக்கும்படி முறையிட்டபொழுது, 'பிதாம் ரோசயமாஸ ததா தசரதம் ந்ருபம்' (அரசனை தசரதனைத் தனக்குத் தந்தையாக விரும்பினன்) என்றபடி தசரதனுக்கு மகனய்ப் பிறக்க வேண்டுமென்னும் ஸங்கல்பத்தை பகவான் செய்தான். இதுவே ராமாவதாரத்திற்குக் காரணம். இவ்வாறு பகவானின் இச்சை அல்லது ஸங்கல்பம்தான அவன் அவதாரத்திற்குக் காரணமென்று தெளிவாகப் புலப்படுகிறது.

இது வரை[illegible] இந்த ஆறும் [illegible]ணப்பத்தில் ஒன்றுக்கொன்[illegible]ண்பட்டதுபோல் [illegible]றுகிற சில ச்ருதி வாக்ய[illegible] எவ்வாறு ஒற்[illegible] காணலாம்



என்பதைப்பற்றி சிறிது ஆராய்ந்தோம். ஸ்ரீ சிக்கதேவராஜர் இங்கு கடினமான சாஸ்த்ரார்த்தங்களை ஸ்ரீ பாஷ்யத்தின் வழியைப் பின்பற்றித் தெளிவாகக் காட்டியுள்ளார். எல்லா சாஸ்த்ரங்களிலும் உள்ள ஓர்மையை அவர் காட்டுகிறதில் அவர் ஆஸ்திக்யத்தின் பெருமை வெளியாகிறது. நல்ல ஆசாரியனின் அநுக்ரஹமிருந்தால்தான், வேத வாக்யங்களை முனபின் முரண்பாடில்லாமல் ஸரியாகப் பொருள் கொள்ளலாம். 'ஆசாரியவான்புருஷோ வேத' (ஆசாரியனுடைய புருஷன் அறிகிறான்),

இதற்குச் சான்றாக ஒரு சரிதம் கூறுவதுண்டு. பராசரபட்டரிடம்காலக்ஷேபம் கேட்பவரில்சாஸ்த்ரமறியாத ஒரு வயோதிகரும், சதுச்சாஸ்த்ர பண்டிதர் ஒருவருமிருந்தனர். பட்டர் அவ்வயோதிகருக்கே அதிக மரியாதைக் காட்டுவது கோஷ்டியிலிருந்த சிலருக்குப் பிடிக்கவில்லை. இதை அறிந்த பட்டர் இதன் காரணத்தை விளக்க ஒருநாள் அவ் வயோதிகரைக் கேட்டார்: 'இதுவரையில் நீர் காலக்ஷேபம் கேட்டதிலிருந்து அறிந்த ஸாரமான அர்த்தமென்ன?' உடனே கிழவனார் கூறினார்: 'ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம். அவன் தயையே நமக்குப் புருஷார்த்தம்.' இதே கேள்வி அப் பண்டிதரும கேட்கப்பட்டார். அவர் சிறிது யோசித்துத் தயங்கித் தயங்கிக் கூறினார்: 'ஸாரமான அர்த்தம் என்னவென்று எளிதில் செப்ப இயலாது; நாராயணன் பரத்துவம் என்று சில ச்ருதிகள முறையிடுகின்றன. வேறு சில ச்ருதிகள் இதர தேவதைககளைப் பெரியவர்களாகக் காட்டுகின்றன; இந்த ஆராய்ச்சி மிகவும சிக்கலுடையது.''

இதனல் சாஸ்த்ரம் படித்த உடனேயோ, வாக்யார்த்தங்கள் நடத்தின உடனேயோ நமக்கு தத்துவ, ஹித, புருஷார்த்தங்களைப் பற்றிய அறிவு ஏற்படாதென்று தெளியலாம்; ஆசார்யனின் அநுக்ரகத்தைக் கொண்டே நமக்குத் தத்துவஞானம் கிடைக்கவேண்டும். ஆசார்யன் மூலமாய் வராத ஞானம் ஞானமன்று; அது அஞ்ஞானமே!

*

187283

## ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸபை.

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 6or13 | அறிவிக்கப்படும். | |
| ... ... 27 | ஸச்சின் ஷங்கர் நடன கோஷ்டியாரின் "ராம லீலா" நடன நாடகம். | |

## ரஸிக ரஞ்ஜனி ஸபை, மைலாப்பூர்.

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 13 | டி. வி. பலுஸ்கர் ஹிந்துஸ்தானி சங்கீதம். | |
| ... ... 19 } ... ... 20 } | ஸச்சின் ஷங்கர் நடன கோஷ்டியாரின் "ராம லீலா" நடன நாடகம். | |
| ... ... 27 | எஸ். பாலசந்தர், லால்குடி, மணி. | |

## மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் க்ளப்.

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 6 | திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸார் நடிக்கும் "ஸுதர்சனம்" நாடகம். | |
| ... ... 13 | ஆலத்தூர்சகோதரர்கள், மணி மிருதங்கத்துடன் | |
| ... ... 20 | ஸ்ரீமதி வாஹிதா ரஹ்மான். | நடனம். |

## ஸ்ரீ கலா நிகேதன், சென்னை-1

| | | |
|---|---|---|
| ஜனவரி 30 | குமாரி புதுடெல்லி வஸந்தா | நடனம். |

## கோபாலபுரம் ஸங்கீத ஸபை.

| | | |
|---|---|---|
| ஜனவரி 23 | குமாரிகள் மாலதி, வனமாலா | நடனம். |

## ஸ்ரீ திருவட்டீச்வரர் ஸபை.

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 19 | கேரள சகோதரிகள் | நடனம். |

## திருவல்லிக்கேணி ஆர்ட்ஸ் அகாடமி.


| | | |
|---|---|---|
| ஜனவரி 29 | எம். எம். தண்டபாணி தேசிகர். | பாட்டு. |
| பிப்ரவரி 12 | ஆலத்தூர், க்ருஷ்ணன், மணி. | |

## ஸ்ரீகச்சாலீச்வரர் கான ஸபை, சென்னை-1.

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 6 | நாடகம். (அண்ணாமலைமன்றம்) | |
| பிப்ரவரி 5or12 | குமாரிகள் மாலதி, வனமாலா | நடனம். |
| ... ... 13 | ஸ்ரீ தியாகராஜதினக் கொண்டாட்டம். | |
| ... ... 20 | எம். ஏ. கல்யாண கிருஷ்ணபாகவதர் | வீணை. |


## சென்னையில் ஸ்ரீவைஷ்ணவ மஹாநாடு

சென்னை ஸ்ரீவைஷ்ணவ மஹாஸபையின் ஆதரவில் டிஸம்பர் 25உ முதல் 30உ வரை நடைபெற்ற 29-வது வருஷோத்ஸவத்திற்கு ஸ்ரீவரயோகி ராமாநுஜ ஸ்வாமி தலைமைவகித்தார். மஹாநாட்டை ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி திறந்து வைத்தார். ஸ்ரீ உ. வே. பரமஹம்ஸ் பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் வான மாமலை ஜீயர் ஸ்வாமி திருவருள் கூர்ந்து விஜயம் செயதருளினர். ஸ்த்ரீகள மகாநாட்டுக்கு ஸ்ரீமதி R. ஸ்ரீதேவியம்மாள் தலைமை வகித்தார். ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்துக்கு கோயில்களே ப்ரதானம், அர்ச்சாவதாரமே உத்தேச்யம் என்று அறிவுறுத்தப் பட்டது.




திருமழிசை ஜகந்நாத ஸ்வாமி

பக்தன்



திருமழிசைப்பிரான்


தைப்பூசம்

# தையும் தாய்நாடும்.

[ஸ்ரீ ஸ்கந்த நாராயணன்]

மார்கழி கழிந்தது. தையை வரவேற்கத் தயாராவோமாக. மார்கழியும் தையும் ஹேமந்தருது. ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் என்ற முத்தொழில் புரியும் முதல்வனின் மும்மூர்த்திகளின் செயற்றத்வங்களை எடுத்துரைக்கும் கிருஷ்ணராஸலீலை, வைகுண்டஏகாதசி, ஆருத்ர தரிசனம் என்ற விசேஷங்கள் கொண்ட ஹேமந்தருதுவின் முற்பகுதியாகிய மார்கழியின் மஹத்வத்தை உணர்ந்தோம். ஸர்வஜ்ஞன் எனப்படும் ஜகதீச்வரனின் பஹுத்வ இச்சையினால் ஸமஷ்டிபுத்தியாகிய மஹத்தத்வம் தோன்றியது. இச்சாநுசாரம் செயலாற்றுகின்ற ஜகதீச்வரியின் கிரியாசக்திரூபமாகிய அஹங்கார தத்வமும் தோன்றியது. இவ்விரண்டினின்று பஞ்சதத்வங்களுடன் கூடிய பஞ்சபூதங்கள் தோன்றி ஸப்த லோகங்கள் என்று கூறப்படும் ஈரேழுபதினாலு லோகங்கள் கொண்ட பிரம்மாண்டமும் உண்டாயிற்று. இருள்சூழ்ந்த இந்த அண்டத்திற்குப் பிரகாசம் அளிக்க ஸவித்ருசக்தியின் கனீபாவம் கொண்ட ஸ்வரூபத்துடன் சூரியனும் தோன்றினான். இந்த சூரியனின் தோற்றத்தை, ஸவித்ரு சக்தியின் ஆவிர்பாவத்தை, ஸமஷ்டிமானவ சக்தியை, ஆராதிப்பதற்கேற்ற தை மாதத்தின் சிறப்பை அடுத்தபடியாக அறியமுயல்வோம்.

ஹேமந்தருதுவை முன்பனிக்காலம் என்கின்றோம். அதாவது காலைவேளைகளில் குளிர் அதிகம். அடுத்த ருதுவாகிய சிசிர ருதுவில் மாலை வேளைகளில் குளிர் அதிகம். ஆகவே, அது பின்பனிக்காலம் எனப்படுகின்றது. மார்கழி—தை மாதங்களாகிய முன்பனிக்காலத்தின் அதிகாலையில் சுகத்தை அளிக்கவல்லது சூடான ஆஹாரம். இதை மனதில் கொண்ட தீர்க்கதரிசிகள் தனுர் மாதமாகிய மார்கழியில் வெண்பொங்கலுடன் விளங்கும் தனுர் மாத பஜனைகளையும் மகரமாதமாகிய தையில் சக்கரைப் பொங்கலுடன் விளங்கும சங்கராந்தி பூஜையையும் வகுத்துளார் போலும். மகர சங்கராந்தியன்று செய்யப்படும் சூரிய நாராயண பூஜைக்கு முன்னும் பின்னும் தேவேந்திர பூஜையாகிய போகிப் பண்டிகையும், கோமாதாவின் பூஜையாகிய மாட்டுப் பொங்கலும் இம்மாதத்தில் வருகின்றன. இந்தப் பூஜைகளைச்செய்து சூரிய நாராயணனை சப்தமி திதியில் ரதாரோபணம் செய்வித்து உத்தராயணமார்க்கத்தில் நடத்திவைக்கிறோம். பிரபஞ்சச்ருஷ்டியில் தோன்றிய மானவஜீவனுக்கு ப்ராணஸ்வரூபியாக விளங்கும் சூரிய நாராயணனின் மஹிமையை எடுத்துரைக்கவே மேற்கூறப்பட்ட



பூஜாவிரதங்கள் ஏற்பட்டுள்ளன. இவைகளைப்பற்றி சற்று அறிய முற்படுவோம்.

முதல்முதலாக வருவது போகிப்பண்டிகை. ஸகலபோகங்களையும் அனுபவிப்பவன் போகி எனப்படுகின்றான். அவனே தேவேந்திரன். சதக்ரது என்ற இந்த தேவேந்திரபதவி அல்லது மன்வந்தர ஸ்வர்க்காதிபதியின் பதவி அடைவது மிகவும் துர்லபமானது. செழிப்புநிலைக்கு இன்றியமையாததாகிய மழைக்கதிபதி தேவதையாகிய இவ்விந்திரனின் பூஜையை நம் தென்னாட்டில் சிலர் காப்புக்கட்டு என்ற ரூபத்திலும், அழுக்கைக் கொளுத்துதல் என்ற கார்ய ரூபத்திலும் நடத்திவருவதைக் காண்கின்றோம். இந்திரனுக்கும் இந்த விதபூஜைக்கும் என்ன சம்பந்தம் என்பதை அறியவேண்டும். பஞ்சதத்வங்களாலாகிய வீடு பிரம்மாவின் அண்டம் அல்லது முட்டையாகிய பிரம்மாண்டமாகும். இதன் அணுவளவாக விளங்கும் வீடு பஞ்சபூதங்களாலாகிய மானிட சரீரமாகிய பிண்டாண்டமாகும். பிரம்மாண்டத்தின் ஸமஷ்டி இந்திரியங்களின் அதிதேவதையாக விளங்குபவன் மன்வந்திர ஸ்வர்க்காதிபதியாகிய தேவேந்திரன் அல்லது பிரகாசம் பொருந்திய இந்திரிய சக்திகளைப் படைத்தவன். இதேபோன்று பிண்டாண்டத்தின் வியஷ்டி இந்திரியங்களின் அதிபனாக விளங்குபவன் பிரகாசத்தை நாடி நிற்கும் பஞ்சேந்திரிய சக்திகளைக்கொண்ட மானிடன். வியஷ்டிமானிடன் சமஷ்டிமானிடனாக ஆக பஞ்ச ஞானேந்திரியங்களைப் பெற்றுள்ள தன் வீடாகிய சரீரத்தைப் புனிதப்படுத்தவேண்டும். தனது பஞ்ச ஞானேந்திரியங்களின் அழுக்குகளை அகற்றிக்கொளுத்தவேண்டும். சரீரமாகிய வீட்டின் வாயில்களாக விளங்கும் ஞானேந்திரியங்களைக் கட்டிக்காக்கவேண்டும். இதுவே ஸகல ஸத்போகங்களை அடையும் மார்க்கம். இதுவே வாஸ்தவமான இந்திரியாதிபதியாகிய இந்திர பூஜை. இந்தப் பூஜையின் தத்வத்தை உள்ளடக்கியதே போகிப்பண்டிகையில் வாயில்கள்தோறும், வீட்டைச்சுற்றியும் இடப்படும் காப்புக்கட்டும், சுண்ணாம்பு பூசி, செம்மணிட்டு, அழுக்குகளை அகற்றி எரிப்பதுமாகிய செயல்கள். இந்த ரகஸ்யத்தை உணர்ந்து போகிப்பண்டிகையை அனுசரிப்போமேயாகில் புஷ்டியை அளிக்க வல்ல வர்ஷா என்ற மழைக்கதிபதியான இந்திரன் மானிடர்கள் ஒவ்வொருவருக்கும் சகலபோகங்களையும் வர்ஷிப்பான். இந்த தேவேந்திரனே வாலியாகவும், அர்ஜுனனாகவும் அவதரித்ததாகக் கூறப்படுகின்றது. இவ்வவதார ரகஸ்யம் என்னவெனில் இந்திரியங்களின் ஆதிபத்யத்தில் குரங்கின் சாஞ்சல்ய ஸ்வபாவத்தைமேற்கொண்டால் அழிவையும், அநன்யபக்தனாகிய நரனின் நிரஸ்வ

பாவத்தை மேற்கொண்டால் அமரத்வத்தையும் அடையலாம் என்பதே. ஆகவே போகிப்பண்டிகை இந்திரியங்களுக்கு அதிபதி தேவதைகளுள்ள தேவேந்திரனின் பூஜையாகும்.

அடுத்து வருவது சங்கராந்தி அல்லது பொங்கல் பண்டிகை. இந்நாளில் சூரியமண்டலத்தின் ஒரு பாகமாகிய பூமிகிரஹத்தில் வாழும் நாம் கிரஹாதிபதியாகிய சூரியநாராயணனின் அநுக்ரஹம் பெற அவரை வணங்குகின்றோம். சூரியனின் மஹிமை அளவற்றது. சூரியனின் சக்தியினால்—சூரிய தேவனின் அருளால்—மழை பொழிந்து அன்னம் பெருகி பிரஜைகள் வளர்ந்து வருகின்றனர். சகல ஜீவராசிகளுக்கும் சூரியன் பிராணஸ்வரூபியாக இருக்கின்றார். "ஆரோக்யம் பாஸ்கராத் இச்சேத்" என்ற மறை வாக்யப்படி தேக திடத்துடன் வாழ விரும்பும் ஒருவன் சூரியனைத்தான் உபாஸிக்க வேண்டும்.

வியஷ்டி மானிடனின் தர்சன இச்சை எவ்வாறு நேத்ரேந்திரியமாகத் தோன்றிற்றோ அவ்வாறே ஸமஷ்டி புருஷனின் தர்சன இச்சை சூரிய ரூபமாக விளங்குகின்றது. நமது ஸ்தூலக்கண் ஆதிபௌதிக வஸ்து. அதனால் நாம் அடையும் பிரகாசம் ஆதியாத்மிகமானது. இந்தப் பிரகாசத்தை அளிக்கவல்ல சூரியசக்தி ஆதிதைவிகமானது. இவ்வாறே சூரியகிரஹம் பிரம்மாண்டத்தின் ஆதிபௌதிகமான ஸ்தூலக்கண். அதனால் உண்டாகும் ஜோதிஸ் சக்தி ஆதியாத்மீகமானது. இந்த சக்தியின் ஆதிதேவதை உள்ள ஸ்வரூபமே ஆதிதைவிகமான சூர்ய தேவன். காலபுருஷனின் மூன்று நேத்ரங்களில் பிராணசக்தி அளிக்கும் சூரியன் ஒன்று. புஷ்டியளிக்கும் சந்திரன் இரண்டாவது. செயல்திறனை அதிகரிக்கவல்ல நக்ஷத்ரங்கள் மூன்றாவது.

இத்தகைய சூரியதேவன் பிராணஸ்வரூபியாக இருப்பதுடன் காலஸ்வரூபியாகவும் விளங்குகிறான். ஸநாதனமாக உள்ள காலத்தை முக்காலங்களாக மாற்றும் சக்தி சூரிய சக்தியே. கல்பம் முதல் காஷ்டைவரை உள்ள யுகங்கள், வருஷங்கள், ருதுக்கள், அயனங்கள், மாதங்கள், பக்ஷங்கள், பகல், இரவு, முஹூர்த்தம், க்ஷணம் ஆகிய எல்லாம் காலஸ்வரூபனின் ப்ரத்யக்ஷங்கள். இந்தக் கால அளவுகளில் ஸம்வத்ஸரம் என்ற காலம் பிரசித்தமானது; பழமையானதும்கூட. சூரியனின் வருஷ சக்ரம் பத்துப் பத்து வருஷங்களாகக்கொண்ட ஆறு ஆரங்களைக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. இதிலிருந்தே பிரபவ முதல் அக்ஷய வரை



உள்ள 60 வருஷ கால அளவு தோன்றியுள்ளது. இந்த 60 வருஷ காலத்தின் ஒவ்வொரு வருஷத்திலும் சூரியனின் சலன கதியைப் பன்னிரண்டாகப் பிரித்து ஸௌரமாஸங்களாகிய மேஷம், ரிஷபம் என்ற 12 மாதங்களாக எண்ணி வருகின்றோம். இதன் காரணமாக சூரியனின் ஸ்வரூபத்தை துவாதச ஆதித்யர்களாகக் காண்கின்றோம். சிருஷ்டி, ஸ்திதி, லயம் என்ற மூன்று அம்சங்களுடன் விளங்கும் தாதா, விஷ்ணு, இந்திரன் என்ற பெயர்களும், பஞ்சபூதங்களின் அம்சங்களாக விளங்கும் பூஷன், வருணன், விவஸ்வான், அர்யமா, அம்சுமான் என்ற பெயர்களும், ஐச்வர்யங்களை வர்ஷிக்கின்ற பர்ஜன்யன், பகன் என்ற பெயர்களும், ஆரோக்யத்தை அளிக்கின்ற த்வஷ்டா, மித்ரன் என்ற பெயர்களுமே இந்த துவாதச ஆதித்யர்களின் நாமாக்கள். இவைகளைத் தவிர சூரியனுக்கு எண்ணற்ற நாமாக்கள் உள. ஆத்யாத்மீகமாகப் பார்ப்போமாகில், மனஸ், சித்தம், புத்தி, அஹங்காரம் என்ற நான்கின் திரிகுணாத்மக பேதங்களாக விளங்கும் ஞானசக்திகளே துவாதச (4×3) ஆதித்யர்களாகும்.

சூரிய ஸம்வத்ஸரத்தின் 12 அம்சங்களில் இரண்டிரண்டாக ஆறு ருதுக்களின் காலவரை கணக்கிடப்படுகின்றது. இவைகளில் வஸந்தம், கிரீஷ்மம், வர்ஷா என்ற மூன்றும் தேவருதுக்கள் எனவும், சரத், ஹேமந்தம், சிசிரம் என்ற மூன்றும் பித்ரு ருதுக்களாகவும் கருதப்படுகின்றன. இத்தகைய ருதுக்களில் ஒன்றாகிய ஹேமந்த ருதுவின் இடையில் உத்தராயண புண்ய காலமும், கிரீஷ்ம ருதுவின் இடையில் தக்ஷிணாயண புண்ய காலமும் ஏற்படுகின்றன. சூரியனின் சலனகதி வடக்குமுகமாகவும் தெற்கு முகமாகவும் உள்ள இவ்விரு அயனங்களின், விஷுவத் புண்ய காலங்கள் இரண்டும், விஷ்ணுபதி என்ற நான்கும், ஷடசீதி என்ற நான்கும், ஆகமொத்தம் பன்னிரண்டு சங்கிரமண காலங்கள் உள. இவைகளில் சூரியன் தேவதைகளின் அதிபதியாக விளங்கும் உத்தராயண புண்யகாலமாகிய மகரசங்கராந்தியன்றுதான் தை மாதம் பிறக்கின்றது. அன்றே நாம் சூரியநாராயணனுக்கு சக்கரைப் பொங்கலிட்டு, புதிதாக விளைந்த நெல்லரிசிச் சோறும் படைத்து வணங்குகின்றோம்.

உலகத்தின் பிராணஸ்வரூபியாக உள்ள சூரியனுக்கு பொங்கலிட்டுப் பூஜைசெய்வதின் நோக்கத்தையும் சற்று அறிய முயல்வோம். பாலும், பழமும், அன்னமும் இட்டு, பொங்கலைவைத்து, 'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக' என்ற ஆரவாரம் செய்து

உலகை உஜ்ஜீவிக்கச் செய்கின்ற சூர்யநாராயணனுக்கு உடலை உஜ்ஜீவிக்கச் செய்கின்ற அன்னத்தைப் படைத்து ஆத்மாவை அர்ப்பணிக்கின்றோம். "அன்னமயம் ஜகத்" என்ற வாக்யப்படி இவ்வுலகமே அன்னமயமாக உளது. தாவரங்கள் பிராணிகளுக்கு அன்னமாகின்றன. தாவரங்களும், பிராணிகளும் மானிடர்களின் அன்னமாக இருக்கின்றன. இறுதியில் பிராணிகளும், மானிடர்களும் தாவரங்களின் அன்னமாக ஆகின்றனர். இத்தகைய அன்னமாம் ஜகத்தில் அன்னமே பிரதான வஸ்துவாகையால் பிராணனைக்காக்கும் அதையே பிராணஸ்வரூபியான சூரியனுக்கு நிவேதனமாக அளிக்கின்றோம். தற்காலத்தில் அன்னத்தை உடல் வளர்ச்சிக்கும், தேக திடத்திற்கும் மட்டும் உபயோகமாக உள்ள ஜடப்பொருளாகக்கருதுகின்றோம். ஆனால், நம்முன்னோர்கள் இதை ஓஜஸ், தேஜஸ், ஸஹனசக்தி, தேவதர்மம் என்ற இந்திரிய சக்தி, விச்வசக்தி, ஸர்வசக்தியாகவும் கண்டு வணங்கி வந்தனர். பசியால் மெலிந்து ஒளியிழந்து, உடல்தளர்ந்து இந்திரியங்கள் சோர்வுற்று நிற்கும் ஒருவனுக்கு அன்னமிட்டுப்பார்த்தால் இச்சக்திகளைக் காணலாம். அத்தகைய அன்னத்தை மேற்கூறிய சகல சக்திகளின் பிரதிநிதியாகவும் பிரத்யக்ஷதெய்வமாகவும் விளங்கும் சூரியனைத் தவிர வேறு யாருக்கு அர்ப்பணிக்க முடியும்.

இந்திரியங்களின் தேவனாக விளங்கும் இந்திரனை பூஜித்து விட்டு, பிராணமயமான, அன்னமயமான ஜகத்தின் நாயகனாக விளங்கும் சூரியநாராயணனையும் பூஜித்துவிட்டு, கிருஷித்தொழிலுக்கு ஆதாரமாக உள்ள விருஷபங்களையும், சகலசத்துக்களுடன் கூடிய அமிருதமயமாகிய க்ஷீரத்தையும் அளித்துக் காக்கும் மனிதனின் செவிலித்தாயாக விளங்கும் கோமாதாவையும் இம்மாதத்தில் பூஜிக்கின்றோம். மாடுகளையே பொங்கலிடும் இக்கலிகாலத்தில் மாட்டுப்பொங்கலின் விசேஷத்தன்மையை யார் அறிய முயல்கின்றனர். 'கோ' என்ற ஸம்ஸ்கிருத பதம் பல அர்த்தங்கள் கொண்டது. அவைகளுள் இந்திரியங்கள் என்பது ஒரு பொருள். இந்த இந்திரியங்களாகிய பசுக்களை அடக்கி ஆண்ட கோபாலனாகிய பரமாத்மா கோபிகைகளாகிய ஜீவாத்மாவுடன் புரிந்த லீலையே ராஸலீலை என்று விளங்குகின்றது. பின்னும் 'கோ' என்றால் கிரணங்கள் என்றும் பொருள். தைவிக நலன் சக்திகளை அளிக்கும் கிரணங்கள் போன்றவையே பசுக்கள். தன்னலம் பாராமல் சூரிய கிரணங்களைப்போலவே பசுக்களும் தங்களுடைய சகலத்தையும் மனிதனுக்கும் உலகிற்கும் அர்ப்பணிக்கின்றன. இத்தகைய பசுவை நம நாட்டுப் பழங்கால மக்கள் தெய்வமாகக் கொண்டாடி க்ஷேமமாக வாழ்ந்துவந்தனர். ஆனால், இப்பொழுது காண்பதென்ன! நவநாகரிக மானிடனின் வயிறு உலோகங்களை உருக வைக்கும் உலைபோல் ஆகிவிட்டது! அதன் தபன சக்தியைத் தணிக்க அவன் நாவும் பல ருசிகளை நாடி நிற்கின்றது. தாவரங்கள் அளிக்கும் இனிய உணவும் போதவில்லை!



ஜலத்தில் வாழும் பிராணிகளின் உடல்உணவும் போதவில்லை! பூமியில் வாசம்செய்யும் மிருகங்களின் மாக்கறியும் போதவில்லை. ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளின் மாமிசமும் போதவில்லை போலும்! மேல்நாட்டு நாகரீகத்தைப் பின்பற்றி ரொட்டியும் மாட்டிறைச்சியும் என்ற முறையை மேற்கொண்டு தொட்டில்முதல் சுடுகாடுவரையுள்ள காலம முழுவதும் மனிதனின் பதலித் தாயாக விளங்கும் கோமாதாவையும ஈவு இரக்கமின்றி, நன்றியறிவின்றி, கொன்று தின்னும் பழக்கத்தையும் கொண்டு ஜாடராக்னியின் தாபத்தைத் தணிக்க முயலும் இந்திய மக்களின் பரிதாப நிலையை என்னென்று சொல்வது! இத்தகைய ஒரு மகத்தான பாபச் செயலால் நாடு அழியாமல் இருக்கவேண்டும என்று ஈசனைப்பிரார்த்திப்போமாக. பின்னும் பசுவின் தெய்வீகத்தன்மையை உணர்ந்த பாக்கியவான்கள் ஒவ்வொருவரும் ஒரு பசுவை வைத்துக் காப்பாற்றி கிரியாம்சையில் கோபூஜையும் நடத்திவருமாறு வேண்டிக் கொள்வோமாக! அவ்வாறு செய்தால்தான் இளங்கன்றின் கழுத்தில் சுருக்கிட்டு ஒரு சொட்டுப்பால் விடாமல் கறந்து காலைக் காப்பிக்கு பால் ஊற்றும் நவீனகோபாலர்களின் அக்ரமம் அழியும்!

மேலே கூறப்பட்ட இந்திர பூஜையும் கோபூஜையும் சேர்ந்தாற்போல் வருவதில் உள்ள விசேஷம் கண்ணனின் லீலையாகிய கோவர்த்தனகிரி உத்தாரணம் என்ற செயலின் ரகஸியத்தையும் விளக்குகின்றது. தேவேந்திரனின் கர்வத்தை அடக்க பரமன் கோவர்த்தனகிரியைக் குடையாய்பிடித்துப் பசுக்களைக் காப்பாற்றினன் என்று படிக்கின்றோம். இதன் ஆத்யாத்மிகப்பொருள் இந்திரிய சக்திகள் கர்வமடைந்து தந்நிலைமீறிக் காரியம் செய்தால் இந்திரியபாலகனாகிய பரமன் பசுக்களாகிய இந்திரியங்களை காப்பாற்றத் தயாராயிருக்கின்றான் என்பதே.

இவ்வாறு உத்தராயண புண்ய காலமாகிய தைமாதப் பிறப்பு தேவேந்திரன், சூரிய நாராயணன், கோமாதா இவர்களின் வணக்கமாகத்திகழ்கின்றது. இத்துடன் இம்மாதத்தில் ரதஸப்தமி என்ற

உத்ஸவமும் வருகின்றது என்று கூறினேம். சப்தாஸ்வின் என்ற பெயர் கொண்ட சூரியனின் ரதம் சப்தமி தினத்தன்றுதான் உத்தர மார்க்கத்தில் செல்லத் துடங்குகின்றது என்பதை நினைவூட்ட இந்த உத்ஸவம் கொண்டாடப்படுகின்றது. பின்னும் புஷ்ய நக்ஷத்திரத்துடன் விளங்கும் பௌர்ணமி திதியாகிய தைப்பூசம் என்ற நாள் மிகவும் விசேஷமானது. சூரியனின உத்தர தக்ஷிண கதியில் திருவோண நக்ஷத்திரப் பிரவேசமும், புஷ்ய நக்ஷத்திரப் பிரவேசமும் முக்கியமானவை. இவைகளே பன்னிரு சங்கிரமண காலங்களில் சிரேஷ்டமான கடக சங்கராந்தி, மகர சங்கராந்தி என்ற பெயருடன் விளங்குகின்றன.

நமது பாரத நாட்டிற்கு ஜன்ம நக்ஷத்ரமாக விளங்குவது புஷ்ய நக்ஷத்ரமாகும். கிருஷிதொழிலே முதன்மை பெற்று விளங்கும் எண்ணற்ற கிராமவாசிகள் நிறைந்த நம் நாட்டில் புஷ்ய நக்ஷத்ரத்துடன்கூடிய தைப்பூசத்தன்று சகல முக்ய தேவாலயங்களிலும் அறுவடை உத்ஸவம் கொண்டாடப்படுவதை நாம் அறிவோம். இந்த வழக்கம் மேல் நாடுகளிலும் 'Harvest Festival என்ற முறையில் கொண்டாடப்படுகின்றது. இவ்வுத்ஸவத்தின் தத்வமாவது சகல உலகமக்களும் தங்களுக்குப் பிராணசக்தி யளிக்கின்ற உணவுப் பொருள்களை அசட்டை செய்யாமல் அவைகளைக் கூட்டுறவுமுறையில் விருத்திசெய்து நாடு சுபிக்ஷமாக இருக்கவேண்டிய உதவிகள் அளிப்பது அவசியம் என்பதை அறிவுறுத்துவதாகும். இதில் தெய்வஞானத்தில் சிறந்த நம் நாட்டு மக்கள் உணவுப்பொருள்களின் பிராணசக்திக்கு ஆதாரமாக உள்ள சூர்ய சக்தியையும் உணர்ந்து இந்நாளை சூரியநாராயண பூஜையுடன் கொண்டாடுவது விசேஷமாகும்.

---

தைப்பூசத்தன்றுதான் அருட்பா பாடிய வள்ளல் இராமலிங்க ஸ்வாமிகள் அருட்பெருஞ் ஜோதியில் கலந்தார். தை அமாவாசையன்றுதான் ஸ்ரீநாரதாம்சமான ஸ்ரீபுரந்தரதாஸர் ஸ்ரீவிட்டோபாவின் திருவடியையடைந்தார். இவ்விரு மகான்களைப்பற்றிய விசேஷ கட்டுரைகள் (இவ்விதழில் இடமின்மையால்) அடுத்த இதழில் வெளிவரும்.

---

# திருப்பாவைப் பாசுர அடிவரவு மாலை

ஸ்ரீ. கி. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட்.

1. மார்கழி வையத்து ஓங்கி.
2. ஆழி மாயனைப் புள்ளும் கீசுகீசென்று.
3. கீழ்வானம் வெள்ளென்று தூமணி
   நோற்று (சுவர்க்கம் புகும்.)
4. கற்றுக் கறவைக் கனைத்திளங் கனைத்து.
5. புள்ளின்வாய் கீண்டான் உங்கள்
   புழக்கடைத் தோட்டத்து.
6. எல்லே!
7. நாயகனாய் அம்பரம் உந்து குத்து
   முப்பத்து மூவரமரர்க்கு ஏற்ற
   அங்கண்மாஞாலத்தரசர் மாரி யன்று.
8. ஒருத்தி மாலே.
9. கூடாரைக் கறவைகள் பின் சென்று
   சிற்றஞ்சிறுகாலே வங்கக்கடல் கடைந்து.
   (இன்புறுவர் எம்பாவாய்)

## விவரணம்.

| | | |
|---|---|---|
| 1. மார்கழி | ... | மார்கழி மாதமானது |
| 2. வையத்து | ... | உலகத்தில் |
| 3. ஓங்கி | ... | மிக உயர்ந்தது. |
| | | (இந்த மாதத்தில்) |
| 4. ஆழி | ... | சக்கரம் ஏந்திய |
| 5. மாயனை | ... | ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய எம்பெருமானை |
| 6. புள்ளும் | ... | பக்ஷிகளும் கூட |
| 7. கீசுகீசென்று | ... | தங்களது கீசுகீசு சப்தத்தால் (அழைக்கும்.) |
| 8. கீழ்வானம் வெள்ளென்று | } | கீழ்லோகமாகிய இந்தப் பூலோகமும் கூட இருள் நீங்கி (ஞான) ஒளியால் வெளுக்க |
| 9. தூமணி | ... | பரிசுத்தமான மணி — கௌஸ்துபம் (அதாவது ஜீவாத்மா) |

10. நோற்று ... பாவை நோன்பை நோற்று வரும்,

11. கற்றுக்கறவைக் கணங்கள் } கன்றுகளையுடைய பசுக்கூட்டங்கள் (சிஷ்யர்களையுடைய ஆசார்யர்கள்)

12. கனைத்து ... ஆண்டாளுடையவும், திருப்பாவையுடையவும் பெருமைகளை) உரக்கப் பேசுவார்கள்.

13. புள்ளின் வாய் கீண்டான் } (பகாசுரன் என்னும் அசுரனுகிய) கொக்கை வாயைக் கிழித்துப் போட்ட கிருஷ்ண பரமாத்மாவும்

14. உங்கள் புழக்கடைத் தோட்டத்து } (அவரை விரும்புகிற) உங்களுடைய வீட்டின் பின்புறம் வந்து கார்த்துக் கொண்டிருக்கிருர்.

15. எல்லே! ... இது என்ன ஆச்சரியம்!

[இப்பெருமைகளுக்கெல்லாம் காரணம் என்னவென்று ஆராய]

16. நாயகனுய் ... (எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும்) அதிபதியாய்

17. அம்பரம் ... ஆகாசத்தை (அன்று திருவிக்கிரமாவதாரத்தில்)

18. உந்து ... (மேலே மேலே, தள்ளின)

19. குத்து ... பிறகு அதை ஊடுருவிய

20. முப்பத்துமூவரமரர்க்கு } முப்பத்து முக்கோடி தேவதைகளுக்கு

21. ஏற்ற ... தகுதியான

22. அங்கண்மா ஞாலத்தரசர் } அழகிய விசாலமான இப்பூமண்டலத்துக்கு அரசராய் விளங்கும் பெருமானுடைய

23. மாரி ... அருள் பெருக்கு

24. அன்று ... அல்ல.

(மற்றெதுதான் காரணமென்னில்)

25. ஒருத்தி ... ஒப்பற்றவளான ஆண்டாள் ஒருத்தியுண்டே, அவளுடைய

26. மாலே ... ஆசையே (கரை கடந்த பகவத் ப்ரேமையே)



(அப்படிப்பட்ட இந்த மாதத்தில்)

27. கூடாரை ... இதுகாறும் நம் கைக்கு அகப்படாமல், நம்முடன் சேராத அவ்வெம்பெருமானை

28. கறவைகள் பின் சென்று } பசுக் கூட்டங்களுக்குப் பின்னால் போய்க் கண்டு பிடித்து

29. சிற்றஞ்சிறுகாலே ... மிகுந்த அதிகாலையில்

30. வங்கக் கடல் கடைந்து ... அலைகடல்போல்விளங்கும் அப்பரந்தாமனை நெருக்கி (ஸம்மர்த்தித்து) அனுபவிக்க

[நாமெல்லோரும் அச்செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவோம்.]

# கோதையின் தாய்மை

ஸ்ரீ. வி. எஸ். வீரராகவன். B, A, B, T.

மென்னடை யன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூரிலே அவதரித்து, நன்றாக வாராய்ந்து ஏழேழ் பிறவிக்கும் கோவிந்தனுக்கே ஆட்செய்யும் பேருகிய பறைபெற பக்தியாற்றினை விளக்கிடும் திருப்பாவை யென்னும் சங்கத் தமிழ் மாலையும், குழல்மணம் மிக்குநிற்கும் சூடிக்களைந்த பூமாலையு மரங்கற்குச் சூட்டிய ஆண்டாளின் பெருமையினைப்பேசு; பேசுவையேல், 'வேங்கடவற்கு விதி' என்ற இம்மாற்றம், நீகடவாதிருக்கவருள் நல்குவன்; என்ருர்...திருப்பாவைக்குத் தனியனிட்ட உய்யக்கொண்டார்.

(வைதேசிக...மாத்ருசாம்தே.) என்றவாறு அஜ்ஞர்களாகிய நம்போலொத்த சேதனர்கள் ஏங்கியிராமல் அன்னை ஆண்டாளையேத்தி, உய்யக்கொண்டாரின் ஆணை பேற்று, நற்பயன்பெற, ஆசாரியஸார்வபௌமரான ஸ்ரீவேதாந்ததேசிகன் கோதாஸ்துதி என்னுமோர் தோத்திரக்ரந்தம் அருளியுள்ளார். பஹுகுணரமணீயமானதும் என்றென்றும் அரங்கர்தம் திருவடித்தாமரையிணையிற் சேவகமும் அருளவல்லதும், வேதாந்தாசாரியரின் பக்திவிகாஸத்தால் உத்பன்னமானதுமான கோதைத்துதியில் துவக்கம் முதல் முடிவளவும் தாய்க்கே உரித்தான, க்ஷமை (பொறுமை), கருணை(அருள்), வாத்ஸல்யம்(அன்பு) இவை

களுக்கு இருப்பிடமாகச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியைப் புகழ்ந்துள்ளார். (ஸாக்ஷாத்க்ஷமாம் கருணையாகமலாமிவான்யாம்), (ஸாந்த்ர வாத்ஸல்ய ஸிந்தும்) என்பவைபோன்ற மணிமொழிகளாலே, (க்ருஷ்ணாம்புதம்) பொழியும் அருள் மழைப்பொழிவே உருவாகி நின்ற கோதை மாபாதகம் புரிந்து மயங்கிநிற்கும் சேதனர்களை உய்விக்க அன்னை, தன் குழவி ஸ்தனத்தைக் கடித்திடினும், அதனைக் கடியாதே பாலூட்டுமாப்போலே, சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே, குற்றம் களைந்து அருள் பொழிவாய், என்று கோவிந்தனைப் பிரார்த்திப்பதை மனதிற்கொண்டு ரஸமாக

> ஜாதாபராதமபிமாமநுகம்ப்ய கோதே
> கோப்த்ரீ யதி த்வமஸி யுக்தமிதம் பவத்யா: |
> வாத்ஸல்ய நிர்பரதயா ஜநநீ குமாரம்
> ஸ்தன்யேன வர்த்தயதி தஷ்ட பயோதராபி ||

என்னும் ச்லோகத்தைப் பணித்தார்.

குழவிக்கு இனிப்புக்காட்டி நடைபயிலுவிக்குமாப்போலே, நோற்க, குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களாகிய ஆநிரையும் நீங்காத செல்வமும் இட்டும் என்றுபேசி, அவ்வழிநிற்கும் சேதனங்களை ஓங்கி உலகளந்த உத்தமன்பேர்பாட இசையச்செய்து, பின்னும், சிற்றம் சிறுகாலே அவர்தம் குடிக்கும்போய் நோன்புக்கு அழைக்குமளவில், புட்கள் சிலம்பியதையும், புள்ளரையன் கோயில் வெள்ளை விளிசங்கின் பேரரவத்தினையும் கேட்காதவன் போன்று துயிலுமவனையும் பள்ளிக்கட்டிற் கீழே நின்று, 'எழுவாய்! எழுவாய்! என்று கதறியும், ஊமைபோலும், செவிடுபோலும், அபிநயித்துப் பெருந்துயில் பட்ட அனந்தலுடையானையும் பனித்தலைவீழ வாயிற்படி கடந்தவரை மதியாது கிடக்கும் செல்வச் செருக்குடையானையும், வீறுபேசும் வீம்புக்காரியையும், படுக்கைவிட்டு எழாமலே இல்வாய் நிறுத்தி வாதம்பேசுமவளையும் கண்டு சிறிதளவேனும் சீற்றமுறாது அவர்தம் குறை நோக்கி, அன்புமிக்கு, பொறுமையாக, அவர்களை உய்ய வேண்டும் என்னும் அருள்நோக்கு பெருகும் திருப்பாவை அனுஸந்தானத்திலேயிறே ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் கோதாஸ்துதியில் கோதையின் பெருமையைப் பேசுமளவில் அவள் தம் தாய்மையை விரித்தார்! ★

# காமற்கென் கடவேன்.

ஆசார்ய ஸ்வாமி நேமிநாத், நைமிசாரண்யம்

உலகில் மேம்பட்ட நன்னெறி நான்கென்பர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்மறைகள் கூறும். நான்கினும் கண்ணனுக்கே ஆமது காமம். அறத்தின் பயனும் ஒண் பொருளின் பயனும் அன்ன திறத்தே ஆதலால், அவைகளை ஒழித்து, வீடு பயக்கும் காமமே சேமமெனத் தெளிந்த பெரியோர், "காமத்தின் வழிமுறையே நிற்றும் நாம்" என்பர். இங்கு கூறப்படும் காமம் என்பது, இன்னமுதெனத்தோன்றி கொடுவன் குழியினில் வீழ்க்கும் சிற்றின்பக் காமமன்று. இங்கு, காமமாவது, பாஹ்ய பதார்த்தாநுஸந்தான க்ஷமான்றிக்கே விஷயங்களில் நின்றும் அந்தக்கரணம் நிவ்விருத்தமாய், மனதிற்கு அவனே விஷயமாய், அவன் குணங்களையே அநுபவிக்கை. அதாவது, சரீரியானவனை ஞானத்திற்கு விஷயமாக்கி தன்னை மறக்கை. வீடு பயக்கும் காமமாய் மறைப்பெருந் தீ வளர்த்திருப்பார் வரு விருந்தை அளித்திருப்பார் சிறப்புடைய தோதவத்தித் தூய்மறையோர் விரும்பும் பகவத்காமமென்பது தெள்ளத் தெளியக்கிடக்கின்றது. மானிடப் பிறவி பெற்ற இருபாலர்க்கும் பொதுமையே ஆகும்.— ஆதலால், மெய்ப்பொருள் காணவிழையும் ஆழ்வார்களுக்கும், அவர்கள் செயலை விஞ்சிநிற்கும் தன்மையளான ஆண்டாளுக்கும், பிற ஆசிரியர்களுக்கும் பக்தியின் பெருக்கால் உண்டாகும் பேரன்பு, பகவத் காமமெனப்படும். உயிர்கள், இறைவனைக் கொள்கொம்பாகப்பற்றி, கோல் தேடியோடும் கொழுந்துகள் போன்றனவாதலின் மக்கட் பிறவியில் தோன்றிய அனைவருக்கும் இயற்கையாகவும், அறிவின் பண்பினாலும், அருளாலும் எய்தக்கூடியதாகும். ஆண்டாள் நின்ற நிலையிலே பேசுவதை, ஆழ்வார்கள் நிலைமாறிப்பேசுவர்கள். இத்தகைய பேரின்பக்காதலை வேறிடத்தில் செலுத்தமுடியாது. இறைவன் ஒருவனுக்கே உரிமையுள்ளதாகும்.

திருவள்ளுவர் தாம் இயற்றிய முப்பாலில் காமத்துப் பாலைக் கடையிலிட்டுள்ளார். அறம் பொருள் பேசியவர், காமத்துப்பால் வாயிலாகத் தம் உள்ளக் கிடைமையும், தமக்கும் தம்மைப் பெறுவதற்கும் இறைவனுடைய உபாயங்களைப் பரக்க வெளியிட்டுள்ளார். தற்காலத்திலும் பலர், இந்த உரையாடல்களை மனித இன்பமெனக் கருதி மயக்க

முற்றிருக்கின்றனர். இது தலைமகன், தலைமகள் காமமுமன்று, ஆண், பெண்விகாரங்களால் ஏற்படும் காமமுமன்று. அன்றி, வள்ளுவர் தம்முள்ளக்கிடையில் தமக்கும், தமது மனைவிக்கும் நிகழும் காமமுமன்று. பின் எதைப்பற்றியது எனின், மூதாவியில் தடுமாறு முயிர்க்கும், அந்தமில் பேரின்பத் திறைவனுக்கும் உள்ள உறவுமுறையாகும். திருக்குறளுக்கு உரை கண்டோர் அனைவரும் மருண்டே மானிடக் காதலாகக் கொண்டுள்ளார்கள். உரை கண்டோரில் பேரறிஞரான பரிமேலழகியார், காமத்துப்பால் உரையில், இம்மையே பயப்பதாகிய இன்பமென எடுத்து, அறம், பொருள், இன்பமென வடநூல் வழக்குப்பற்றி புணர்ச்சி பிரிவென — இருவகைப் படுத்தி களவியல் கூறுமிடத்து தமிழ் நூல்களோடொப்ப, "பிணி மூப்பிறப்புகளின்றி எஞ்ஞான்றும் உருவும் குலமும் ஒத்தவர்களாய்ப் புணர்வது" என்றார். இவர் கூறிய உரைநயம் அறிவினால் குறைவில்லாதவர்க்கும், பகவத் காமமும், பகவத் விஷயமும் அறிந்தார்க்கே புலனாகும். உரைநயம் காண்போர் பலரும், பரிமேலழகியாரைத் தம் உரையில் இடர்ப்பட்டு, காமத்துப் பாலுக்கு உரிய உரை கூறினாரல்லர் எனப்பேசுதல்பேதமையாகும். "மலரின் மெல்லிது காமம்" என்ற குறளிலும் "வேட்டபொழுதின்" என்ற விடத்திலும் பொதிபொருள் காணலாகும்.

இனி, பரிமேலழகியார் "களவாவது," என்று எடுத்து, "பிணி மூப்பிறப்புகளின்றி எஞ்ஞான்றும்" என்ற உரை பொருள் பொதிந்துள்ளது. "பிறப்புபிணி மூப்பிறப்பற்று" என்று பெரியாரும் பணித்தலால், ஒளிக்கொண்ட சோதியுமாய் உடன்கூடுவது என்றே முடித்தலால், பரிமேலழகியார் உள்ளக்கிடையில், இறை நிலையும், உயிர் நிலையும் நன்றே கருதி பயன் தூக்கியுள்ளார் என்பது போதரும். இஃதின்றேல், இக்காமத்துப்பாலில் "அவர், அவர்" என்றும் "தண்ணந்துறைவன்" "பன்மாயக்கள்வன் பணிமொழி". "தாமரைக்கண்ணன்" "காணான்கொல்காதலர்" என்ற இடங்களெல்லாம் நூலோடு சேராததாகும். பொருளதிகாரத்தில் "பெண்வழிச்சேறல்," "வரைவின் மகளிர்" என இரண்டு அதிகாரங்கள் கூறுதலால், ஓர் உத்தமத் தலைவன் தலைவிகட்கு, "காமத்துப்பாலில், களவியல், கற்பியல்" என வகுத்து வைத்தது, சேருமோ என்று சங்கிப்



பார்க்கு இடர் பெரிதாகும். இருமையும் பயப்பதாகிய பொருளதிகாரத்தில், "இறைமாட்சி"யும் ஏனைய எண்ணிறந்த குணங்களையும் கூறிய பொய்யாமொழியார், களவியல், கற்பியலமைத்து "வரைவின் மகளிரையும்" கூறினது ஏற்றே எனின், அது முற்காலத்தில் தமிழகத்தில் தமக்கென்று சில மனைவியரை மணந்தும் ஆடவர் பரத்தையர் பாலும் செலுத்திப் போந்த குற்றத்தைத் தவிர்க்கவே அமைத்தார் என்றும் பேசுவர்! இது உலகத்தார் கொள்ளும் இறை மாட்சிக்குச் சேராததும், பயனற்றதுமாகும். உண்மை எது எனின், "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கிறை" என்றவர், "கல்வியின் பயனாக வாலறிவன் நற்றாள்தொழு" என்றும் போதித்தவர், "எண்ணென்ப" என்றவிடத்து எழுத்தும் எண்ணும் அறமுதற் பொருளைக் காண்டற்குக் கருவியாக அமைத்துள்ளது வியப்பினும் வியப்பேயாகும். ஆதிபகவன் முதலொழிய அல்லாதன எண்ணுபவர் அல்லர். நூலையும் நூலின் நுட்ப உரைகளைக் கண்டு கேட்டுத்தெளிதல்சாலவும் நன்று. உலகியல் அரசர், மானுடர், அணங்குகள், ஆய்மயில்கள், என்று காமத்துப்பால் தலைமகன், தலைமகளைக் கொள்ளுவோமாகில், பேரிடரில் மூழ்கி விபரீத உணர்ச்சிகளே காண்போம். "பரத்தையர் புணர்ச்சி" என்பது இறைவன் ஒருவனுக்கே பொருந்தும். அது இறைவன் ஒருவனும், உயிர்கள் பலவாய உளவானும், எல்லா உயிர்கட்கும் ஒப்ப அருள் சுரப்பவனாதலால், பிற உயிர்களிடத்து அன்பு செய்வதை "வரைவின் மகளிர்" என்றும், பரத்தையர்சேர்தல் என்பதும் பெற்றும். இது, "மின்னிடை மடவார்கள்', என்ற பெரியார் பாசுரங்களும் அதற்கு வியாக்கியானங்களும் சேவித்தவர்கள் தெளிவுற்ற சிந்தையராவர். ஏனையோர் முகத்திரண்டு புண் கொண்டு பார்த்தால் யாம் செய்வது என்?

"மலரின் மெல்லிது காமம்," காமம் என்பதும் பக்தி என்பதும் மலரினும் மெல்லிதும், ஏதோ ஒரு சிலர் அதை அறிவார்கள், பலரல்ல என்பதனாலும் ஒரு காலத்தினைக் கண்ணே அதற்கேற்ற இடத்தில் பெறவேண்டுமென்பதனால், இறைவன் அருள் "செவ்விதலைப்படுவார்" என்றார். ஆனையின் முன் துயரம் தீரப் புள்ளூர்ந்து வந்து மலரின் செவ்வி மாறாதே கொள்வதேபோல், இறைவனும் காலம்

இடம் அறிந்து, செவ்விமாறாதே கொள்வன் என்பது கருத்தாகும். காமத்தை மலர் எனக் கூறுவது ஓராயிர இடமுள்ளது. "தூவியம் புள்ளுடை தெய்வ வண்டு துதைந்த எம்பெண்மையும் பூவிதாலோ" என்றார் பெரியாரும். ஆழ்வார் திருமகளும், பூவைப் பூவண்ணனை மணிவண்ணனைத் தனக்கு வகுத்திடென்று காமவேளைக் கழலிணைப் பணிகின்றாள். சுனையில் தங்கு செந்தாமரைகளைச் சரணாகப் பற்றி மாலிருஞ்சோலைக் கருமுகிலின் திருவுருவை நினைந்து நைகின்றாள். காமம் மலரினும் மெல்லிது என்றதால் யார்க்கும் இந்நோய் அறியலாகாது. "சிலர்" என்பது "தாம் வீழ்வார் தம் வீழப்பெற்றவர்" அறிவரேயொழிய பிறரல்ல என்பது நுண்ணிய பொருளாகும். இது இறைவனுக்கும், மூதாவியில் தடுமாறும் உயிர்கட்குமே பொருந்தும். பேதைமை என்னும் வித்தில் பிறந்து, மரணமே கனிந்துநிற்கும் சில்வாழ்நாளுடைய ஐம்புல மக்கட்காகா என்பது ஒருதலை. இனியாயினும், வள்ளுவர் நூலுக்கு உரைகாண விழைவோர் அகக் கண்கொண்டு, புறவிருளைத் தள்ளி, கற்ற கல்வியின் பயனால் ஊடலிற் தோற்று, காமத்தின் இன்பப்பயனெய்திக், கூடிமுயங்கப் பெறுவரென்பது, "தீரவிரும்புண்டநீரதுபோல ஆருயிரை ஆரப்பருக ஆராவமுதானாயே" என்பதோடொக்கும்.

**கார்தண்** கமலக் கண்ணனென்றும் நெடுங்கயிறு படுத்தி, தன்னை ஈர்த்துக்கொண்டு விளையாடும் ஈசனை "மாதவன் என் மணி" என்று அணைத்து மகிழ்வுறுவது போல், சிலர் இதன் செவ்வி தலைப்படுதல் கூடும். முற்றில்லாத பிள்ளையாயும் முலைபோந்திலாத காலத்தே, மலரின் மெல்லிய காமம், நகை மொக்குளுள் தோன்றி, மாலை மலரும் நோயாக மாறுவதையே, ஆழ்வாரும் "முழுமுற்றும் போந்தில" என்ற பாசுரத்தில், ஆண்டாளைக் குறிப்பிடுவதுபோல் அமைந்துள்ள வியப்பைக் கண்டு மகிழத்தக்கது. "பொலிக பொலிக" என்ற பாசுரத்தின் பின்னால் வரும் "கடல் வண்ணன் பூதங்கள்" கண்டுகளிக்கலாமாயின், மேற் கூறிய பாசுரத்தில் ஆண்டாள் வைபவம் சொல்லி வைத்தாரென்றால் விரோதமுளதோ? ஆர்க்கும் என் நோய் இது அறியலாகாது, கார்க்கடல்வண்ணன் என்பான் ஒருவன் கைகண்ட யோகம் தடவத்தீரும், மற்றவர்கட்கு அறியலாகாது என்று பெருமிதத்தோடு



பேசும் சொற்கள், ஏடி இதுவென், என்னை நைவித்து எழில்கொண்டு அகன்றவன், தன்னையும் நோக்கி அல்குலும் நோக்கி ஏந்திளங்கொங்கையும் நோக்கும் என்ற வாசகங்களோடு ஒக்கும்.

இதுகாறும் கூறியவற்றால், அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள் நிலையையே வள்ளுவர் தாமும் தமது காமத்துப்பாலில் நிறம்படப் பொதித்தார் என்றால் பேசுவதற்கு இடமுளதோ! மருள்கொண்டார்கள் தாம் கேவல மானுட உணர்ச்சி இன்பங்களைப் புணர்த்தி நூல்களின் செவ்வி தலைப்படாமல் திகைப்பர்கள்.

இலக்கியம், தத்துவம், பக்தி, பண்ணிசை, சரித்திரம், வாழ்க்கைச் சித்திரம், கற்பனைக் கதைகள், தொடர் நாவல், பாலர் மோகினி......முதலிய பல வகைத் தமிழ் விருந்து அளிக்கும் மாதப்பத்திரிகை

ஜகன்மோகினி

32-ம் ஆண்டு, 1965.

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை

தனிப்பிரதி அணா 4.
வருடச் சந்தா ரூ 3.

ஒரு முறை விஜயம் செய்து ஆதரியுங்கள்!
அழகை அதிகரிப்பது ஆபரணங்களே!
உத்திரவாதமுள்ள, நவீன தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் கிடைக்குமிடம்:

ஜோதி
ஜ்வல்லரி மார்ட்

No. 1, பேயாழ்வார் கோயில் தெரு,
(ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி கோயில் எதிரில்)
திருவல்லிக்கேணி, மதராஸ்-5

ரேடியோ ரிப்பேர் செய்யவும், ரேடியோ வாங்குவதற்கும், கச்சேரி, மீட்டிங் முதலியவைகளுக்கு ஒலி-ஒளிபெருக்கி அமைக்கவும், (PHONE: 86109)

ஸ்டாண்டர்ட் ரேடியோ அண்டு எலக்ட்ரிக் கம்பெனி

26, பைக்ராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி.

# மாதர் சங்கமும் மாதவனும்

(ஸ்ரீமதி ரங்கப்ரியை, வெங்கடாபுரம்)

மாதவனின் மனம் மட்டற்ற மகிழ்ச்சியுற்றது. அவரது மதிவதனம் உதயபாஸ்கரனைக் கண்ட பங்கயமலர்போல் மலர்ந்தது. "அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே" என்று ஆழ்வார் உகந்து கூறும்படியாகிய மாதவனின் ஆராவமுதமாகிய அழகு, புறவெள்ளமிட்டோடியது. அதையே அனவரதமும் வேண்டிநின்ற மாதர்கள் அவ்வாராவமுதத்தைப் பருகிப்பருகித் தங்கள் அஞ்சனம் தீட்டியகண்களை, அஞ்சன வண்ணனைக் கண்டதினால் ஒன்று நூறாகப் பெருக்கிக்கொண்டார்கள். மாதவா! மணிவண்ணா! உன் கருணைக் கடல்போன்ற திருக்கண் நோக்கம் தான் என்ன மகிமை வாய்ந்தது! என்று மாதர்களின் மனம், இதுகாறும் தங்களை உபேட்சித்த திருவுள்ளம் இன்றாவது தயாசமுத்திரத்திற்கு இடமளித்ததேயென்று வியந்துகொண்டாடிற்று. மாதர்களின் உள்ளம் தங்கள் காரியம் கைகூடப்பெற்றதினால் சொல்லொணாக் குதூகலத்தில் திளைந்தது. அவர்கள் யாதர் சங்கம் ஸ்தாபித்து அதன் பயனாக மாதவனைக் கானமாரியால்பாடித் துதித்து தாங்கள் பெற்றமேன்மையை இத்தகையதென்று கூறவும் எம்மால் சாத்தியமாகுமா? இகபரசாதனங்களை வெகு எளிதில் பெற்றுக்கொண்ட மாதர்களின் மகிமையை ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேடனாலும் கூறமுடியாதென்றால் நாம் எவ்விதம் புகழ்வது!

மாதவனுக்குப் பாமாலையும் பூமாலையும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் பொற்பாவை மடவன்னம் மாதவனது அனுமதியின்பேரில் குன்றாத வாழ்வாகிய வைகுந்தவான் போகத்தைவிட்டு, மண்ணுலகமோகத்தில் அதி ஆவலுற்றவளாய் தன்னோடொத்த மாதர்களை ஈடேற்ற நினைத்து, தான் ஒரு வழிகாட்டியாய் நின்று மாதர் சங்கம் ஸ்தாபித்து அத்தகைய சத்சங்கத்தினால் தாங்களடைந்த மேன்மையையும் உலகோர் இன்றைக்கும் சத்சங்கத்தாலும் பயனுறுமாறு செய்திட்ட புனித த்யாகத் தொண்டின் தூய்மையை நாம் எப்படிக் கூற இயலும். பிராட்டி, ஜானகியாயுதித்து ராகவனை மணந்தாள்; ஸ்ரீ ருக்குமணியாய் உதித்து ஸ்ரீ கண்ணபிரானை மணந்தாள். அப்படியில்லாமல் நம்மைப்போல் மானிடமங்கையாயுதித்து தன் தந்தையிடம் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ



கில்லேன்" என்று உறுதியாய்க்கூறிவிட்டு "மற்றொருவர்க்கென்னை பேசலொட்டேன் மாலிருஞ் சோலைமாயவர்க்கல்லால்," என்று சபதம் செய்தாள். இத்தகைய மேம்பாடுடைய மாமணி இறுதியில் என்ன செய்தாள்; மாபெரும் மாதர் சங்கம் கூட்டினாள். அத்தகைய சத்சங்கத்தின் பயனாக அருந்தவ முனிவருக்கும் அரிதில் காணக்கிடைக்காத அருந்தவப் பேறாகிய மாதவனை அதி சுலபத்தில் கண்டு, தங்கள் அபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டார்கள்.

கோகுலத்தில் ஆயர் மங்கையர் கண்ணனை அடைவதற்கு காத்யாயினி விரதம் அனுஷ்டிப்பதற்கு ஓர் மாதர் சங்கம் கூட்டியே விரதத்தை முடித்துக் கண்ணனையடைந்தார்கள் என்றதை யறிந்த பொற்கொடியாள் தானும் அத்தகைய சத்சங்கத்தின் வாயிலாகவே மாதவனைப்பெற யத்தனித்து காரியம் கைகூடப் பெற்றாள்.

இறுதியில் தானிருந்த வில்லிபுத்தூரையே ஆயர்பாடி கோகுலமாக மனதில் நினைந்து ஆங்கு ஆலயத்திலிருக்கும் வடபத்திரசாயியாகிய கடவுளை கண்ணனாக மனதில் பாவித்து தன்னோடொத்த சிறுமிகளைச் சேர்த்து ஓர் சங்கம் ஸ்தாபனம் செய்து அச்சங்கத்தின் சார்பாக மாதவனை அடைகின்றான்.

ஹே! மாதவா! ஒரு மாதைக் கைப்பற்றுவதற்கு நீ பட்டபாடு நாங்களறியாததா? கடல் கடைந்து கஷ்டப்பட்டு பெண்ணமுதத்தை நீ கைக்கொண்டாய்! வெறும் உப்புச் சாற்றை தேவர்களுக்கீந்தாய்; நீ பாடுபட்டது முழுதும் பெண்ணமுதத்திற்கே. அத்தகைய மாதை மார்பில் தரித்தபிறகே உனது தேஜஸ் கோடிசூரியப்பிரகாசமாயிற்று. இறுதியில் மாதவன் என்ற திருநாமமும் கிடைத்தது. அத்தகைய உத்தம மாதர்கள் உன்னைத் தேடி ஐந்து லட்சம்பேர் வந்திருப்பதைக்காண உனது மகிழ்ச்சிக்கு எல்லை கூற முடியுமா? மாதவா! நீ எங்களைத் தேடியலைவதுபோக நாங்கள் உன்னைத் தேடியலைந்தோம் என்பதை நீ யறிந்துக் கொள்ளென அறிவுறுத்துகின்றார்கள். எங்கள் காரியத்தைத் தவறாமல் முடித்துவை என்றுகூறுகின்றார்கள். மாதவா! கேசவா! ஒரு இல்லாளில்லாத இல்லம் பாழ் என்று கூறுவதுண்டு பெரியோர். அத்தகைய மாதர் ஐந்து லட்சம்பேர்கூடி இச்சங்கத்தின்

சார்பாக உனக்கு வந்தனை உபசாரம் கூறுகின்றோம் இச் சங்கத்தமிழ் மாலையை முப்பதும் தப்பாமல் பெற்றுக்கொண்டு இதன் பயனை எங்களுக்கு நற்கதியளித்ததுபோல் பிறகு இச்சங்கத்தமிழ் மாலையை யார்யார் சத்சங்கம்கூடி முப்பதும்தப்பாமல் கூறினாலும்சரி, ஒரு பாட்டுச் சொன்னாலும் சரி; அல்லது திருப்பாவை ஆண்டாள் பாடினாளென்று ஒருவார்த்தை கூறினாலும்சரி, அவர்களுக்கும் இத்தகைய உத்தம பலனை யளிக்கவேண்டும்! என்று கூறி வேண்டிக்கொண்டு நம் போலியருக்கு அத்தகைய சத்சங்கத்தின் சார்பாக கோதைநாயகி உறுதிப் பத்திரம் யீந்தாள். சத்சங்கத்தின் பலன் இறுதியில் மாதவனும் மனமகிழ்ந்து மாதர்களை அஞ்சேலென்று அபயமளித்து ஆதரித்தார்.

---

கரூர், கட்டி வைத்திய நிபுணர்
பண்டிட் P. S. ராம சர்மா அவர்களின்

**“சக்தி சஞ்சீவி”**

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு கிகாற்றது!
குணத்தில் சிறந்தது! விலையில் குறைந்தது!!
சக்தி சஞ்சீவி 15 நாள் மருந்தின் விலை:
(1) சாதாரண ரகம் (ஆரம்பக்கட்டிக்கு) ரூ. 1—8—0
(2) உயர்ந்த ரகம் (முற்றின கட்டிக்கு) ரூ. 3—0—0

**ஸ்ரீ சக்திவிலாஸ் வைத்தியசாலை,**
கரூர். (திருச்சி ஜில்லா.)

எமது டாக்டர், பிரதிமாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை சென்னை விஜயம் செய்வார். நேரம் தங்குமிடம், நேரில் அல்லது தபால்மூலம் அல்லது டெலிபோன் கரூர் நெ. 87 மூலம் தெரிந்துகொள்ளவும்.

---

A Bright Board Guides Your Business.

**The Star Painting Works**

SPECIALISTS IN
ENAMEL SIGN BOARDS,
105, C. N. KRISHNASWAMY ROAD,
TRIPLICANE, MADRAS-5.

# ஸ்ரீ ஆண்டாள் (உள்ளுரை)

என். சுப்பநாராயணன் பி.ஏ., போர்ட் டிரஸ்ட், மதராஸ்

சக்தியை உபாசிப்பவர்களை சாக்தர் எனக் கூறுகின்றோம். அவ்வாறே பகவானை உபாசிக்கின்றவர்கள் எல்லோரையும் பொதுவாக பக்தர்கள் என்கின்றோம். உபாசித்தல் என்ற பதத்திற்கு அருகாமையில் இருத்தல் என்று பொருள். ஆகவே, பக்தர்கள் எல்லோரும் மற்ற சாதாரண மக்களைக் காட்டிலும் பகவானிடம் நெருங்கிய சம்மந்தம் கொண்டுள்ளனர். அவர்களுடைய லக்ஷ்யம் பகவானின் அம்சமான தங்கள் ஆன்மாவை பகவானுடன் ஐக்யமடையச்செய்தலே. இந்த லக்ஷ்யத்தின்பால்கண்ணும் கருத்துமாக இருந்து உலக வாழ்க்கையின் மற்ற சுக துக்கங்களை மறந்து பகவத்தியானத்திலும், சேவையிலும் ஆழ்ந்து கிடப்பவர்கள் ''ஆழ்வார்கள்'' எனப்படுவர்.

பகவான் விஷ்ணுவின் தியானத்தில் ஆழ்ந்துகிடந்த ஆழ்வார்கள் நம் தமிழ்நாட்டில் பன்னிருவர். இவர்கள் எல்லோரும் மஹாவிஷ்ணுவின் சக்திஸ்வரூபங்களான பூதேவி, ஸ்ரீதேவி, சங்கு, சக்ரம் முதலியவர்களின் அவதாரமாகவே கருதப்படுகின்றனர். இவ்வாறு பகவத் சக்தியின் சைதன்யமய மூர்த்தியாக விளங்கியதாலேயே மானிடரூபத்தில் இருந்துவந்த இந்தப் பன்னிரண்டு ஆழ்வார்களின் நாமத்தை இன்றும் நாம் வணங்கி வருகின்றோம். 'கோதை' என்றும் 'ஸ்ரீ ஆண்டாள்' என்றும் 'சூடிக் கொடுத்த நாச்சியார்' என்றும் பூஜிக்கப் பட்டு வருகின்ற பெண்மணியும் இவ்வாழ்வார்களில் ஒருத்தியாவள். பெண்ணின் பெருமையை விளங்கச் செய்த கோதையார் பூமாதேவியின் சக்தியம்சம் எனக் கூறப்படுகின்றது.

கோதை என்ற ஸ்ரீ ஆண்டாளின் திவ்ய சரித்திரம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே இதைப்பற்றி விரிவாகக் கூறவேண்டியதில்லை. விஷ்ணு சித்தர் என்ற விஷ்ணுவின்பால் சிந்தனைசெய்து வந்த மகானுக்கு வரப் பிரஸாதமாகக் கிடைத்த பெண் 'கோதை' என்பவள். தனது தகப்பனார் பகவானுக்காகக் கட்டி வைத்திருக்கும் மாலையை தான் அணிந்து அழகு பார்த்து அம்மாலை தனது நாதனாக வரிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனுக்கு அணிய லாமா என்று பரிசோதித்துப் பார்த்து அனுப்பியவள் சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற கோதை. பகவானை

நாதனை வரித்து அவருடன் ஒன்று சேர்வதற்காக அல்லும் பகலும் ஓயாமல் ஆழ்ந்த சிந்தனையில் உள்ளம் உருகி, கனாக்கள் கண்டு, இறுதியில் ஆண்டவன் உள்ளத்தை ஆட்கொண்டவள் ஸ்ரீ ஆண்டாள் என்ற ஆழ்வாராகும். எல்லோரையும் ஆட்கொள்ளும் பகவானை பக்தன் ஆட்கொண்டுவிடுகின்றான். இதுவே பக்தனின் பிரபாவம். பகவான் பக்தனின் அடிமை என்ற ரஹஸ்யத்தை எடுத்துரைப்பவையே பக்தர்களின் சரித்திரங்கள்.

இந்த ஒரு ரஹஸ்யத்தைத்தவிர மற்ற ரஹஸ்யங்களையும் அறிந்து கொள்வதே இதிஹாஸ புராணங்களிலிருந்து பெறக்கூடிய பூர்ண லாபமாகும். மனிதன் பெறக்கூடிய ஞானம்மூவ்வகைப்படும். சாதாரண பூலோகசம்பந்தப்பட்ட ஞானம் ஆதிபௌதிகம் என்றும், தெய்வ அம்சங்களாகக் காணும் ஞானம் ஆதிதைவிகம் என்றும், ஆத்மார்த்தமாக நோக்கும் ஞானம் ஆதி ஆத்மீகம் என்றும் கூறப்படுகின்றன. உதாரணமாக, ஸ்ரீ ராமரை தசரதன் என்ற ஒரு அரசனின் புதல்வன் என்ற மனோபாவத்துடன் இருப்பது ஆதி பௌதிக ஞானம்; ராமனை ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரமாகக் கருதுவது ஆதிதைவிக ஞானம்; இத்துடன் நில்லாமல் தசரதன் 'மனதா'காவும், அவன் மூன்று மனைவிகள் முக்குணப் பிரகிருதிகளாகவும், அவர்களுக்குப் பிறந்த நான்கு புதல்வர்களும் முக்குணப்பிரகிருதியின் ஸம்பந்தத்தால் மனதில் தோன்றும் ஞானம், விவேகம், வைராக்யம், தன்னடக்கம் என்ற நால்வகை ஆத்மரக்ஷண சக்திகளாகவும் கொள்வது ஆத்யாத்ம ஞானமாகும். இவ்வாறே ஸ்ரீ ஆண்டாளின் சரிதத்திலும் இம்மூவகைப்பட்ட ஞானத்தைப்பெற முயல்வோம்.

உலகின் பரிணாமகதியில் மனிதன் புத்தி என்ற ஆறுவது அறிவைப்பெற்று முன்னணியில் நிற்கின்றான். இம் மனிதர்களிடையே சில மக்கள் தோன்றி அதிமானுடச் செயல்களைச் செய்கின்றனர். அவர்களை மகான்கள் என்றும், பக்தர்கள் என்றும் பெருமைப்படுத்தி மகிழ்ச்சியடைகின்றோம். அத்தகைய பக்தர்களுள் ஒருத்தியாக ஸ்ரீ ஆண்டாளின் பூவுலக வாழ்க்கையைக் கருதுவது ஆதிபௌதிக நோக்காகும்.



அத்துடன் ஸ்ரீ ஆண்டாள் சாதாரண மானிடப்பிறவி அல்ல. தெய்வீக சக்தியின் அவதாரம் என்ற மனோபாவத்துடன் அவளை தெய்வமாகக் கொண்டாடி வணங்கி வருவது ஆதிதைவீக நோக்காகும். இந்த அவதார விஷயமாக சற்று கவனிப்போம். ஸ்ரீ ஆண்டாள் பூமாதேவியின் அம்சம் என்றும் அவள் தன் நாதனை வரித்தது மஹாவிஷ்ணுவின் வைகுண்ட மூர்த்தியாக விளங்கிய ஸ்ரீரங்கநாதனும் ஆவர் என்றும் அறிகின்றோம். இவ்வாறு ஏற்பட்ட சம்பவங்களுக்கு புராணங்கள் கூறும் காரணம் விசேஷகரமானது. வராஹ அவதாரத்தில் மஹாவிஷ்ணுவானவர் பூமாதேவியைப் பாதாளத்திலிருந்து மீட்டுவந்தார். அதனால் சந்தோஷமடைந்த பூதேவி விஷ்ணுவை தியானிப்பதில் எம்முறை சிறந்தது என்று வினவ, விஷ்ணுவும் அழகிய புஷ்பங்களால் அலங்கரித்து பூஜிப்பதையே நான் விரும்புகின்றேன் என்று கூறினார். அவ்வாறு செய்ய விரும்பிய பூமிதேவி பிற்காலத்தில் பூங்கோதை என்ற ஸ்ரீ ஆண்டாளாக விஷ்ணு சித்தர் என்ற பக்தனுக்கு குழந்தையாக வளர்ந்து வந்தாள். இவளுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்ய ஸ்ரீ ராமாவதாரத்தில் விபீஷணனுக்கு ஞாபகார்த்தமாக அளிக்கப்பட்ட விஷ்ணுவின்மூர்த்தியானது ஸ்ரீரங்கத்தில் விபீஷணனால் வைக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனாக விளங்கி ஸ்ரீஆண்டாளின் மணமாலைகளை ஏற்றுக்கொண்டார். இந்த இரு புராணக்கதைகளும் ஸ்ரீ ஆண்டாளின் அவதார ரகஸ்யத்தை ஒருவாறு விளக்கி நமது ஆதிதைவீக நோக்கை பலப்படுத்துகின்றது.

இனி இவ்வரலாற்றுகளில் உள்ள ஆத்மலாபம் அளிக்கவல்ல ஆதிஆத்மீக ரகஸ்யத்தை அறிய முயல்வோம். விஷ்ணு என்ற பதம் ஸர்வவ்யாபக தத்வமாகிய ஆகாச தத்வத்தைக் குறிக்கின்றது. இந்த ஆகாசதத்வம் ஒவ்வொரு மானிடனின் உள்ளத்திலும் சிதாகாசமாக விளங்குகின்றது. இதுவே விஷ்ணுசித்தர் என்ற பக்தனின் ரகஸ்யமகிமை. பூமியானது கந்தம் அல்லது வாஸனா தத்வமாகக் கருதப்படுகின்றது. இந்த வாஸனா தத்வத்தை அது தன்னிடத்திலிருந்து தோன்றும் எண்ணற்ற செடிகொடிகளின் புஷ்பங்களின் வாஸனைகள் ரூபமாக தன் நாதனாகிய விஷ்ணுவுக்கு சமர்ப்பிக்கின்றதே. ஆகவே இந்தப் பூமியே புஷ்பம்போல் மெல்லிய மேனிபடைத்து

தன் நாதனுக்கு புஷ்பமாலைகளைச் சூடிக்கொடுப்பதில் நாட்டங்கொண்ட பூங்கோதையாகத் தோன்றுகின்றாள். அவள் விஷ்ணுசித்தனின் புதல்வியாக விளங்குவது மனிதனின் உள்ளமாகிய சிதாகாசத்தில் தோன்றும் வாஸனாதத்வத்தைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இவ்வாசனா தத்வத்தினால் கோதை தன் அந்தரங்கத்தில் நாதனாக வரித்த ரங்கநாதனை ஆட்கொண்டாள். அந்த ரங்கநாதனே பூமியின் ஹிருதயம போல் விளங்கும் ஸ்ரீரங்கம் என்ற தீவில் விளங்கும் ரங்கநாதராக ஏற்பட்டுள்ளார். இவ்வாறு ஸ்ரீ ஆண்டாளின் திவ்ய சரிதத்தைக்கேட்கும் பாக்யம்பெற்ற எல்லோரும், சிறந்த பக்தர்களாய், உயர்நிலைபெற்ற ஆன்மநோக்குடன சகலவித ஜன்மாந்திர வாஸனைகளையும் பரப்பிரம்மததினிடம் அர்ப்பணம்செய்து தனது ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் ஒன்றுபடுத்தும் யோகத்தில்வெற்றி காண்பார்கள் என்பது திண்ணம்.

பக்தர்களின் சரிதம் ஒவ்வொன்றிலும் இத்தகைய பூர்ணஞானத்தைக் காண்பதே நமது லக்ஷ்யமாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறுவதே ஸ்ரீ ஆண்டாள் போன்ற பக்தர்களின் சரிதமாகும்.

“பக்தன் வாழ்க, பக்தர்களுக்கடியோன் வாழ்க”

எல்லாவிதமான மின்சார விளக்குகள் போடுவதற்கும், பூமியில் மிகவும் வலிவுள்ள கேபில்கள் வைக்கவும், டிரான்ஸ்பார்மர்கள் நாட்டவும், மின்சாரமோட்டார்கள், மின்சார விசிறிகள் ரிப்பேர் செய்யவும், (போன்: 86687)

**ஜ்வாலாஸிங் அண்டு ஸன்ஸ்**

மின்சார எஞ்ஜினியர்கள், கண்ட்ராக்டர்கள், வியாபாரிகள்.
18, வாலாஜா ரோட், மதராஸ்-2.
உத்தரவாதமான வேலைகள் செய்வார்கள்.

For High Tension and Low Tension Underground Cables and other Electrical Goods and Installations, Consult

**Jwala Singh & Sons**

18 Wallajah Road, Madras-2. (Phone: 86687)

# திருப்பாவையும் எம்பெருமானாரும்

ஸ்ரீரங்கம் ஸ்தானீகம் பார்த்தஸாரதி ஐயங்கார்,
“தேவஸ்தான பத்திரிகா” ஆசிரியர், ஸ்ரீரங்கம்.

எம்பெருமானாருக்கு திருப்பாவையே ஸதாநுஸந்தேயமாயிருந்தது. ஆதனால் அவருக்குத் திருப்பாவை ஜீயர் என்று திருநாமமாயிற்று. பெரியநம்பி திருமாளிகைக்கு எழுந்தருளினவர் அங்கே கதவு சாத்தியிருந்தபோது ப்ரஸ்துதமான பாசுரத்தை எம்பெருமானார் அநுஸந்தித்துக்கொண்டிருக்கையில், “வந்து திறவாய்” என்று பூர்த்தியாகும்போது கதவைத் திறந்த அத்துழாயை கோபிகையாகப் பாவித்து தண்டம் ஸமர்ப்பித்த ஐதிஹ்யம் ஸுப்ரஸித்தமாயுள்ளது.

மார்கழியில் பிரதானமான திருப்பாவைக்காக நம்பெருமாள் அமுது செய்யும் பிரஸாதம் அம்மாதம் முழுதும் எம்பெருமானாருக்கு பஹுமானமாக அனுப்பப்படுகிறது. அதில் முதல்நாள் பிரஸாதம் அர்ச்சகரைக்கொண்டு எம்பெருமானாருக்கு அமுது செய்விக்கப்படுகிறது.

அத்யயனோத்ஸவம் திருமொழித்திருநாள் 3-ம் நாளில் திருப்பாவை விண்ணப்பித்த கௌரவத்துக்காக ஏற்பட்ட பணியாரங்கள் திருப்பாவை நிஷ்டரான எம்பெருமானாருக்கு—“திருப்பாவை விட்டம், எம்பெருமானார் விட்டம்” —என்ற கணக்கின்படி பஹுமானம் செய்யப்படுகின்றன.

மங்களாசாஸநக்ரமம்:— ஆழ்வார்களின் அருளிச்செயலைப் பிரதானமாகக்கொண்ட ஸ்ரீவைஷ்ணவ ஸந்நிதிகளிலும் திருமாளிகைகளிலும் திருவாராதன காலத்தில் ஸேவிப்பது ஆண்டாள் திருப்பாவையே. திருப்பாவை ஜீயரான ஸ்ரீராமாநுஜருடைய திவ்யாஜ்ஞை இது. ரங்கநாதன் ரங்கநாச்சியார் உறையூர் நாச்சியார்களுக்கு விசேஷ திருவாராதனங்களில் அரையர் எழுந்தருளி எதிரில் உட்கார்ந்து திருப்பாவை ஸேவித்து வங்கக்கடல் பாசுரத்தால் சாற்றுமுறை செய்கிறார்.

ஆழ்வார் ஆசார்யர்கள் தம்தம் திருநக்ஷத்திரத்தன்று மங்களாசாஸநம்பண்ணுகையில் பெருமாள் ஸ்ரீரங்கநாச்சியார் ஆண்டாள் ஸந்நிதிகளில் திருப்பாவையில் சிற்றஞ்சிறுகாலே—பாசுரம் ஸேவிக்கப்படுகிறது.

ஆண்டாள் ஸந்நிதியிலேயே எழுந்தருளியிருக்கும் பெரியாழ்வார் மங்களாசாஸநார்த்தமாகப் புறப்பட்டு பெருமாள் ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதிகளுக்குப்போய் தம் ஸந்நிதிக்கு மீளுகிறவர் மற்றை மங்களாசாஸநக்காரர்கள்போல தாமும் ஆண்டாளுக்கெதிரில் சிற்றஞ்சிறுகாலே—பாசுரம் ஸேவித்து அவளுடைய ப்ரஸாதம் பெற்று உள்ளே தம்முடைய இடத்துக்கு எழுந்தருளுகிறார்.

தநுர்மாஸக்ரமம் :—மார்கழி 30 நாளும் ப்ராதக் காலத்தில் திருவாராதனம் தொடங்கும்போது ஸந்நிதிக்குமுன் உட்கார்ந்து அரையர் திருப்பள்ளியெழுச்சி திருப்பாவை பாடி - வங்கக்கடல்—பாசுரத்தால் சாற்றுமுறை செய்து, நாள்பாட்டாக அன்றன்றைய பாசுரத்தை ஸேவிக்கிறார். இது முடிந்த பிறகுதான் வேத—விண்ணப்பம் முதலான மற்றைக்காரியங்கள்.

ஸங்க்ராந்தியும் திருப்பாவையும்:—மார்கழி 30 நாளும் பாடின திருப்பாவைக்கு தை முதல் தேதி ஸங்க்ராந்தியன்று திருப்பாவை சாற்றுமுறையே ப்ரதான காரியம்.

திருப்பாவை ஒவ்வொரு பாட்டையும் இரண்டு தரம் ஸேவிக்கும் பாவனையாக பாட்டை முடித்து அடுத்த பாட்டைத் தொடங்காமல்,

"பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்"
"பாரோர் புகழப் படிந்து"
"வையத்து வாழ்வீர்காள்......"

என்ற க்ரமத்தில் கடைசி அடியில் முன்பாகத்தை மட்டும் இரட்டித்து மேல் பாட்டு தொடங்குவது வழக்கம்.

---


# R. A. Ayyangar,

Manufacturing Jeweller &
Reliable Gold, Silver &
Diamond Merchant,
South Mada St., Triplicane,
Near Sri Parthasarathy Swami Temple.







# கீதா தாத்பர்யச் சுருக்கம்.

திருமழிசை, ஆநூரி கிருஷ்ணமாசார்ய,
அட்வொகேட், மாம்பலம்.

~~~~(கார்த்திகை இதழ்த் தொடர்ச்சி)~~~~

"பூர்வஜன்மாக்களில்செய்யப்பட்டகர்மங்களின்பலனாக ஒவ்வொரு ஜீவாத்மாவிற்கும் தேகமும் அதை ஒட்டிய மனமும் கிடைக்கிறது. கர்மங்களுக்கோ தானே பலன் கொடுக்கும் சக்தி கிடையாது. இந்த பலனை நான் (பகவான்) அளிக்கிறேன். ஆகையால், ஸத்வரஜஸ்தமோ குணமயமான கர்மாக்களால் செய்விக்கப்பட்ட கர்த்ருத்வம் என்னுடைய அதீனம். ஆகையால்,

கர்மயோக முறையில் ஈஸ்வரார்ப்பண பாகம்: 30-35 } ஆத்மஸ்வரூபபுத்தியுடன் கர்த்ருத்வத்தையும் என்னிடத்திலேயே ஸமர்ப்பிக்கவேண்டும்; அதாவது, நீ செய்கிற கர்மாக்களெல்லாம் உன் பூர்வகர்மாக்களின் பலனாக என்னாலேயே ஏற்பாடு செய்யப்பட்டன என்று நீ அறியவேண்டும்; செய்யப்படும் கார்யம் இப்பொழுது புதிதாக உண்டான உன்னுடைய இச்சையால் ஏற்பட்டதன்று. ஆகையால், அதன் பலனுக்கு நீ உரியவனன்று; ஆகையால், கர்மாக்களின் புண்யபாபங்கள் உன்னை (உன் சுத்தஜீவாத்ம ஸ்வரூபத்தை) சேரா. பழைய புண்யபாபங்களின் பலன்கள் முடிந்தவுடன், என்னுடைய இந்த உபதேசத்தால் புதிய புண்யபாபங்கள் விலக்கப்பட்டு, நீ ஸம்ஸார பந்தத்தினின்று விடுபட்டு ஆத்மானுபவ மோக்ஷத்தை அடைவாய்.

இந்த உபதேசம் உபநிடதங்களின் ஸாரம். இதை எவர்கள் அனுஷ்டிக்கிறார்களோ, அனுஷ்டிக்காவிடினும் இதில் விச்வாஸத்துடனிருக்கிறார்களோ, அப்படிவிச்வாஸமில்லாவிடினும் இதை தூஷிக்காமலிருக்கிறார்களோ, அவர்கள் கர்மபந்தத்தினின்று விடுபடுவர். எப்படியென்றாலோ; இதில் துவேஷமில்லாததினால், காலக்கிரமத்தில் விச்வாஸம் பிறக்கும்; விச்வாஸம் பிறந்தால், அனுஷ்டானமுண்டாகும்; அனுஷ்டானம் வழியாக ஸம்ஸாரபந்தம் போகும். ஆனால், இதை தூஷிப்பவர்களுக்கு, விமோ

அன்புடன் அந்தாதி தொண்ணூற்றாறு உரைத்தான் வாழியே!
அழகாரும் திருமழிசை அமர்ந்த செல்வன் வாழியே!



சனம் கிடையாது; அவர்கள் ஜ்ஞானமில்லாதவர்களாய் கெடுதியையே அடைவார்கள். ஏனென்றால், இந்திரியங்களும், அவைகளில் விஷய இச்சா த்வேஷங்களும் அனாதி காலமாக ஒன்றையொன்று தொடர்ந்து வருகின்றன. சாஸ்திர ஜ்ஞானமோ இன்றைக்கு ஏற்பட்டது. இன்றைக்குப் பிறந்த சாஸ்திர ஜ்ஞானத்தைக்கொண்டு, அனாதி காலம் தொடர்ந்து வரும இச்சா த்வேஷமயமான இந்திரியங்களைத் தடுக்க முயற்சி செய்யும் ஜ்ஞான யோகிக்கு இந்த ராக துவேஷங்களே சத்ருக்கள். என்னிடத்தில் கர்மாக்களை ஸமர்ப்பணம் செய்வதினால், பழைய பாப புண்யக் குவியல்களைப் போக்கி, செய்யப்படும்கர்மாக்களின் பலனில் ஆசை வைக்காமையால் செய்துகொண்டு வரும் கர்மாக்களின் பலனளிக்கும் சக்தியை நீக்கி, துக்கமயமான ஸம்ஸாரத்தைத் தாண்டுவதுதான் தேஹத்தோடு கூடியவனுக்கு ஸ்வதர்மம். இந்த கர்மயோக முறையில் தவறுதல் நேரிட்டால், அதுவரையில் நேராகச் செய்யப்பட்ட கர்மாக்கள் வீணாகப்போகிறதில்லை; அவைகளுக்கு ஸ்வரூப நாசம் ஏற்படாமையால் மறு ஜன்மத்தில் அவைகள் நல்ல பயனை அளித்தே தீரும். ஜ்ஞான யோகத்தில் தீர்மானம் இந்திரியங்களை வெளிப்போகாமல் தடுப்பது; தவறுதல் என்ன? காமக்ரோதாதிகளின் வேகத்தால், இந்திரியங்கள் வெளிச்செல்வது. ஆகையால், ஜ்ஞான யோகத்தில் ஏற்படும் தவறுதல்கள் ஸங்கல்பத்தையே அழிப்பதால் ஜ்ஞானயோகத்தின் ஸ்வரூபத்தையே நாசம் செய்கின்றன; இதனால், ஜ்ஞானயோகத்தில் பாபத்திற்கும் பயத்திற்கும் காரணங்கள் அனேகம்."

அர்ஜுனன் கேள்வி:—"ஸ்வாமின்! பூர்வஜன்ம வாசனைகள், இச்சைகளை உண்டுபண்ணத்தானே சேதனனை அதர்மவிஷயபோகத்தில் தள்ளுகிறது. ஜ்ஞானயோகியோ ஒன்றையும் இச்சிக்கிறதேயில்லை என்கிற தீர்மானத்தை உடையவனாயிற்றே. அவனை அந்த வாஸனைகள்தான் எப்படி இழுக்கும்?

பகவானுடைய உபதேசம்:—"அர்ஜுனா! ஜ்ஞான யோகியும் தேஹத்தை உடையவன்தானே. தேஹமோ ஸத்வரஜஸ்தமோகுணமயம். இந்த தேஹ சேர்க்கையால்

இன்பமிகு தையில் மகத்து இங்குஉதித்தான் வாழியே!
எழில் சந்தவிருத்தம் நூற்றிருபது ஈந்தான் வாழியே!
~~~~

**ஜ்ஞானயோகியின் சத்ருக்கள் சு: 37-43**

ஜ்ஞானயோகிக்கு சில சமயம் ரஜோ குணமதிகரிக்க, ஸத்வகுணமும் தமோகுணமும் கீழ்ப்படிந்து விடுகின்றன. அப்பொழுது ரஜோகுணத்தின் கார்யமாகிய நிஷித்தவிஷயபோகரூபமாகிய காமம் அந்த ஜ்ஞானிக்கு உண்டாகி அந்தக் காமானுபவத்திற்குத் தடங்கலாக இருப்பவரிடத்தில் கோபமுண்டாகிறது. காமமும், க்ரோதமும் ஜ்ஞானயோகிக்கு விரோதிகள்.

குறிப்பு: இதனையே அடியில் வரும் ஸ்ரீமத் பாகவத ச்லோகத்தில் தெளிவாகக் காணலாம்.:—

"வ்யோம்னோ' ப்தம் பூதசாபல்யம்
புவ: பங்கமபாம் மலம் |
சரஜ்ஜஹாராச்ரமிணாம்
க்ருஷ்ணே பக்திர்யதாசுபம் || X. xx. 34.

ஸ்ரீதரீய பாஷ்யம்: "யதீநாம் காமாதி வாஸனாமலம் ஸ்ரீக்ருஷ்ண பக்தி ஹரதி; ஏவமபாம்மலம் சரதீதி" = ஜ்ஞானயோகத்திற்குத் தனியாக ஏற்பட்டது ஸன்யாஸ ஆச்ரமம்; ஸன்யாஸிகளுக்குண்டாகும் துர்விஷய காமத்தை எப்படி கிருஷ்ண பகவானிடத்தில் வைக்கப்பட்ட பக்தி அபஹரிக்கிறதோ, அப்படியே சரத்ருது, வர்ஷா காலத்தில் உண்டான ஜலத்தின் கலக்கத்தைப் போக்கிற்று.) எப்படி ஜடமான நெருப்பு கையில் பட்டவுடன் சேதனனுக்கு தாபத்தை உண்டாக்குகிறதோ, அப்படியே ஜடஸ்வரூபமான ரஜோ குணம் தேஹத்தை வாய்த்த சேதனனுடன், அத்தேஹத்தின் மூலமாகச் சேர்வதினால் அவனிடத்தில் காமக்ரோதாதிகளைக் கிளப்பிவிடுகிறது. இதனால், ஜ்ஞானயோகி தானும் கெடுவதோடு, கோபத்தினால் இதரர்களையும் ஹிம்ஸிப்பதில் ப்ரவர்த்திக்கிறான்.

அர்ஜுனா! இப்பொழுது இக்காமம் விரோதம் செய்யும் வகையை திருஷ்டாந்தங்கள் மூலமாகச் சொல்லுகிறேன்; கேள். எப்படி நெருப்பு புகையினாலும், கண்ணாடி அழுக்கினாலும், கரு கர்ப்பப்பையினாலும் மறைக்கப்படுகின்றனவோ, அப்படியே இக்காமத்தினால் பிராணிகளின்

முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே!
முழுப்பெருக்கில் பொன்னியெதிர் மிதந்த சொல்லோன் வாழியே!



உண்மையான ஆத்மஸ்வரூபம் அனாதிகாலம் தொடர்ந்து மறைக்கப்படுகிறது.

[குறிப்பு: புகையும் நெருப்பும்போல் பூர்வவாஸனையும் காமமும் கூடவேயிருக்கின்றன; எப்படிக் கண்ணாடியை அழுக்குத்தொடர்ந்துகொண்டேயிருக்க, அக்கண்ணாடியை அடிக்கடி துடைத்துக்கொண்டேயிருக்க வேண்டுமோ, அப்படியே அடிக்கடித் திரும்பி வரும் காமத்தை உசிதமான உபாயத்தால் தேஹம் உள்ளவரையில் விலக்கிக் கொண்டேயிருக்கவேண்டும்; எப்படிக் கரு கர்ப்பப்பையினின்று வெளிவர ஸ்வப்ரயத்தனம் வீணோ அப்படியே ஒருவனுக்கு எவ்வளவுதான் விடாமுயற்சி இருப்பினும் காமத்தினின்று விலக ஒரு பக்த ஸாதுவின் அனுக்ரஹம் வேண்டும்.

ஜ்ஞானயோகம் பூர்த்தியடையாத ஜ்ஞானிகளுடைய ஆத்மாவைப்பற்றிய ஸ்வபாவமான ஜ்ஞானம் இக்காமத்தால் மூன்றுவழியாக மறைக்கப்படுகிறது. ஒன்று: "காமரூபேண" = சப்தாதிவிஷயங்களில் மோஹத்தை உண்டாக்கி; இரண்டாவது: துஷ்பூரேண: அடைய முடியாத விஷயங்களின்மீது ஏக்கத்தை உண்டாக்கி; மூன்றாவது: "அனலேன" = அடையப்பட்ட விஷயானுபவத்திலும் போதும் என்கிற எண்ணத்தை உண்டாக்காமல். இப்பொழுது இக்காமம் எந்தக் கருவிகளைக்கொண்டு ஸ்வபாவத்தில் உட்படாமலும் ஸத்வாதி குணங்களுக்கு உட்பட்டுமிருக்கிற ஆத்மாவை ஆக்ரமித்துக்கொண்டு, தனக்குக் கீழ்ப்படிந்தவனாகச் செய்கிறது என்பதைச் சொல்லுகிறேன். இந்தக் காமம், இந்திரியங்கள், மனது, புத்தி இவைகள் மூலமாக ஆத்மாவை அடைந்து, அவைகள் மூலமாகவே ஆத்மஜ்ஞானத்தை மறைத்து தேஹத்தில்கிடக்கும் ஆத்மாவை மயக்குகிறது. ஆகையால், இந்திரியம், மனது, புத்தி இவைகளின் முழு ஓய்வை அடைய ஆரம்பித்திருக்கும் ஜ்ஞானயோகியை, இந்திரியங்களின் ப்ரவ்ருத்தியையே உதவியாகக்கொண்ட காமம், அவனை விஷயமோகத்தில் போகும்படிச்செய்து, அவனுக்கு ஆத்ம ஜ்ஞானத்தில் அருவருப்பை உண்டாக்கி அவனுடைய ஜ்ஞானயோகத்

நன்புவியில் நாலாயிரத்து எழுநூற்றான் வாழியே!
நங்கள் பத்திசாரன் இருநற் பதங்கள் வாழியே!

இன் ஸ்வரூப நாசத்தை விளைவிப்பதால், காமம் ஜ்ஞான யோகியின் சத்ருவாகிறது.

ஆகையால், இந்திரியங்களின் வியாபாரங்களில் ப்ரவ்ருத்திக்கும் ஸ்வபாவமுள்ள நீ, மோக்ஷோபாயத்தின் ஆரம்பத்திலேயே, இந்திரிய வியாபாரங்களை, முன் கூறிய வண்ணம் குணங்களிலும், என்னிடத்திலும் ஸமர்ப்பிப்பது, பலன்களில் ஆசையில்லாமலிருப்பது முதலிய கர்ம யோக முறையில் செலுத்தி, ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றிய ஜ்ஞானத்தையும் அதன் பகுத்தறிவையும் நாசம் செய்யும் காமத்தை ஜயி.

குறிப்பு: பக்தனுடைய இந்திரியங்களெல்லாம் பகவத்பரமாகவே ஈடுபட்டிருப்பதால் அவனுக்கு கர்மயோக முறை வேண்டியதில்லை. இந்திரனுக்குக் கிணறு வெட்டும் கருவிகளும் வேண்டுமா?

''ஸ வை மன: க்ருஷ்ணபதாரவிந்தயோர்
வசாம்ஸி வைகுண்ட குணானுவர்ணனே |
கரௌ ஹரேர் மந்திரமார்ஜனாதிஷு
ச்ருதிம் சகாராச்யுத ஸத்கதோதயே ||''
''முகுந்த லிங்காலய தர்சனே த்ருசௌ
தத் ப்ருத்ய காத்ரஸ்பர்சே'ங்கஸங்கம் |
க்ராணம் ச தத்பாத ஸரோஜ ஸௌரபே
ஸ்ரீமத்துளஸ்யா ரஸனாம் ததர்ப்பிதே ||''
''பாதௌ ஹரே: க்ஷேத்ர பதானுஸர்பணே
சிரோ ஹ்ருஷீகேச பதாபி வந்தனே |
காமம் ச தாஸ்யே நது காமகாம்யயா
யதோத்தம் ச்லோக ஜனாச்ரயா ரதி: |

(ஸ்ரீமத்பாகவதம்: XI. iv. 18—20)

[உரை: பரமபாகவதராகிய அம்பரீஷ சக்ரவர்த்தி தனது இந்திரியங்கள் மனது எல்லாவற்றையும் பகவத்பரமாகவே ப்ரவ்ருத்திப்பித்தார். மனதையோ கிருஷ்ணசரணாரவிந்தத்தில்: வாக்கையோ நாராயணனுடைய அனந்த கல்யாண





குண வர்ணனையில்; கைகளையோ ஹரியினுடைய க்ருஹத்தை பரிசுத்தம்செய்து, நீர்தெளித்து, கோலமிடுவதில்; காதுகளை, அச்யுதனுடைய கதாச்ரவணத்தில்; கண்களை முகுந்தனுடைய ஆலயாதி தர்சனத்தில்; ஸ்பர்சேந்திரியத்தை பகவானுடைய தாஸர்களாயிருக்கும் பாகவதர்களை காடாலிங்கனம் செய்வதில்; க்ராணேந்திரியத்தை (கந்தம்) முகுந்தனுடைய சரணாரவிந்தத்தைச் சேர்ந்ததனால் மணம் பெற்ற துளசியை முகர்வதில்; ரஸனேந்திரியத்தை பகவான் அமுதுசெய்து எஞ்சியிருக்கும் ப்ரஸாதத்தை ருசி செய்வதில்; கால்களை பகவத் ஸன்னிதானங்களை ப்ரதக்ஷிணம் செய்வதில்; சிரஸ்ஸை ஹ்ருஷீகேசனுடைய திருவடிகளில் வீழ்ந்து ஸேவிப்பதில்; தன்னுடைய காமவ்ருத்திகளையெல்லாம், எள்ளளவும் தன்னுடைய விஷய போகத்திற்கல்லாமல், பகவானுடைய ஸேவையிலேயே மஹாராஜா உபயோகித்தார். இப்படியெல்லாம் இவர் இருந்ததற்குக் காரணம் என்ன? உத்தமச்லோகன் என்றுபாஸித்தியான கிருஷ்ணபகவான் ஒருவனையே தமது நிலை என்றிருக்கும் ஸாது ஜனங்களிடத்தில் தனக்கு ரதி க்ஷணந்தோறும் பன்மடங்கு அதிகரித்துக்கொண்டே யிருக்கவேண்டும் என்கிற அவாவேதான்.

இது வரையில் ஜ்ஞானத்தின் விரோதங்களில் முக்யமானவை இந்திரியங்கள், மனது, புத்தி, காமம் என்றுரைத்தேன். இவைகளின் பலத்தின் தாரதம்யம் இப்பொழுது சொல்லுகிறேன். இந்திரியங்களைவிட மனது பலிஷ்டன்; மனதைவிட புத்திபலமானது; இவைகளைவிட மிகவும் பலமானது காமம். ஏன்? இந்திரியாதிகளை அடக்கினாலும், ரஜோகுணத்தால் உண்டான காமமிருந்தால், அக்காமம், மனது, புத்தி, இந்திரியம் எல்லாவற்றையும் தன் வசமாக்கிக்கொண்டு ஆத்மஜ்ஞானத்தைக் கிளம்பவொட்டாமல் தடுக்கும். எல்லாவற்றையும் அடக்கலாம்; ரஜோகுணத்தால் உண்டான காமத்தை ஒரு உதவியுமில்லாமல் ஸ்வப்பிரயத்தனத்தினாலேயே அடக்க முடியாது, அப்பா!



பட்டி

87283.

பக்தர்கள் இந்தப் பிறப்பிலேயே ஸாது ஸங்கத்திலிருந்துகொண்டு ரஜோகுணத்தால் உண்டாகிய காமம் தங்களை அணுகாமலிருக்கின்றனர். ஸத்ஸங்க பாக்யமில்லாதவர்கள், தாங்கள் ப்ரயத்தனம் செய்யும் ஜ்ஞான யோகத்திற்கு ரஜோகுணத்தால் உண்டான காமம் விரோதி என்று தெரிந்துகொண்டு, தங்கள் மனதை புத்தியினால் கர்மயோக முறையில் நிறுத்தவேண்டும். அதாவது, அனுஷ்டிக்கப்படும் கார்யங்களை எல்லாம் கர்மயோக முறையிலேயே செய்ய வேண்டும். இப்படிச் செய்யாவிடில், பிறகு மனதை முழுவதும் நமது ஸ்வாதீனத்திற்கு கொண்டு வரமுடியாது. ஸத்வகுணத்தில் இருப்பு இல்லாதவர்களுடைய விஷய காமம், அவர்களுடைய இந்திரியங்கள், புத்தி, மனது இவைகளை ஜயித்துவிடும்: அதாவது, அவர்கள் தோஷங்களை அறிந்தும், காமத்தை விலக்கமுடியாதவர்களாக இருப்பார்கள்.

மூன்றாவது அத்யாயம் முற்றிற்று|


# பாரத் பாலிஸி

ஒவ்வொரு தொழிலுக்கும் வேண்டிய பாதுகாப்பை அளிக்கின்றது.

***எத்தகைய ஆபத்தான நிலையிலும் கைகொடுத்து உதவுகிறது.***

BHARAT POLICY *for Protection Inevery Industry*

Bharat Fire & General will cover the following risks:

Fire *Motor * Marine * Aviation * Workmen's Compensation *Cash In Transit* Fidelity Guarantee & EVERY OTHER RISK

## BHARAT FIRE
## & GENERAL INSURANCE LTD.,

Head Office: SCINDIA HOUSE, NEW DELHI

Branches: 154, Elphinstone Circle, Fort, Bombay;
304, Thambu Chetty Street, Madras-1.
3, Chittaranjan Avenue, Calcutta & at Patna,
Darbhanga, Cochin, Ahmedabad & Poona.

Principal Agents at Colombo, Ceylon.

Organising Offices at Meerut & Ujjain.



*

ஸ்நானத்திற்கு உகந்தது

**மேட்டூர் சந்தன சோப்**

*

சலவைக்கு உகந்தது

**காவேரி பார் சோப்**

*

சமையலுக்கு உகந்தது

**காமதேனு வனஸ்பதி**

*

தயாரிப்பாளர்:

**மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட்,**

மேட்டூர் டாம் — சேலம் ஜில்லா.

# அமலனாதிபிரான்

ஸ்ரீ T. S. ராஜகோபால அய்யங்கார், பி. ஏ., எல். டி.
ஆசிரியர், ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி.

## ஏழாம் பாட்டு: 'கையினார்'

**முன்னுரை**

ஸ்ரீரங்கநாதனுடைய திருவதாரத்தின் (வாயின்) அழகில் தமது நெஞ்சம் அகப்பட்ட படியை இப்பாட்டில் ஆழ்வார் விவரிக்கிறார். வெள்ளத்தைக் கடப்பதற்காகக் கொண்ட தெப்பம் வெள்ளத்தில் ஆழ்ந்ததுபோலே, அரங்கனது திருமேனியின் அழகாகிய வெள்ளத்தில் இழிந்த ஆழ்வாரது நெஞ்சம், வெள்ளத்தின் எல்லைகாண இயலாமல் வாயில் சிக்கியது.

முன்பாட்டில், கழுத்தானது தனது மேன்மையைக் காட்டித் திருப்பாணாழ்வாரை உய்யக்கொண்டது கூறப்பட்டது. திருவதரமோ, இக்கழுத்தைக் காட்டிலும் மேன்மையுற்றது. எவ்வாறென்னில், முதலாவதாக, "திருப்பவளச்செவ்வாய்" என்றும், "வாயழகர்" என்றும் ஆண்டாள் அருளியபடியே, வாயானது கழுத்தைக் காட்டிலும் அதிக எழில்கொண்டதாகும். அன்றியும் கழுத்துக்கு அழகு, ஆபரணங்களால் வந்தது; வாயோ என்னில் பவளத்தின் முறிபோல் இயற்கை வனப்பும் சிவப்பும் கொண்டது. இந்த அழகுதான் நம்மாழ்வாரின் உள்ளத்தைக் கவர, அவரும்,

> ***செவ்வாய் முறுவலோடு எனது (உ)ள்ளத் திருந்த***
> ***அவ்வாயன்றி யான் (அ)றியேன்***

என்றருளினார். இரண்டாவதாக, ஆபத்ஸகத்வம் (ஆபத்தில் உதவுவது) என்ற அருங்குணத்திலும், திருவதரமானது கழுத்தைக் காட்டிலும் பெருமைபெற்றுள்ளது. விபீஷணன் ராமனைச் சரணமடைந்தபோது, "சரணமடையுமவர்களது தரம் பாராமல், எவ்விதமான இன்னல்களிலிருந்தும் காப்பேன்; கைவிடமாட்டேன்" என்பதை "அபயம் ஸர்வபூதேப்ய: ததாமி ஏதத் வ்ரதம் மம" (உலக

நாராயணன் சமயம் நாட்டினான் வாழியே!
நாலூரான் தனக்கு முக்தி நல்கினான் வாழியே!



இல் தோன்றிய எல்லாவற்றிலிருந்தும் அபயம் தருகிறேன்; இதுவே எனது விரதம்) என்றும், "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந" (நண்பன் என்ற பாவத்துடன் அடைந்தவன் எவனாயினும் எவ்வாற்றாலும் விடக்கடவனல்லன்" என்றும் சொல்லிய பெருமை, வாய்க்கன்றோ வாய்த்தது! க்ருஷ்ணாவதாரத்திலும் தேர்ப்பாகனாய்த் தேர்த்தட்டில் வீற்றிருந்து, மனக்கலக்கங்கொண்ட அர்ஜுனனைப் பார்த்து, "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி, மாசுச:" (நான் உன்னை எல்லாவகையான பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்போகிறேன், கலங்கவேண்டா) என்று அருளிய சொல்லும், வெளிவந்த வாயின் பெருமையைக் காட்டும். "மெய்ம்மைப் பெரு வார்த்தை" (யதார்த்தமுமாய் உயர்ந்ததுமாயுள்ள வார்த்தை) என்று ஆண்டாள் கொண்டாடிய இந்த வார்த்தை வெளிவந்த வாய் பெருமைவாய்ந்ததல்லவா? "ஸர்வ கந்த: ஸர்வ ரஸ:" என்று எல்லாவிதமான பரிமளங்களுக்கும் எல்லாவிதமான ரஸங்களுக்கும் விளைநிலமாகிய ஸர்வேச்வரனது வாய்,

> ***"கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?***
> ***திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்து***
> ***இருக்குமோ?"***

(பவளம்போன்று சிவந்த வாய், பச்சைக் கருப்பூரத்தின் மணம்கொண்டதோ? தாமரை மலரின் மணம் கொண்டதோ? தித்திப்பாக இருக்குமோ?)

என்று ஆண்டாள் அருளியபடி, தனது இனிய மணத்தையும் சுவையையும் காட்டி, கழுத்தின் அழகில் ஆழ்ந்த ஆழ்வாரது மனதை வலியப் பிடித்து இழுத்துத் தனது அழகிலும் மேன்மையிலும் ஆழ்த்தியது.

ஐந்தாவது பாட்டில் கூறியவாறு 'பாரமாய பழவினை பற்றறுத்து" என்பதற்கு உதாரணமாகப் பரமசிவனின் சரிதம் ஆறாவது பாட்டில் வந்தது. இதைக் கேட்பவர்களுக்கு ஒருசந்தேகம் எழக்கூடும். "ததா தர்சிதுயந்தாரெள ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகெள" (அவனாலே நன்றாகக்காட்டப்

ஏராரும் வையில் அத்தத்து இங்குவந்தான் வாழியே!
எழில்கூரத்தாழ்வான் தன் இணையடிகள் வாழியே!

பட்ட வழியையுடையராய், ஆக்கல், அழித்தல்—இவற்றைச் செய்பவர்கள்) என்று ஈச்வரனுடைய கட்டளையால் ஸம்ஹார கர்த்தாவாய் உயர்ந்த நிலையையுடையவன் சங்கரன்; உயர்ந்த அறிவு வாய்ந்தவன். மேலும் "ப்ரஹ்மண: புத்ராயஜ்யேஷ்டாய" என்றவாறு "பிரமனின் முதல் புதல்வன்" என்று எல்லோரும் கொண்டாடும் மேன்மையுடையவன்; "மூவுலகும் பலிதிரிவோன்" என்றவாறு எங்கும் திரிந்து தனது காரியம் கொள்ள வல்ல சமர்த்தன். நாமோ அல்பர். அறிவில்லாதவர்கள்; "ச்ருதி ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா" என்று கண்ணன் அருளியபடி ஈச்வரனது கட்டளையான வேத வைதிக மர்யாதைகளைக் குலைத்துச் செய்யவேண்டுவனவற்றைச் செய்யாமலும் செய்யத்தகாதவற்றைச் செய்தும் பாவங்களைப் பெருக்கித் துன்பமடைகிறோம்; ஓரிடத்திற்குச் சென்று துயரை நீக்கிக்கொள்ளும் வழியும் நமக்குத் தெரியாது. நம் நிலை இவ்வாறாக, நாம் எவ்வாறு உய்யக் கூடும்? இதற்கு உத்தரமாக இந்த ஏழாவது பாட்டு அமைந்துள்ளது. நமது துர்கதி கண்டு நாம் அஞ்ச வேண்டுவதில்லை என்பது பலபடிகளாலே இதில் குறிக்கப் பட்டுள்ளது.

> **கையின் (ஆர்) சுரிசங்கு (அ)னல்**
> **ஆழியர், நீள்வரைபோல்**
> **மெய்யினார், துளபவிரை (ஆ)ர் கமழ்**
> **நீண்முடி எம்**
> **ஐயனார், (அ)ணி அரங்கனார், அரவின்**
> **(அ)ணைமிசை மேய மாயனார்**
> **செய்யவாய் (ஐ)யோ! என்னைச்**
> **சிந்தை கவர்ந்ததுவே.**

பதவுரை :—கையின் - திருக்கைகளிலே, ஆர் - நிறைந்துள்ளனவான, சுரிசங்கு-வரிகொண்ட சங்கும், அனல் ஆழியர் - அனலைக் கக்கும் சக்கரமும் கொண்டவர், நீள் வரைபோல் - உயர்ந்த மலைபோன்ற, மெய்யினார் - திருமேனியை உடையவர், துளபவிரை ஆர் கமழ்-(முடியில்) சூழ்ந்துள்ள திருத்துழாய் மாலையின் மணம் வெளி

*அவத்தப் புன்சமயச் சொல்பொய்யை மெய்யென்று அணிமிடறு புழுத்தான் தன் அவையின் மேவி...*



வீசுகின்ற, நீள்முடி-உயர்ந்தோங்கிய கிரீடத்தை உடைய, எம் ஐயனார் - எனக்குத் தகப்பனாரவரும், அணி அரங்கனார்-ஆபரணம் போன்ற திருவரங்கத்தில் வந்துள்ளவரும், அரவு இன் அணை மிசை - திருவனந்தாழ்வானாகிய இனிய அணையின்மேலே, மேய மாயனார்-சேர்ந்து வியக்கத் தக்க செய்கைகளை உடையவருமான (பெருமானது), செய்ய வாய்—சிவந்த வாயானது, என்னை-என்னுடைய, சிந்தை கவர்ந்தது - மனதைத் தன்பக்கல் இழுத்துக் கொண்டது, ஐயோ!—

விரிவுரை:—முதல் அடியில். திருவரங்கன் தனது கைகளில் ஆழிசங்கங்கள் ஏந்திய அழகு கூறப்படுகிறது. மேகம்போன்ற திருமேனிக்கு எடுத்துக்காட்டாக, தாமரை மலர்போல் திகழும் உள்ளங்கைகளும், இவற்றுள் ஒன்றில் நிலவுபோல் வெளுத்த சங்கும், மற்றதில் சுடரைக் கக்கும் சக்கரமும் காண்போரது கண்களுக்குப் பெருவிருந்தாகும். "பாஹவ: பரிகோபமா:" என்றும், "கரிமுனிந்த கைத்தலம்" என்றும் சொல்லுகிறபடியே, கைகள் உழல்தடிபோல் பருத்து வலிமிக்கன; குவலயாபீடத்தையும் எளிதில் கொல்லவல்ல மிடுக்கு வாய்ந்தன. இவ்வாறான கைகளில் உள்ள சங்கும் சக்கரமும் நம்முடைய பயத்தை நீக்கவல்லன என்பது இந்த அடியின் உட்கருத்தாகும். சங்கு, சுரிசங்கு, அதாவது வரிகள் கொண்டு பார்ப்பதற்கு அழகானது "ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயானி வ்யதாரயத்" (அந்தச் சங்கின் ஒலி, த்ருதராஷ்ரனுடைய பிள்ளைகளின் ஹ்ருதயங்களைப் பிளந்தது) என்பதுபோல, ஈசனது சங்கின் ஒலியைக் கேட்டவாறே விரோதிகள் நடுநடுங்குவர். ஆக, பயம் கெடுகைக்குச் சங்கு ஒன்றே போதும். மற்றக் கையில் உறைவது அனல் ஆழி, அதாவது அனலைக் கக்குகின்ற சக்கரம். சங்குக்குச் சுரி இயல்புபோல், சக்கரத்திற்கும் அனலை உமிழ்வது இயல்பாகும். சக்கரத்தின் சுடரைக் கண்டே எதிரிகள் மாய்ந்திடுவர்.

> **கூறாய் நீறாய் நிலனாகிக்**
> **கொடுவல் அசுரர் குலமெல்லாம்**
> **சீறா எரியும் திருநேமி வலவா!**

*சிவத்துக்குமேல் பதக்கு உண்டுஎன்று திட்டும் திருக்கூர வேதியர் கோன்,*

(துஷ்டர்களாயும் வலிமைபெற்றவர்களுமாகிய அசுரர்களது கூட்டங்களையெல்லாம், கூறுகூறாக்கி, துகளாகச் செய்து, நிலமட்டமாக்கி, பின்னையும் இது போதாது என்பதுபோல் சீறிச்சுடரைக் கக்கும் சக்கரத்தைக் கையில் கொள்ளும் வலிமை கொண்டவனே!)

என்று, எதிரிகளிடம் சக்கரம் செய்யும் கொடுமையை நம்மாழ்வார் விவரிக்கிறார். ஆக, "எப்போதும் கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான்" என்பதுபோல, நமது துயரங்களைப் போக்குவதற்காகவே ஈச்வரன் சக்கரத்தைக் கையில் பிடித்திருக்கிறான்; ஆதலால் அஞ்சவேண்டியதில்லை என்பது இதன் கருத்தாகும்.

திருக்கோட்டியூரிலே ஸ்ரீபட்டர் எழுந்தருளியிருக்கும்போது, அவரை அனந்தாழ்வான், ஸ்ரீவைகுண்டநாதனுக்குத் திருக்கைகள் இரண்டோ, நான்கோ?" என்று கேட்க, ஸ்ரீபட்டரும், "இரண்டும் கொள்ளலாம்" என்றார். "இவ்விரண்டிலும் எது சால அழகியதாகும்?" என்று மறுபடியும் கேட்க, இதற்குப் பதிலாக "இரண்டு கரங்கள் எனில் பெரிய பெருமாளைப்போலே (சயனித்துக் கொண்டுள்ளவரைப்போலே) ஆகும்; நான்கு கரங்கள் எனில் பெருமாளைப்போலே (உத்ஸவராகிய அழகிய மணவாளனைப்போலே) ஆகும்" என்றருளினார். திருப்பாணாழ்வார் அருளிச் செய்துள்ளவாறு ஸ்ரீரங்கநாதனுக்குத் திருக்கைகளில் சங்கு சக்கரங்கள் உள்ளனவோ என்று ஐயமுறவேண்டியதில்லை. உயர்ந்த ஞானிகள் ஸ்ரீரங்கநாதனைச் சங்கும் சக்கரமும் கொண்டவனாகவே கண்டுள்ளார்கள்.

இனி திருமேனியின் அழகு வருணிக்கப்படுகிறது. நீள்வரைபோல் மெய்யனார் என்று. மெய் என்பது திருமேனியைக் காட்டும். ஸ்ரீரங்கநாதனது திருமேனி, மேருவைப்போலும் மந்தரத்தைப்போலும் பெரியதாகவும் அழகாகவும் உள்ளது. தொண்டரடிப்பொடியாழ்வாரும் திருமேனியை "பச்சைமா மலைபோல் மேனி" என்று பாடுகிறார். மலைபோலே திரண்டுள்ள நமது பாவ ராசிகளை மலைபோல்

பூ வளரும் திருமகளார் பொலிவுற்றோன் வாழியே!
பொய்கைமுதல் பதின்மர்கலைப் பொருளுரைப்போன் வாழியே!



கிடக்கும் இவன்தான் தகர்த்து ஒழிக்கக் கூடும் என்பது ஆழ்ந்த கருத்தாகும்.

இந்தத் திருமேனியின் அழகைப் பெருக்கிக் காட்டுவது, திருமுடி (கிரீடம்) ஆகும். இதை நீண்முடி என்கிறார், ஆழ்வார். "பதிம் விச்வஸ்ய" என்றவாறு எல்லா உலகங்களுக்கும் நாதன் என்பதற்கு அறிகுறியாகவுள்ளது, உயர்ந்துள்ள கிரீடம். ஆதலால் இவன், ப்ரும்ஹ ருத்ரர்கள் போன்ற வானோர்களுக்கு மாத்திரம் அருள்செய்வான் என்பது கிடையாது; நமக்கும் நாயகன் ஆதலால், நம்முடைய துக்கங்களையும் அகற்றுவான் என்பது தோன்றும். நீளமுடியில் ஆர்ந்துள்ளது (நிறைந்துள்ளது) மணம் மிக்க திருத்துழாய் மாலை. "ஸர்வ கந்த:" என்ற ஸர்வேச்வரனுக்கும் போக்யமாயிருக்கும், அவனது திருமுடியில் சேர்ந்துள்ள திருத்துழாய் மாலையின் பரிமளம்.

தம்மளவும் வந்து அருள்செய்த பெருங் குணத்தால் மகிழ்ந்த ஆழ்வார், அரங்கனை நீண்முடி எம் ஐயனார் என்று வாயாரப் புகழ்கிறார். சங்கரனுக்குப் பாட்டனாயிருந்து அவனது குறையைத் தீர்த்தான், அரங்கன். "மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" (நாராயணன் தாயும், தகப்பனும், தமையனும், வாழ்விடமும், ரக்ஷகனும், நண்பனும், புகலிடமும் ஆவன்) என்று ஸுபாலோபநிஷத்திலே வந்துள்ளவாறு, ஈச்வரன் நமக்கு எல்லா விதங்களிலும் ஒப்பற்ற பந்துவாக உள்ளவன். இதுதனையே அர்ஜுனன்,

பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு:
ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தேவ! ஸோடும் ||

(தேவனே! புத்திரனுக்குத் தகப்பன் போலவும், நண்பனுக்கு நண்பன் போலவும், ப்ரியமுள்ளவனான என் பொருட்டு ப்ரியமுள்ள நீ என் பிழையைப் பொறுக்கத் தகுந்தவனாகிறாய்) என்றான். முக்கியமாக ஈச்வரன் நமக்குத் தகப்பன் போன்றவன். இந்தக் கருத்தினை ஆழ்வார் ஐயனார் என்ற சொல்லில் அமைத்துள்ளார். ஆதலால்

மாவளரும் பூதூரான் மலர்ப்பதத்தோன் வாழியே!
மகரத்தில் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே!

நாம் செய்த குற்றங்களை நினைந்து அஞ்சவேண்டியதில்லை; அவனே தனது கடமையாக அவற்றை நீக்குவான் என்பது புலனாகும்.

ஈச்வரன் நமக்குத் தகப்பன் என்ற முறை, அவன் திருவரங்கத்தில் வந்தபிறகுதான் எளிதில் வெளியாகிறது. இதைத் தம்முள்ளத்தில் கொண்டு திருப்பாணர், ஐயனார் அணி அரங்கனார் என்கிறார். கிணற்றில் விழுந்தகுழந்தையை எடுத்துக்காப்பதற்காகத்தாய்தானே கிணற்றில் குதிப்பதுபோல், ஈச்வரனுடைய அருளையே நினைந்து ஸம்ஸாரத்தில் நலியும் நம்மைக் காக்க, அவன் பரமபதத்திலிருந்து விரைந்துவந்து ஸ்ரீரங்கத்தில் சாய்ந்தருளினான். இவ்வாறு இங்கு வந்த பிறகுதான் அவனது பெருமை மேம்பட்டு விளங்குகிறது என்பதைத் தொண்டரடிப்பொடி யாழ்வார்,

**தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ்**
**திருவரங்கத் துள் (ஓ)ங்கும்**
**ஒளியுளார் தாமே அன்றே**
**தந்தையும் தாயும் (ஆ)வார்**

[நமக்குத் தந்தையும் தாயுமாகிய ஈசன், தெளியாது கலங்கிய நீரைக் கொண்ட காவிரியால் சூழப்பெற்ற திருவரங்கத்தில், மேன்மேலும் ஓங்கும் ஒளியைக் கொண்டவரன்றோ?] என்றருளுகிறார். அணி அரங்கனார் என்பதால் ஸ்ரீரங்கம் ஸம்ஸாரத்திற்கு அணி போன்றது என்பது தோன்றும். ஆபரணம், பூண்டவர்களுக்கு அழகைத் தரும்; ஆபரணம் போன்ற இந்த க்ஷேத்ரம் ரக்ஷகனான ஈச்வரனுக்கு அழகை ஓங்கச் செய்கிறது. நாம் வேண்டும்போது வணங்கிக் குறைதீர்த்துக் கொள்ள நாம் இருக்கும் இடத்திலேயே வந்து சாய்ந்துள்ளான், பரமபத நாதன்; ஆதலால், அவன் இருக்கும் இடத்தை நாட இயலாத நாம் சிறிதும் அஞ்சாமல் அவனைச் சரணம் புகுந்து உய்யலாம் என்பது உள்ளுறை பொருளாகும்.

கையிலேந்திய சங்கு சக்கரங்கள், மலைபோன்ற திருமேனி, திருத்துழாய் வலயம் சேர்ந்த நீண்முடி—இவை

தேவுமெப்பொருளும் படைக்கத் திருந்தினான் வாழியே!
திருமலை நம்பிக்கடிமை செய்யுமவன் வாழியே!



ஒவ்வொன்றையும் விட ஆழ்வாரது உள்ளத்தை அதிகமாகக் கவர்ந்தது, திருவரங்கனது கிடையழகாகும். கிடக்கும் படுக்கை, அரவு இன் அணை; அதாவது, பாம்பாகிய இனிய படுக்கை. இந்தப் படுக்கை வெண்மை, மிருதுவாயிருத்தல், மணம், குளிர்ச்சி, அழகு—இவை வாய்ந்துள்ளதால், "புல்கும் அணையாம்" என்றவாறு, ஈச்வரனும் அதை விட்டகல மனம் வராமல் அதையே அணைத்துக்கொண்டு கிடக்க விரும்பும் பெருமையுடையதாகும். திருவனந்தாழ்வான்மேல் பரமன் சாய்ந்துள்ளது, தங்கத்திலே ரத்தினம் பதித்ததுபோல் அழகைப் பெருக்கிக் காட்டும். இந்த அழகை அரவினணைமிசை மேய மாயனார் என்று திருபாணர் புகழ்கிறார். இவ்வாறு சயனித்திருக்கும் நிலையில் அழகும், நமது விரோதிகளை நீக்கும் ஆற்றலும் உள்ளன; இராமன் கண்ணுறங்கிய அழகைப் பிராட்டி, "ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த:" (அழகு விளங்க நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த அவர், அதை அநுபவிக்கப் பெறாத என்னால் எழுப்பப்பட்டார்) என்றாள்; பின்பு "பரந்தப:" என்றாள்; அதாவது அவனைக் கண்ட மாத்திரத்திலே விரோதிகள் மனங்குலைவர் என்பதாம். புலி கிடந்த தூற்றையே கண்டு காட்டு மிருகங்கள் அஞ்சி ஓடுவதுபோல், பாம்பணையில் பள்ளி கொள்ளும்நிலையில் பரமனைக் கண்டு நமது துக்கங்களெல்லாம் பாய்ந்தோடும் என்பது ஆழ்வாரது உள்கருத்தாகும்.

இவ்வாறு பல புடைகளிலும் வளர்ந்தோங்கும் திருவரங்கனது செய்ய வாய் ஆழ்வாரது சிந்தையைக் கவர்ந்தது. என்னை என்பதால் "பெண்டிர்களது பவள வாயின் அழகில் சிக்கிய நீசனான என்னை" என்று தம்முடைய எளிமையைச் சொல்லுகிறார், ஆழ்வார். "துவர்த்த செவ்வாயினார்க்கே துவக்கு (அ)றத் துரிசனானேன்" (தம்மிடமுள்ள தீயகுணங்களை மறைத்து, வாயின் பழுப்பைக் காட்டி அகப்படுத்திக்கொள்ளும் பெண்டிர்களுக்கும், உறவு அற்றுக் கள்ளன் ஆனேன்) என்றவாறு பெண்களது பொய்ச்சிரிப்பில் தாழ்ந்த மனதுடைய என்னையும், இயற்கை மணமும் அழகும் வாய்ந்த இந்த வாய், தனது முறுவலைக் காட்டி மயக்கி, என் நெஞ்சையும்

பாவையர்கள் கலவியிருள் பகலென்றான் வாழியே!
பட்டர் தொழும் எம்பார்பொற் பதமிரண்டும் வாழியே!

கவர்ந்தது என்கிறார் ஆழ்வார். வாயின் மாயம், அரவிணையில் சாய்ந்தவனுடைய மாயத்தைவிட மேலானது!

ஐயோ என்ற சொல்லின் ஆழ்பொருள்: அரங்கத்து ஐயனும் தனது அழகை நன்றாக அனுபவிக்கப் பாரித்தான்; நானும் நன்றாகக் கண்ணால் பருகப் பாரித்தேன்; இருவரும் பெருமல் வாயொன்று இருஞ்சிக்கொண்டதே!

என்னைச் சிந்தை கவர்ந்தது என்பதால் ஆழ்வார், "கல்லான என் மனதையும் நீராக இளக்கி, அந்த நீரையும் தானே கொண்டது அவனது வாய்; ஈச்வரனுக்கே உரிய ஆத்ம வஸ்துவைக் கவர்ந்த கொடியனான என் மனதையும் கவர்ந்தது" என்று மகிழ்கிறார்.

இப்பாட்டில், ஸ்ரீ வைகுண்ட நாதன் படியும் அரங்கனிடம் காணலாம் எனகிறார் திருப்பாணாழ்வார்.

Coffee
Ours for Quality

Raw, Roast or Ground.
Ganesh & Co, (Madras) Ltd.,
22, Venkatanarayana Road, T. Nagar,
Madras-17. (Phone 88006)
Retail Branches:—71, Pondy Bazaar, T. Nagar
285, China Bazaar Road, G. T. (Phone 2709)
Neeli Veerasami Chetty St., Triplicane.



# ஸ்ரீமத் வானமாமலை ஜீயர்ஸ்வாமி சென்னை விஜயமும் நிகழ்ச்சிகளும்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான முதலாவது வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமி சேஷாவதாரமாயும் ஸ்ரீவைஷ்ணவ தர்சன ஸ்தாபகாசார்யருமான கோயில் அழகிய மாமுனிகளின் அம்சாவதாரமென்பர் பெரியோர். அவர் மாமுனிகளின் கருணைக்குப் பாத்ரமாகிய முதலாவது சிஷ்யர், அவருடைய அஷ்ட திக்கஜங்களில் முதலாக எண்ணப்பட்டவர். இவர் மணவாளமாமுனிகளின் ஆஞ்ஞைக்கிணங்க ஸ்ரீராமானுஜ தர்சனமான விசிஷ்டாத்வைத மதத்தை ஆஸேது ஹிமாசலம் எங்கும் பரப்பித் தமது அஷ்ட திக்கஜங்களோடு வடக்கே எழுந்தருளி மாயிசைவாதி மதஸ்தர்களை வாதத்தில் வென்று, ஆங்காங்கு மடங்களை ஸ்தாபித்து இந்த தர்சனத்தைப் போற்றிவரும்படி பல சிஷ்யர்களையும் அவ்வவ்விடங்களில் ஏற்படுத்தியவர்.

சிறக, மாமுனிகள் இவருடைய ஞான வைராக்யாதிகளைக் கண்டு, இவரே தமது பீடத்திற்குரியரென நினைத்து, தர்சன ப்ரவர்த்தகரான தாம் தரித்திருந்த திருவாழி மோதிரத்தையும் உபதண்டத்தையும் தமது ஆசார்யராகிய திருவாய்மொழிப்பிள்ளையின் திருவடி நிலைகளையும் இவரிடமே கொடுத்துத் தர்சனத்தைப் பேணிவரும்படி இவரை நியமித்தார். இந்த ராமானுஜ ஜீயர் ஸ்வாமி ஸ்ரீமணவாளமாமுனிகளுக்குப் பிறகும் சுமார் 50 ஆண்டுகள் எழுந்தருளியிருந்து உபய வேதாந்தங்களையும் ரஹஸ்ய க்ரந்தங்களையும் பலருக்கு உபதேசித்து உலகைத் திருத்தியதுடன், வானமாமலை, திருக்குறுங்குடி, பதரிகாச்ரமம் முதலிய திருப்பதிகளில் எம்பெருமான்களுக்கும் ஆசார்யர்களுக்கும் புதிய ஸந்நிதி, விமானம், மண்டபங்கள் போன்ற பல கைங்கர்யங்களையும் செய்து கைங்கர்ய நிஷ்டராய் உலகனைத்தும் போற்றும்படி ஏறக்குறைய நூறு திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்தார்.

அந்த ஸ்வாமியின் பீடமாகிய வானமாமலை ஆஸ்தானத்தில் ஞானவான்களாகிய பல மஹான்கள் நியமிக்கப்பெற்று

அதை அலங்கரித்து எழுந்தருளியிருந்தார்கள். அவர் பரம்பரையில் அந்த ஸ்தானத்தில் தற்காலம் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமி, இருபத்தேழாவது பீடாதிபதியாய் ஸ்ரீ ராமானுஜ ஸ்வாமி என்னும் திருநாமத்துடன் நம்மை அநுக்ரஹிக்கவே இச்சென்னைக்கு விஜயம் செய்தருளினர். இந்த வானமாமலை பீடத்திற்கு பாரத தேசத்தில் பெரிய க்ஷேத்ரங்களில் எங்கும் வானமாமலை மடம் அல்லது தோதாத்ரி மடம் என்றபெயரால் நூற்றுக் கணக்கான மடங்களும் லக்ஷக் கணக்கான சிஷ்யர்களுமுண்டு. இதற்குமுன் இந்தப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த இருபத்தைந்தாவது பட்டம் சின்ன கலியன் ராமானுஜ ஜீயர் ஸ்வாமி இன்றைக்கு சுமாராக இருபத்தேழு வருஷங்களுக்குமுன் இச்சென்னையில் (திருவல்லிக்கேணி) தமது மடத்தில் சுமார் ஆறு மாத காலம் தங்கி எழுந்தருளியிருந்தார். அதுபோலவே இந்த ஸ்வாமியும் இந்த இரண்டு மூன்று மாஸ காலம் இங்குத் தங்கி எழுந்தருளியிருக்கும்படி நேர்ந்தது நமது பாக்ய பலம் என்னத் தட்டில்லை. இந்த ஸ்வாமி அக்டோபர் ஒன்பதாந் தேதி இரவு இங்கெழுந்தருளிய பிறகு வரவேற்பு வைபவங்கள், சாதுர்மாஸ்ய ஸங்கல்ப ஆரம்பம் வரையிலுள்ள விருத்தாந்தங்கள் ஏற்கனவே பக்தனில் வெளிவந்துள்ளன.

இடையில் இந்த ஸ்வாமிக்குமுன் எழுந்தருளியிருந்த ஸ்ரீமதுரகவி ராமானுஜ ஸ்வாமியின் தீர்த்த உத்ஸவம் பத்து தினங்களிலும் நாலாயிர திவ்யப்ரபந்த ஸேவையுடன் நடைபெற்று நவம்பர் 6௳ ஐப்பசி சுக்ல தசமியில் முடிவுற்றது. அன்று ஸ்வாமி ஸந்நிதிக்கு எழுந்தருளி ஸ்ரீபார்த்தஸாரதியை மங்களாசாஸநம் செய்து அவர் ப்ரஸாதங்களும் மற்றும் எம்பெருமான்களுடைய ப்ரஸாதங்களும் பெற்று மடத்திற்கு எழுந்தருளி அந்தந்த எம்பெருமான்களுக்கு ஸம்பாவனை செய்து சாற்றுமுறை, தீர்த்தம், ததீயாராதனம் முதலியன விமரிசையாய் நடைபெற்றன.

பிறகு நவம்பர் 15-ந் தேதிமுதல் ஸ்ரீ சின்னக்கலியன் ராமானுஜ ஸ்வாமியால் ஏற்படுத்தப்பட்டுள்ள வித்வத் ஸபை

...தாய்மதி, பெற்ற மழிசைப்பிரான் பிறந்த நாளென்று,
நல்லவர்கள் கொண்டாடும் நாள்.



பத்து தினங்களிலும் நடைபெற்றது. இந்த ஸபைக்கு காஞ்சி ஸ்ரீ. உ. வே. ப்ர. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி, காரப்பங்காடு வெங்கடாசாரியர் ஸ்வாமி, புரிசை கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம் சடகோபாசாரியர், திருக்கண்ணபுரம் ஸ்ரீநிவாஸாசாரியர், திருக்குடந்தை ஸ்ரீநிவாஸராகவாசாரியர், திருப்பதி டி. திருமலை தாத்தாசாரியர் முதலியோர் எழுந்தருளியிருந்தார்கள். அநேகமாக ஸ்ரீபாஷ்யவிஷயங்களே ஒவ்வொருவராலும் தமிழில் உபந்யஸிக்கப்பட்டன. பிரதி தினமும் கடைசியில் ஸ்ரீஸ்வாமியால் செய்யப்பட்ட விமர்சனம் அழகாயிருந்தது. பத்தாவது தினம் ஸ்ரீஸ்வாமி ஸ்ரீபாஷ்யத்தின் நான்கு அத்யாய விஷயங்களையும் சுருக்கமாக ஒரு மணி நேரத்தில் அருளிச்செய்தார். பிறகு வித்வான்களில் சிலர் வெவ்வேறு விஷயங்களை உபந்யஸிக்க பண்டித ஸபை ஸம்பாவனையுடன் பூர்த்தியடைந்தது.

பின்பு இடையிடையே சிற்சில நாட்களில் ப்ரமுகர்கள், காயகசிகாமணி ஸ்ரீ அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், காரைக்குடி சாம்பசிவ அய்யர், பேராசிரியர் டாக்டர் துவாரம் வெங்கடஸ்வாமி நாயுடு, ஸ்ரீ ஜி. என். பாலசுப்ரமண்யம் முதலிய ப்ரபல வித்வான்களும் மற்றவர்களும் தக்க பக்க வாத்யங்களுடன் கச்சேரி செய்தார்கள்.

பிறகு டிஸம்பர் 10௳ சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் முடிவுற்றது. அன்று ஸ்வாமி வழக்கம்போல் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி ஸ்ரீபார்த்தஸாரதியை மங்களாசாஸநம் செய்து ப்ரஸாதங்கள் பெற்று மடத்துக்கு எழுந்தருளி சாற்றுமுறை ததீயாராதனம் முதலியன நடைபெற்றன. அன்று மழையாயிருந்ததால் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தின் முடிவில் வழக்கமாய் நடைபெறும் பட்டண ப்ரவேசம் இரண்டு மூன்று தினங்கள் கழித்து வரவேற்புக் கமிட்டியினரால் நன்கு நடத்தப்பெற்றது. இதுவரையில் வரவேற்புக் கமிட்டியினரே ததீயாராதனம் முதலிய பொறுப்புகளை நிறைவேற்றினர். இவ்வாறு பிரதி தினம் சுமார் இரண்டரை மாஸங்களுக்கு மேலாகவே 500, 600 பேர்களுக்குக் குறையாமல் ததீயார

உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க—உலகுதன்னை

தனம் ஷெ கமிட்டியார் நடத்திவைத்தது மிகவும் போற்றத் தக்கது. இது சென்னையில் ஆஸ்திக்யம் குடிகொண்டிருப்பதற்குத் தக்க சான்றாகும்.

இடையிடையே ஸ்ரீ ஸ்வாமி தமது சிஷ்யர்களாலும் அபிமானிகளாலும் ப்ரார்த்திக்கப்பட்டு சிலரது க்ருஹங்களுக்கு எழுந்தருளி அவர்களாலர்ச்சிக்கப்பட்டு அவர்களை அநுக்ரஹித்தார். மயிலை கேசவப்பெருமாள், மாதவப்பெருமாள் ஸந்நிதிட்ரஸ்டிகளின் வேண்டுகோளின்படி அங்கு எழுந்தருளி மங்களாசாஸநம் செய்தருளினார். சென்னை நகரிலும் கீதா மந்திரத்திற்கும் ராதாக்ருஷ்ண மந்திரத்திற்கும் ஸ்ரீ வைஷ்ணவ மஹா நாட்டுக்கும் நிர்வாஹிகளின் மிகுந்த ப்ராத்தனையின் பேரில் எழுந்தருளி அநுக்ரஹித்தருளினார். ஸ்வாமி எழுந்தருளியதிலிருந்து சிஷ்யர்கள் ப்ரதி தினமும் வந்து ஸ்ரீ பாத தீர்த்தமும் ஸமாச்ரயணமும் பெற்றுப் போகிறார்கள். ஞாயிறு முதலிய லீவு நாட்களில் கூட்டம் அதிகமாயிருக்கிறது.

மிகப் புனிதமான இம்மார்கழிமாதம் பிறந்ததும் காலையில் திருப்பாவை ஸேவை சாற்றுமுறை கோஷ்டி முடிந்தவுடன் மடத்தின் வழக்கப்படி பூர்வசாந்தி உத்தர சாந்திகளுடன் க்ரந்தபூர்வமாய் திருப்பாவை நாள்பாட்டுகாலக்ஷேபம் நடந்துவந்தது. பல சிஷ்யர்களின் ப்ரார்த்தனையின்பேரில் இரவுகோஷ்டி நடந்தபிறகு சுமார் 7-30 மணிக்குமேல் திருப்பாவை உபந்யாஸம் எல்லாரும் அறியும்படி எளிய தமிழில் பாரதம், ஸ்ரீராமாயணம், மற்றும் பாசுரங்கள் இவைகளின் மேற்கோள்களுடன் ஸ்வாமி அருளிச்செய்தது மிகவும் அழகாகவிருந்தது. பிரதி தினமும் பல பெரிய மனுஷ்யர்களும் ஸாமான்யமானவர்களும் ஸ்த்ரீபாலர்களுங்கூட இட்டி ஸ்வாமியை தர்சித்து வணங்கி ஆசியைப் பெற்றுச் செல்கின்றனர். ஸ்வாமிக்குக் கிட்டத்தட்ட எழுபது திருநக்ஷத்திரமாகியும் தமது அசக்தியையும் பாராமல் சலிப்பின்றி எல்லோருடனும் ஸௌலபமாயும் ஸௌமுகமாயும் அன்புடனும் பழகிப் பேசிவருவது நமது பெரும் பாக்யம். சுமார் 2½ மாஸத்திற்கு

வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.



ஸூர்யன் கிழக்கில் உதயபர்வதத்தில் நின்றும் வெளிவந்து தனது கிரணங்களால் இருளைவிரட்டுவதுபோல் ஸ்வாமியும் தெற்கில் வானமாமலையிலிருந்தும் வெளிவந்து தனது ஞானஒளியினால் நமது அகவிருளை நீக்கிய ஓர் ஒப்பற்ற ஆதித்யனாவார். நாம் முடவனைப்போல் ஸம்ஸாரபந்தத்தில் கட்டுண்டு வெளியில் கிளம்ப அசக்தர்களாயிருக்க, ஸ்வாமி நாம் அபேக்ஷியாது தாமே எழுந்தருளி நமக்குச் செய்தருளிய உபதேசாதிகள் முடவனின் தலையில் கங்கை விழுவது போன்றதல்லவா? இப்படி நாம் ஆநந்தமடையும்போது ஸ்ரீஸ்வாமி இன்னும் சில தினங்களில் வடதேச யாத்திரை எழுந்தருளப்போகிறார் என்ற வ்ருத்தாந்தம் நமக்குச் சற்று வருத்தமூட்டுவதாயினும், நம்மைப்போன்ற வடதிசையிலுள்ள சிஷ்யர்களும் உஜ்ஜீவிக்கவேண்டுவதும் அவசியமேயாகையால் அதையும் நமது ப்ரயோஜனமாகவே கொள்ளக்கடவோம். ஸ்ரீ ஸ்வாமி வடதேசத்திலும் எழுந்தருளி நமக்குப் போலவே அங்குள்ளவர்களுக்கும் உபதேசித்துத் திருத்தி மடங்களையும் ஸ்திரீகரித்து பூர்வர்கள்போலவே ஸ்ரீராமாநுஜ தர்சந ஸ்தாபநம் செய்து திக்விஜயம்செய்து தமது பீடத்திற்கு எழுந்தருளி தெய்வநாயகன் கைங்கர்யவ்ருத்தியையும் சிஷ்யோஜ்ஜீவநத்தையும்செய்து சதாயு: என்கிற கணக்கிலே பல நூற்றாண்டுகள் எழுந்தருளியிருந்து ஜகத்தை வாழ்விக்க வேணுமென்று ஸ்ரீ பார்த்தஸாரதியை ப்ரார்த்தித்துக்கொண்டிருப்போமாக!

## திருமழிசைப்பிரான் உத்ஸவம்

ஆழ்வார் அவதரித்த திவ்யதேசத்தின் சீர்மையைப் போலே ஆழ்வார் அவதரித்த தினத்தின் சீர்மையும் வாசாமகோசரம். "நற்றவர்கள் கொண்டாடும் நாள்" நற்றவமாகிறது ஆசார்யாபிமான நிஷ்டை. அதை உடையவர்கள் கணிகண்ணன் போல்வார். அவர்களால் கொண்டாடப்படும் நாள்...என்று இதன் பெருமையை ஆதரித்துப்பேசி இருக்கிறார்கள். நாளது ஜய வருஷம் தை மாஸம் 26-ந் தேதி செவ்வாய்க்கிழமை (8—2—55) ஆழ்வார் அவதரித்த மக நக்ஷத்திரம் கூடிய நல்நாள்.

தை மாதம் 17-ஆம் தேதி தொடங்கி 26-ஆம் தேதிவரை ஆழ்வாருடைய அவதார உற்சவம் பத்து தினங்கள் வெகு விமரிசையாக திருமழிசையில் நடைபெறும். தற்சமயம் மேற்படி திருமழிசை ஆழ்வார் சந்நிதிக்கு தர்மகர்த்தாவாக இருக்கும், ஸ்ரீமான் வடிவேலு முதலியார் அவர்கள் மிகுந்த சிரத்தையுடன் அநேக சீர்திருத்தங்களைச் செய்தும், அநேக உற்சவாதிகளுக்கு ஏற்பாடுகள் செய்தும், செயல் முறையில் நடத்தியும் முன்னேறச் செய்திருக்கின்றார். அவதாரோத்சவம் ஆகிய பத்து தினங்களையும் சிறப்பாக நடத்தி வைக்கின்றார். எல்லா ஆஸ்திகர்களும் மேற்படி அவதாரோத்சவத்திற்கு பத்து தினங்களும் வந்து கூடி இருந்து ஆனந்தானுபவம் பண்ணு[illegible]!

—டி. பி. வெங்கடாசாரியர், [illegible]

உண்மை நிகழ்ச்சி

## பக்தாபீஷ்ட பலப்ரதன் ஸ்ரீ பார்த்தஸாரதி.

சென்னை மின்சார இலாகா, உதவி என்ஜினியராக இருக்கும் ஸ்ரீ எம். ஜே. பார்த்தஸாரதி அய்யங்கார் ஸ்வாமி அக்டோபர் 22ஃ வெள்ளிக்கிழமை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி உத்ஸவருக்கு ரத்ன சங்கு, சக்கரம் சமர்ப்பித்தார்.

இதை ஸமர்ப்பிப்பதற்கு சில தினங்களுக்கு முன் என்னிடம், எம். ஜே. பி. ஸ்வாமி, இந்தத் திருவாழி திருச்சங்கை ஸமர்ப்பித்தவுடன், முதலாழ்வாரில் ஒருவராவது மங்களாசாஸனம் பண்ண வேண்டும் என்றார். "ஸ்வாமி, நம்ம ஸ்ரீ பார்த்தஸாரதி பக்த பராதீனன்; தேவரீருடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்வார்" என்றேன்.

ஆனால், திருவாழி திருச்சங்கை சமர்ப்பித்ததினத்தில் முதலாழ்வார்கள் ஒருவருடைய திருநக்ஷத்திரமும் இல்லாததால், அவர்கள் மங்களாசாஸனம் செய்ய ஸந்தர்ப்பமே இல்லை. ஆனால், பகவான் ஸ்ரீபார்த்தஸாரதி தனது பக்தனுடைய இஷ்டத்தை, அன்றையதினமே கீழ்க்கண்டவாறு பூர்த்திசெய்தார்.

ஸாயங்காலம் திருவீதி புறப்பாடு ஆயிற்று. ஸ்ரீ மணவாளமாமுனி உத்ஸவாரம்பமாதலால், ஸ்ரீ மணவாள மாமுனிகள்கூடஎழுந்தருளினார். தென்னண்டைமாடவீதியிலிருந்து, தெள்ளியசிங்கப்பெருமாள் கோவில் தெரு திரும்பும்போது மழை பெய்தது. மழை கொஞ்சம் பலமாகப் பெய்யவே, பெரிய வீதிகள் ப்ரதக்ஷிணம் செய்வதை நிறுத்தி, கோவிலுக்குத் திரும்பிப்போகப் பேயாழ்வார் கோவில்தெரு வழியாகப் பெருமாளை எழுந்தருளப்பண்ணினார்கள். பேயாழ்வார்கோவிலை அடைந்தவுடன், ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி பேயாழ்வாரின் மங்களாசாஸனம் பெற்று தன் பக்தரின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தார்! இங்கே ஒரு விசேஷம் என்னவென்றால், வழக்கமாகப் பேயாழ்வார் கோவில் சாவி, கோவிலிலேயே இருக்கும். அன்றைக்கு என்ன காரணத்தினாலோ, அர்ச்சகர் பேயாழ்வார் கோவில் சாவியைப் பெருமாள் திருவீதி புறப்படும்போது தன்னுடன் எடுத்துக்கொண்டு வந்திருந்தார். அப்படி அவர் செய்யாதிருந்தால், பேயாழ்வார் கோவில் தெரு வழியாகப் பெருமாள் தற்செயலாக எழுந்தருளினபோதும் மழையினால் பேயாழ்வார் கோவிலில் தங்கி பேயாழ்வாருடைய மங்களாசாஸனம் பெற்றிருக்க முடியாது. பேயாழ்வாரின் மங்களாசாஸனம் பெற்று, பக்தன் ஸ்ரீ எம். ஜே. பியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்த பக்தவத்ஸலன் பார்த்தஸாரதியின் கருணையை என்னவென்று சொல்வது!

—அர்ச்சகம் என். ஜி. அனந்தபட்டாசாரியர்.


மின்சார வேலைகளுக்கும்,
ஒளி அலங்காரங்களுக்கும்,

**யுனைடெட் ரேடியோ அண்டு எலக்ட்ரிகல்ஸ்,**

நேதாஜி ரோட், ஈரோடு.

---

# Dhakshina Jewellers

Manufacturers of
Artistic Jewellery and Diamond Merchants,
BASUDEV STREET,
(Back of Pondy Bazaar Post Office)
MADRAS - 17.

---

TRY OUR I C A.
It gives more mileage and more power.

# Rangaswamy & Co.,

Shell Pump,
Opp. Imperial Bank,
1st Line Beach, Madras-1.

---

# The Educational Review

(Established 1895.)
Every School, College & Library Should Subscribe.
ANNUAL SUBSCRIPTION Rs. 5|-ONLY.
*Hon. Editor:* Sri A. N. Parasuram, M. A.
*Assistant Editor:* Sri M. C. Krishnan.
*Publisher:* Sri. M. R. Sampatkumaran, M. A.
16. SUNKUVAR ST, TRIPLICANE, MADRAS-5.

# தையில் மகம்

★

வை. மு. ஸ்ரீ.

### மாமுனிவன் புகழ்மாலை

"துய்ய மதிபெற்ற மழிசைப்பிரான் பிறந்த நாள்!" என்று தையில் மகத்தை மகா தபஸ்விகளும் கொண்டாடுகின்றனரன்றோ! மக நக்ஷத்திரத்தைச்சுற்றி ஸப்தரிஷிகள் வர்த்திப்பதாக ஜோதிட சாஸ்த்ரம் கூறுவதேபோல், தையில் மகத்தை நல்தவர்கள் கொண்டாடும் நாளாகக் கூறுகிறது உபதேசரத்தினமாலை.

### திருவாழியின் திருவவதாரம்

ஸுதர்சனம் என்னும் திருவாழியின் அம்சமாக அவதரித்த இந்த ஆழ்வார் ஸாதாரண சிசுவைப்போலன்றி தெய்வீகக் குழந்தையாக, பகவத்குணாநுபவத்தையே தாரகமாகக்கொண்டு, பசிதாஹமின்றி, உண்ணுஞ்சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் என்ற நிலையிலேயே வளர்ந்து வந்ததைக் கண்டு உலகமே வியந்தது. எம்பெருமானை அனுபவித்தலாகிய அம்ருதபானமே அவரது உடலையும் உள்ளத்தையும் நிரப்பியது; மஹாதேஜஸ்ஸுடன் யோகியாக வளர்த்தது.

### பல மதங்களில் புகுந்து ஆராய்தல்

பார்க்கவ முனிவருக்கும் கனகாங்கி என்ற தேவ மாதுக்கும் பிறந்த இவ்வாழ்வார் ஏழு வயதுவரை ஒரு பிரம்பறுப்பானிடத்திலே வளர்ந்து, பிறகு அஷ்டாங்க யோகத்தால் முழுமுதற் கடவுளை யடையக்கருதி, ஊர்ஊராய்ச் சென்று ஆராயமுற்பட்டார். பரதத்துவத்தைக் கண்டுபிடிக்க முற்பட்டவர், பலமதங்களுள்ளும் தனித்தனியே புகுந்து ஆராயலானார்.

ஒரு மதத்தில் பிரவேசித்தபோது, அதற்கேற்ற பெயரோடும் ஒழுக்கத்தோடும் விளங்கி, அம்மத நூல்களையெல்லாம் ஆய்ந்து, தேர்ந்து, அதற்கிணங்கத் தானும் பல நூல்கள் இயற்றுவார். பிறகு, அக்கொள்கைகளிலுள்ள குறைபாடுகளை உணர்வார். உடனே அதனைவிட்டு வேறொரு சமயத்தில் இறங்குவார்.

### பேயாழ்வார் திருத்திப் பணி கொள்ளுதல்

இங்ஙனமே லோகாயதம், பௌத்தம், சமணம், மாயாவாதம் முதலிய மதங்களை ஆராய்ந்து, விடுத்து, சைவ சமயத்தில் புகுந்து சிவவாக்கியர் என்னும் பெயர் பூண்டு, சிவபரமாக நூல்களை இயற்ற முற்பட்டார். இந்நிலையில் இவரைப் பேயாழ்வார் திருத்திப் பணி கொண்ட சரித்திரம் ப்ரஸித்தம். வெகு காலமாய்ப் பல மதங்களில் அலைந்தும் பரதத்துவம் இன்னதென்று உண்மை தெளியாதிருந்த திருமழிசைப்பிரானுக்குப்பேயாழ்வார்பஞ்சஸம்ஸ்கார பூர்வகமாகத் தத்வோபதேசம் செய்தருளினார்.



இல்லாத முழுமுதற்கடவுள் ஸ்ரீமந்நாராயணனே என்ற உணர்வு பெற்று, "...பாக்கியத்தால் செங்கட் கரியானைச் சேர்ந்தோம்யாம் தீதிலமே, எங்கட் கரியதொன் றில்" என்று தேறி, திருமழிசைக்குத் திரும்பி, யோக நிலையில் ஆழ்ந்து ஸ்ரீமந் நாராயணனை த்யானிக்கலானார்.

### வைபவ ப்ரகாசிகை

முக்கண்மூர்த்தி இவ்வாழ்வாருக்கு பக்திஸாரர் என்று புகழ் மாலை சூட்டியதும், சுக்திஹாரன் என்னும் ஸித்தனும், கொங்கண ஸித்தனென்னும் ரஸவாதியும் இவ்வாழ்வாரை வணங்கி அடி பணிந்ததும், அர்ஜுனனிடம் கண்ணபிரான் இருந்தவிதமே கணிகண்ணன் என்னும் சிஷ்யனிடம் இவ்வாழ்வார் இருந்ததும், திருவெஃகா எம்பெருமானும் திருக்குடந்தை எம்பெருமானும் இவர் சொன்னவண்ணம் செய்து தலைக்கட்டிய விசித்திரமும், பெரும்புலியூர் குறும்பர்களையடக்க பகவான் இவ்வாழ்வார் திருமேனியிலேயே தோற்றமளித்த அற்புதமும், இவ்வாழ்வாருடைய வைபவத்தைப் பிரகாசப்படுத்தும் முக்கிய அம்சங்களாகும்.

### இவர் சாற்றிய திருநாம மாலை

இவ்வாழ்வார் இயற்றியருளியது நான்முகன் திருவந்தாதி (96 பாசுரங்கள்), திருச்சந்த விருத்தம் (120 பாசுரங்கள்.) இந்த 216 பாசுரங்களில் இவர் பகவானுக்கு 531 திருநாமங்கள் சாற்றியுள்ளார். அவற்றுள் சிலவற்றை நம் நெஞ்சிலே தேக்கிக்கொள்வோம்: ஞாலத்தொருபொருள், வானவர்தம் மெய்ப்பொருள், அப்பில் அருபொருள், வேறொருவரில்லாமை நின்றான், எப்பொருட்கும் சொல்லான, வேதமுதற்பொருள், பத்தியுழவன், என்னெஞ்சமேயான், இருள்நீக்கி, அன்பாவான், இன்பாவான், உள்ளுவாருள்ளத்துளன், வரம்பிலாத கீர்த்தியான், அத்தனானவன், அன்னையானவன், ஆளுமெம்பிரானானவன், ஆதியந்தமில்லவன், இன்றுவந்து உயக்கொள மேகவண்ணன்... இத்தியாதி.

### மழிசைப்பிரானும் கண்ணபிரானும்

திருமழிசைப்பிரானுக்கும் ஸ்ரீகண்ணபிரானுக்கும் பலபடியாலும் ஒற்றுமை காட்டி, ஆழ்வாரது புகழைப பேசுவதுண்டு. அந்த நிர்வாகத்தில் சில அம்சங்களைக் கவனிப்போம். (1) க்ஷத்திரிய குலத்திலே பிறந்து வைசிய குலத்திலே வளர்ந்தான் கண்ணன்; பார்க்கவ ரிஷியின் புதல்வராய்ப் பிறந்து பிரம்பறுப்பானிடம் வளர்ந்தார் ஆழ்வார். (2) அர்ஜுனனைக் கண்ணன் கடாக்ஷித்ததேபோல், கணிகண்ணனை ஆழ்வார் கடாக்ஷித்தார். (3) பாண்டவர்களுடைய சத்ருவைக் கண்ணன் தன் சத்ருவாகக் கருதியதேபோல் கணிகண்ணனுடை சத்ருவானராஜனை ஆழ்வார் தன் சத்ருவாகவே கருதினார். அர்ஜுனன சொன்னவண்ணம் செய்தார் ஸாரதி; ஆழ்வார் சொன்னவண்ணம் செய்தார் திருவெஃகா மணிவண்ணன். (4) ராஜஸூய யாகத்தில் கண்ணனுக்கு அக்ரபூஜை ஸமர்ப்பித்ததேபோல், அரிபாத தீக்ஷிதருடைய யாகத்தில் ஆழ்வாருக்கு அக்ரபூஜை ஸமர்ப்பிக்கப்பட்டது. [illegible]

பட்ட சிசுபாலனைச் சக்ராயுதத்தால் வீழ்த்தினார் கண்ணன்; இங்கு, கர்வப்பட்ட அத்வர்யுகளுக்கு ஆழ்வார் தன் யோகபலத்தினால் தனது திருமேனியிலேயே சேஷசாயியான பகவானை தர்சிப்பிக்கச் செய்து அவர்களது கர்வத்தை யடக்கினார். (5) கண்ணன் தனது விச்வரூபத்தைச் சேவிக்கச் செய்ததேபோல், ஆழ்வார் எம்பெருமானுடைய திவ்யமங்களவிக்ரகத்தைத் தனது திருமேனியில் பக்தர்களுக்குக் காட்டினார். (6) பகவான் கீதோபதேசத்தில் செய்த பரத்வ ஸ்தாபனத்தையே ஆழ்வார் தமது ப்ரபந்தங்களில் ஸாதித்தார். (7) கீதையின் சரமச்லோகத்துக்கு அர்த்தமாகவே திருச்சந்த விருத்தத்தில் ''அத்தனாகி'' என்கிற பாசுரம் அமைந்திருப்பதை உலகார்யன் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ஆழ்வாரின் முக்கிய லக்ஷ்யம்

இனி, ஆழ்வாருடைய அருள்வாக்கில் சில திவலைகளைக் கவனிப்போம். ஸ்ரீமந்நாராயணனே பரதெய்வமென்று ஸ்தாபித்து, அனைவரும் பகவத் ப்ரவணராகும்படி திருத்தியருளுவதே இவ்வாழ்வாருடைய முக்கிய லக்ஷ்யமாகும். இதற்குப் பேயாழ்வார் மூலமாக இவர் எம்பெருமானுடைய அநுக்ரஹ விசேஷமாகிற மயர்வறமதிநலத்தைப் பெற்றதும், பகவத்கல்யாண குணங்களையும் திவ்யாத்ம ஸ்வரூபத்தையும் திவ்யமங்கள விக்ரகத்தையும் ஸாக்ஷாத்கரித்ததுமே காரணமாகும்.

ஆழ்பொருளை உணர்வீர், உலகத்தீரே!

''உலகத்தீர்! உண்மைப் பொருளை உணரப்பெறாமல் வீணே நசித்துப் போகாதீர்கள்! ஸம்ஸாரத்தின் பொல்லாங்கையும் நான் சொல்லுகிற அர்த்தத்தின் அருமை பெருமைகளையும் ஆராய்ந்து, அவை நெஞ்சில் நின்றும் நழுவி மங்கிப்போகாதபடியாக உள்ளத்தே தேக்கிக் கொள்ளுங்கள்!'' என்று தொடங்கி, பரம புருஷனின் பூர்த்தியையும் தேவதாந்தரங்களின் அபூர்த்தியையும் கல்வெட்டும் செப்பு வெட்டும்போலே ப்ரபந்தப்படுத்தி பரதத்வ நிர்ணயம் செய்ய முற்படுகிறார்-

''நாராயணன் நான்முகனைப் படைக்க, அந்த நான்முகன் மற்ற ச்ருஷ்டிகளைப் பண்ண, இருவரும் ஸம்ஸாரத்தை வளரச் செய்தார்கள்; நானோ, அங்ஙனன்றியே உலகீர்! உங்களுடைய ஸம்ஸாரம் வேராறும்படியாக ஆழ்பொருளை அறிவிக்க முற்படுகின்றேன், காண்மின்!'' என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளதாகப் பெரியவாச்சான்பிள்ளை விளக்கியுள்ளார்-

அவன் பெருமை அவனுக்கே தெரியாதே!

பகவானுடைய கல்யாண குணங்களின் பெருமையை அளவிட்டு அறியவல்லார் யாருமில்லை. ஸர்வஜ்ஞனான அவ்வெம்பெருமானுக்கே தமது பரத்வம், ஸௌலப்யம், ஸௌசீல்யம், வாத்ஸல்யம், ஸ்வாமித்வம் முதலியவற்றால் தமக்கு ஏற்படும் பெருமையின் எல்லை தெரியாது! ஸ்ரீமந் நாராயணனே பெருமையிற் சிறந்த பரதேவதை; அவனுடைய நிர்ஹேதுக க்ருபையைக்கொண்டே அவன் பெறத்தகுந்தவன். கருமம், ஞானம், பக்தி முதலிய



உபாயங்களான தபஸ்ஸும் ஸாக்ஷாத்தாகப் பலன் அளிக்காது; அவனது திருவருளே பலனளிக்கவல்லது என்ற சாஸ்த்ர ஸாரார்த்தத்தை வெளியிடுகிறார் ஆழ்வார்.

எல்லாம் அவனே!

உலகத்தில் ப்ரயோகிக்கப்படும் ஸகல சப்தங்களும் (ஸர்வாந்தர்யாமித்வேன ஸர்வ சரீரியாயிருக்கின்ற) பரமாத்மா வரையில் செல்லும் என்பதையும், தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவர ரூபங்களான நால்வகைப் பொருள்களிலும் உட்பதிந்திருந்து அவற்றின் ஸத்தைக்கு நிர்வாஹகனாயிருக்கின்றான் பகவான் என்பதையும் அடுத்தபடியாக விளக்குகிறார் ஆழ்வார்-

அனைத்தும் அவன் நினைத்த விளையாட்டே!

''அனைத்துலகும் அனைத்துயிரும் அமைத்து, அளித்து, துடைப்பது, நீ நினைத்த விளையாட்டு! கருதரிய உயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும் ஒரு தனி நாயகம் நீ! ஆகவே, உனக்குச் சொல்லும் ஏற்றமெல்லாம் பொருந்தும்; உன்னிடத்தில் விமுகராயொழிந்தவர்களெல்லோரும் மண்ணின் பாரமே! என்றார் மேலும்.

பரஸ்பர இலக்கு—அன்பும் அருளும்

''பகவானே! சேஷியான உன்னையொழிய எனக்கு ஸத்தையில்லை; சேஷபூதனான என்னையொழிய உனக்கு ஸத்தையில்லை- என்னுடைய வேண்டுகோளுக்கு உன் அருளே இலக்கு! உன்னுடைய திருவருளுக்கு நானே இலக்கு!''

பக்தியுழவன் பண்ணும் க்ருஷி

''அலைபாய்ந்துகொண்டிருந்த என மனமானது நீ ஆச்ரிதர்களுக்காக உழைக்கும் தன்மையை யுணர்ந்ததுமே, 'இப்படிப்பட்ட உனக்கு அடிமைப்படும் நற்பேறு பெற்றேனே!' என்று தேறி, கவலையொழிந்து, நிலைபெற்றேன். நீ செய்தருளுங் காரியங்களெல்லாம் அடியார்களுடைய ப்ரயோஜனத்திற்காகவேயன்றி உன் ஸ்வப்ரயோஜனத்திற்காகவன்று என்று உணர்ந்தேன். சேதனர்களான நாங்கள் அறிந்த நிலைமையிலும் அறியாத நிலைமையிலும் பக்தியுழவனாகிய நீ, எங்களுடைய உஜ்ஜீவனத்துக்கு க்ருஷி பண்ணியருளுகிறாய்! உன் விஷயத்தில் என்போல்வார்க்கு பக்தியுண்டாவதற்கு நீயே க்ருஷிபண்ணும் அழகை என்னென்று சொல்வது! நெஞ்சினால் நினைக்கவும் முடியாத ஞானசக்திகளையுடையனான நீ, என்னுடைய வாக்கில் வரும் சொற்களுக்குப் பொருளாயிருந்துகொண்டு, என்னுடைய நெஞ்சமாகிற நிலத்திலே தமிழாகிற விதையை விதைத்து, பக்தியாகிய பயிர் செழித்து விளையும்படிச் செய்தருளினையே, அதன் பலனாய் நான் நிலை நின்ற நெஞ்சுடையேனாயினேன்!'' என்று 'மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:' என்ற சாஸ்த்ரார்த்தத்தை விளக்கியருள்கிறார்.

சிவபிரான் உபதேசித்த நாராயணபரத்வம்

''நீயே உலகெல்லாம்! நின்னருளே நிற்பனவும்! நீயே தவத் தேவ தேவனும்! எரிசுடரும் மால்வரையும் எண் திசையும்

அண்டத்து இருசுடரும் ஸகலமும் நீயே! உனது இப் பரத்வத்தை நான் சொல்லவேணுமோ? ஸர்வஜ்ஞரான சிவபிரானே அகஸ்தியர், புலஸ்தியர், தக்ஷர், மார்க்கண்டேயர் என்ற நான்கு முனிவர்களுக்கு இதனை உபதேசித்ததை நூல்கள் கூறவில்லையா?

மஹாதபஸ்விக்கும் உபாஸ்ய விஷயமுண்டு

நிற்க, ஒரு சமயம் அச்சிவபெருமான பார்வதியின் வாயிலாக உனது திருநாமத்தைக் கேட்டமாத்திரத்திலேயே எங்ஙனம் அசைந்து போனார் என்ற சரித்திரத்தை நான் மறப்பேனா? த்யானபரனாயிருந்த அந்த மகா தபஸ்வியைக் கண்ட உமை, 'உமக்கும் உபாஸ்ய விஷயம் ஒன்றுண்டோ?' என்று கேட்டதற்கு அவர், "ஸ்ரீமந் நாராயணனை உபாஸிக்கிறேன" என்று மறு மொழி கூறவேண்டி அத்திருநாமத்தை ஸ்மரித்த மாத்திரத்திலேயே, காலாழும், நெஞ்சழியும், கண் சுழலும், என்றபடி உள் உருகி, குரல் தழுதழுத்து, உடம்பெலாம் கண்ணநீர் சோர விகார மடைந்த சரித்திரத்தை ஸ்மரிக்கிறார் ஆழ்வார்.

பக்திஸாரர் என்று ஆழ்வாரைப் பரமசிவன் கொண்டாடுதல்

அத்தகைய பக்திமானாகிய சிவபெருமானாலேயே பக்திஸாரர் என்று கொண்டாடப்பட்ட இவ்வாழ்வார், "கடல்வண்ணா! அடியேனால் ஆச்ரயிக்கப்படும் தெய்வம் நீ தவிர வேறு எதுவுமில்லை யென்னும் விஷயத்தில் அப்பரமசிவனே சாட்சி, காண்! இப்படி அநந்ய பக்தனான அடியேன் உன்னை என்றென்றும் ஸேவித்துக் கொண்டேயிருக்கவல்லேனும்படி கடாக்ஷித்தருளவேணும்!' என்று ப்ரார்த்தித்து, செவி வாய கண் முதலிய உறுப்புகள் யாவும் பகவத்விஷயத்தில் உபயோகப்படுவதற்கென்றே படைக்கப் பட்டனவாதலால், அவற்றை அவ்விஷயத்திலேயே உபயோகப் படுத்துங்கள்! என்று பரோபதேசம் செய்கிறார்-

என் நெஞ்சில் நித்யவாஸமே எம்பெருமானுக்குப் புருஷார்த்தம்

உலகில் ஒவ்வொருவர் ஒவ்வொன்றைப் புருஷார்த்தமாகப் பேணுவர்; எனக்கோ வென்னில் அவை யொன்றும் விருப்ப மல்ல. எம்பெருமான் தானே, இவ்வாழ்வாருடைய நெஞ்சகம் நமக்கு இருப்பிடமாகக் கிடைக்குமா? என்று காதலித்து, தன பேறாக வந்து சேரப்பெற்ற எனது நெஞ்சில் அப்பெருமானுடைய நித்யவாஸம் ஒன்று தவிர மற்றெதுவும புருஷார்த்தமாகக் கருதப் படமாட்டாது.

இனி அவனைத் திவ்யதேசங்களில் தேடவேண்டியதில்லை

திருப்பாற்கடல் முதலிய ஸ்தானங்களை விட்டிட்டு, என் நெஞ்சிலே நிலைபெற்ற பகவான், இனி நான் ஸம்ஸாரமாகிய நாடகசாலையிற் புகாவண்ணம் என்னைக் காத்தருள்வன். எனது ஹ்ருதயத்தையே தனக்குப் பரம ப்ராப்யமான ஸ்தலமாகத் திருவுள்ளம் பற்றிய பரமபுருஷனுக்கு இனி மற்றஸ்தலங்களில் பொருந்துமோ? "இனி நான உன்னை எந்த திவ்ய தேசத்திலும் தேட வேண்டிய தில்லை. நீதான் அங்கு நின்றும் என உள்ளத்தே வந்து உறைகின்றாயே!" என்று உகலிக்கின்றார்.



எம்பெருமானுக்கு உகந்தருளின நிலங்களில் இருப்பதிற்காட்டிலும் மெய்யடியாருடைய ஹ்ருதயகமலத்தில் வாழ்வதே பரமோத்தேச்யம். ஸமயம் பார்த்து அன்பர்களுடைய நெஞ்சிலே வந்து சேர்வதற்காகவே திவ்யதேசங்களில் வாஸம் செய்கிறானும். பரம பக்தராகிய அடியார்களின் ஹ்ருதயகமல வாஸமாகிற புருஷார்த்தத்திற்கு திவ்ய தேசவாஸம் பகவான் கையாளும் உபாயமாம்! இதனால், எம்பெருமானிடத்தில் நிஷ்டையுடையரா யிருப்பதிற் காட்டிலும், அவனது மெய்யடியார்களாகிய பாகவதர்கள் பக்கலில் நிஷ்டையுடையராயிருப்பதே சிறந்தது என்ற சாஸ்த்ரஸாரப்பொருளுக்கு ஸித்தி ஏற்படுகிறது. (சத்ருக்நாழ்வான், மதுரகவிகள், வடுகநம்பிபோல்வார் இவ்வர்த்தத்திற்கு உதாஹரண பூதர்கள்.)

பாகவத நிஷ்டையும் பகவந் நிஷ்டையும்

பாகவத நிஷ்டையாகிய புருஷார்த்தத்திற்கு உபாயமாகவே பகவந் நிஷ்டை செய்கிறார் ஆழ்வார். "எம்பெருமானுடைய திருநாமங்களை ஸங்கீர்த்தனம் பண்ணுவதே எனக்கு நித்ய கர்மானுஷ்டானம். இதை ஸாதநாநுஷ்டானமாகச் செய்யவில்லை; ஆத்மாஸத்தை பெறுதற்காக ஸ்வயம் புருஷார்த்தமாய்ச் செய்து, நற்போது போக்குகின்றேன். வேறொன்றிலே என் நெஞ்சைச் செலுத்த வொட்டாதபடி எம்பெருமான் என் நெஞ்சினுள் உறைகின்றான், காண்மின்!" என்கிறார்.

அடியார்க்கடியவர்களே எல்லாரிலும் மேம்பட்டவர்

எம்பெருமான் திருவடிகளில் மலர்களைத் தூவி அடிமை செய்பவர்களே விண் ஆள்பவர்; ஆயினும், எம்பெருமானுக்கு அடிமையாயிருக்கின்ற அத்தகைய பாகவதர்களால் 'இவர்கள் நம்முடையவர்கள்!' என்று அங்கீகரிக்கப்படுபவர்கள் எல்லாரிலும் மேம்பட்டவர்களாவர். பாகவதரைப் பற்றுகை ஒருகாலும் ஸம்ஸார பந்தத்துக்கு ஹேதுவாகாது; மோக்ஷப்ராப்திக்கே அது உறுப்பாயிருக்கும் என்று தேர்ந்தவர் ஆழ்வார்.

ப்ரபத்தியோகமே நமக்குத் தஞ்சம்

பகவானே குணநிதி; நாமோ தோஷநிதி. ஆகையால் எம்பெருமானையே உபாயமாக வரிப்பதாகிற ப்ரபத்தி யோகமே நமக்குத் தஞ்சம். இது, மாயன் அன்றோதிய அருள் வாக்கு! அர்ஜுனனை வ்யாஜமாகக்கொண்டு ஸ்ரீகீதாசார்யன சரம ச்லோகத்தில் உபதேசித்த தத்துவ ஞானப்பொருளை உணர்ந்து நற்கதி பெற வேணும். இதுவே உபநிஷத்துக்களின் ஸாரப்பொருளாகும். எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையன்றிப் பேற்றுக்கு உபாயமாவது வேறொன்றுமில்லை. அவன் திருவடிகளே உபாய-உபேயங்களென்று உறுதிகொண்டிருப்பவர்களான பாகவதோத்தமர்களே உபயவிபூதியிலுள்ளார்க்கும் நிர்வாஹகராம்படியான பெருமையையுடையவர்கள் என்று அறுதியிடுகிறார் ஆழ்வார்.

சாஸ்த்ரங்களாகிற வலையினுள் அகப்பட்டு நிலைபெறாமல் நிற்கிறான் பகவான்; அந்த ச்ரிய:பதியின் திருவடிகளாகிற வலையில் அகப்பட்டு நாம் தரித்து நிற்போமாக! என்று உபதேசிக்கிறார் ஆழ்வார். கண்ணபிரான் சரமச்லோகத்தில் நியமித்தபடியே ஸர்வதர்ம பரித்யாக பூர்வகமாய்ச் சரணாகதி பண்ணினவர் பக்கலில் "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிற தன்னுடைய ப்ரதிஜ்ஞை தவறமாட்டான் என்று உறுதி கூறுகிறார்

புண்ணிய பாபங்கள் அவன் இட்ட வழக்கு

ஏனெனில், புண்ணியம் பாபம் முதலிய ஸகலமும் அவனிட்ட வழக்காயிருக்கும்; நல்வினையும் தீவினையும் அவனேயாவான் என்று சுருதியும் கூறுகிறது. 'ஆள்பார்த்து உழி தருகிறான்' ஸர்வஸ்வாமியான எம்பெருமான். அங்ஙனமே, அன்பும் இன்பும் அவனே! இதற்கெல்லாம் காரணம் லக்ஷ்மீபதித்வமேயன்றி வேறில்லை; பிராட்டியைக் கைப்பிடித்ததனால்தான பரப்ரஹ்மம் என்கிற விலக்ஷணமான தேஜஸ் பகவானுக்கு விளைகின்றது; திருவில்லாத்தேவர் தேவரல்லர்.

ஆழ்வார் தான் செய்த பாக்கியத்தைப் பேசி மகிழ்கிறார்

இப்படியாக ஆழ்வார், மஹோபநிஷத்தில் ஓதின கட்டளையிலே, ஸகல ப்ரபஞ்சங்கட்கும் காரணபூதனான ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவம் என்பதைப் பலபடியாலும் ஸ்தாபித்தார், நான்முகன் திருவந்தாதியில். இங்ஙனம் அருளிச்செய்தும் ஸம்ஸாரிகளானவர் இச்சுவடறிந்து திருந்திவரக் காணாமையாலே, திருச்சந்த விருத்தத்தில், தாம் பெற்ற பேற்றை இனிதாகப் பேசி மகிழலானார். "ஆ! எம்பெருமானுடைய திருவருள் அடியேன்மேல் ப்ரவஹித்ததை என்னவென்று சொல்வேன்! மற்ற பேரைப்போலே விஷயாந்தரங்களிலும் தேவதாந்தரங்களிலும் இழிந்து பாழ்பட்டு ஒழியாது, பரமபுருஷனுடைய பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்னும் நிலைகளின் பெருமைகளைப் பாடி போதுபோக்க இவ்வடிமை செய்த பாக்கியம்தான் என்னே!" என்று தனக்கு ப்ராப்தமான லாபத்தைப் பேசுகிறார் இந்த இரண்டாம் பிரபந்தத்தில்.

துணிவுடைய செந்நாப்புலவனே ஆழ்வார்

திருச்சந்த விருத்தத்தின் சொல்லமைப்பும் இசையழகும் வாசாமகோசரம். கணிதப்புலவரைப்போல் கணக்கு மயமாய் வார்த்தைகளையடுக்கி, அவற்றுள் ஆழ்பொருளையடைக்கிறார். "துணிவுடைய செந்நாப்புலவன்" என்று தன்னைத்தானே வர்ணித்துக் கொண்டதை ஆழ்வார் இந்த 120 பாசுரங்களின் மூலம் நிரூபித்துக் கொள்கிறாரெனில் மிகையாகாது. இரு ப்ரபந்தங்களிலும் இவரது ஒரே நோக்கு ஸ்ரீமந்நாராயண பரத்வநிர்ணயம்தான்.



"பிதாவாயும், மாதாவாயும், நம்முடைய கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஸ்வாமியாயும், ஸகலவித பந்துவாயும், நம்முடைய சிறுமையையும் தம்முடைய பெருமையையும் பாராதே, நமது ஸகல பாரங்களையும் தாமே ஏறிட்டுக்கொண்டு செய்து முடிப்பதாக நம்முள்ளே புகுந்து ஒருநீராகப் பொருந்தியிருக்கையில் நமக்குக் கவலை ஏன்?" பகவான், நிர்ஹேதுகமாகத் தம்முடைய திவ்யமங்கள விக்ரகத்தை என்னுள்ளே பிரியாதபடி வைத்தருளினபடியாலே, ப்ரதிபந்தக ஸமூஹங்களையெல்லாம் நிச்சேஷமாகப் போக்கி, அந்தமில் பேரின்பமான கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்றேன் என்ற உபகார ஸ்ம்ருதியோடே தலைக்கட்டுகிறார், திருச்சந்த விருத்தத்தை.

விலக்ஷணாநந்த ரூபமான கைங்கர்ய ஸாம்ராஜ்யம்

ஆழ்வாருடைய ஹ்ருதயகமலத்திலே தமது ஜோதிமயமான திவ்யமங்கள விக்ரகத்தைப் பிரிக்க வொண்ணாதபடி பொருத்தின கார்முகில் வண்ணன், ஸகல பந்தங்களையும் வேரற நீக்கி, என்றென்றும் இடைவீடில்லாத விலக்ஷணாநந்த ரூபமான கைங்கர்ய ஸாம்ராஜ்யமாகிய முக்தியை யளித்து ரக்ஷித்த பெரும் பேற்றைக் கூறி முடிவடைகிறது இப்பிரபந்தம். இப்பெரும் பேறுதான் பெரும்புலியூர் குறும்பர்களான சடங்கர் வாய் அடங்கிடச் செய்து ஆழ்வாரின் வைபவத்தைப் பிரகாசப்படுத்தியது.

தொண்டக்குலம் குறித்த மகத்தான தத்துவம்

இவ்வாழ்வாருடைய சரித்திரத்திலிருந்தும் அருள் வாக்கிலிருந்தும் நாம் உணரும் மகத்தான தத்துவமாவது பகவத் பக்தர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லோரும் "தொண்டக்குலம்" என்னும் ஏக ஜாதீயர் என்பதே. (1) ஸ்ரீ அஷ்டாக்ஷர ப்ரஹ்ம வித்யாதி விலக்ஷண மந்த்ரோபதேசத்தால் கிட்டும் ச்ரேஷ்ட ஜன்மமும், (2) திவ்யப்ரபந்தாநுஸந்தானத்தால் ப்ராப்தமாகும் ஞானாநுஷ்டானமும், (3) சரமச்லோக உபதேசப்படி ஸாதநாந்தர பரித்யாகத்தினால் விளையும் ஸித்தோபாய நிஷ்டையும், இவை மூன்றும் உடையார் ஏகஜாதீயர் எனக் குறையில்லை. அந்ய சேஷத்வ நிவ்ருத்திபெற்று, பகவத்சேஷத்வமே ஸ்வரூபமாகக் கொண்ட பக்தர் அனைவரும் ஏகஜாதியினரே!—லோகோபகாரத்திற்காகப் பாடுபடும் ஸர்வஜநாநுகூல தொண்டக்குலத்தினரே!

ஞானபூர்த்தியின் மகிமை

மற்றெந்த ஆழ்வாரிடத்திலும் கண்டறியாத ஓர் அதிசயம் இவ்வாழ்வாரிடத்தில் உண்டு: அதாவது, திருவெஃகா எம்பெருமானை, "மணிவண்ணா! நீ கிடக்க வேண்டாம்!" என்றும், அதையாற்றி, "நீ கிடக்க வேண்டும்!" என்றும், குடந்தை அமுதனை "கிடந்தவாறெழுந்திருந்து பேசு!" என்றும், "வாழி" என்றும் தாம் சொன்ன வண்ணம் செய்யும்படிச் செய்த ஞானபூர்த்தியேயாகும். ஆழ்வாருடைய பெருமையை உலகோர் உணரவே அவரைத்

திருமழிசைப்பிரான் ஆக்கி, ஆராவமுதன் ஆராவமுத ஆழ்வான் ஆனார் என்பதும், திருமழிசைப் பிரான் திருக்குடந்தையிலேயே திருநாட்டுக்கெழுந்தருளியதும் ப்ரஸித்த சரித்திரம். "எம்பெருமான் அமுது செய்த போனகம் சேஷபூதர்க்கு ஸ்வீகரிக்க உரியது' என்று முறையிருக்க, திருக்குடந்தை ஆராவமுதாழ்வார், தமக்கு ஆக்கின திருப்போனகத்தை முற்படத் திருமழிசைப்பிரானை அமுதுசெய்யப் பண்ணுவித்து பின்னைத் தாம் அமுதுசெய்தாரென்று ஒரு ப்ரஸித்தியுண்டு. இப்படியாக அன்பரோடு புரையறக் கலந்து பரிமாறுகிறவனென்று ஸம்ப்ரதாயம் காண்க"

நமது படிப்பினை

'தையில் மகம்' என்றதுமே ஸ்ரீமந்நாராயணபரத்வாநுஸந்தானமும், அவன் உகந்தருளின திவ்ய தேசங்களில் ப்ரீதியும், பொருளாசையற்று அஹங்காரமற்று ஞானபக்தி வைராக்யமுடையராய் அவனடியார்களிடத்தில் அன்பு பூண்டு, பகவத் பாகவத கைங்கர்ய நிரதராயிருப்பதில் உண்மையான ஊக்கமும்தான் நமது சிந்தனையில் தலைதூக்கிநிற்கும். பண்டைக்குலத்தைத் தவிர்ந்து, தொண்டக் குலத்திலே வந்து அந்வயித்து, சேஷத்வமே ஸ்வரூபம் என்று உய்வு பெற்ற ஆழ்வாரின் பெருமை நமக்குப் புலனாகும். திருமழிசையைத் திக்கு நோக்கி அஞ்சலி செய்வோம்! வாழ்க மஹீஸார க்ஷேத்திரத்தில் வந்துதித்த மாபெருஞ் ஜோதி!

## தையில் ஹஸ்தமும் புனர்வஸுவும்.

பண்டித திருவாலி அ. இராமாநுஜாசாரியர்.

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்பதைத் தம் அநுஷ்டானத்தாலும் தம் அரிய ப்ரபந்தங்கள் இரண்டினாலும் வஜ்ரலேபனமாக நிலைநாட்டிய திருமழிசைப்பிரான் திருவவதரித்த சீர்மையையுடைய இம் மாதத்தில் ஆசார்ய ஸார்வபௌமர்கள் இருவர்-பரமவிலக்ஷண வைராக்ய சிகாமணிகள்—திருவவதாரம் செய்தருள வேண்டியதும் அத்யாவச்யம்தானே! தையில் ஹஸ்தத்தில் திருவவதரித்தவர், "வானிட்ட கீர்த்தி வளர் கூரத்தாழ்வான்"; புனர்வஸுவில் திருவவதரித்தவர், ராமாநுஜபதச் சாயையாய் கோவிந்த பட்டர் என்னும் திருநாமமுடைய எம்பார். இருவரும் கலியறிவில் ஆதிசேஷாம்சரான பாஷ்யகாரரே கொண்டாடும் கீர்த்தியுடையவர்கள். பரம விரக்தர்கள்—எனினும், பரம ரஸிகர்கள்! ஏகஸந்தைக்ராஹிகள்—(ஓர் உருச்சொன்னால் மறு உருச்சொல்லவேண்டியதில்லை!)—ஆழ்வான் போதாயன வ்ருத்தி என்னும் க்ரந்தம் முழுவதும் ஓருருவில் நெஞ்சில் தேக்கிக் கொண்டுவந்து உடையவர் ஸ்ரீபாஷ்யம் அருளிச்செய்யும்போது உடன் துணையாய் நின்று பட்டோலைகொண்டும் வ்ருத்திகாரதத்திலுள்ள அரும்பொருள்களை அவ்வப் போது உபகரித்தும்வந்த சரிதம் உலகப்ரஸித்தம்.



திருமழிசையாழ்வார் சிவவாக்கியராகச் சிலகாலம் இருந்து செங்கண் நெடியானைச் சேர்ந்துய்ந்தவர்; எம்பார் சிவத்விஜராகவே இருந்து பெரிய திருமலைநம்பியால் திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆளாக்கப்பட்டவர். "மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக் குறும்பாம், குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான்" திருவாய்மலர்ந்தருளிய பஞ்சஸ்தவத்தின் பல ரஸங்களையும் யாவரே அறியவல்லார்?

அந்தந்த ஆழ்வார்கள் ஆசார்யர்கள் திருநக்ஷத்திரங்களில் அவ்வவர்களது அருளிச்செயல்களை நெஞ்சுருகித்தெரிந்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போதுபோக்குவோம்!

[எம்பார்—எம்பாருக்குத் திருஅவதாரஸ்தலம் தொண்டைமண்டலத்தில் கிராமவக்ரம் (மதுரமங்கலம்): திருநக்ஷத்ரம், துர்மதி வரு தை மீ புனர்வஸு. திருத்தகப்பனார், கமலநயனபட்டர். திருத்தாயார், பெரியபிராட்டியார். திருத்தம்பியார், சிறிய கோவிந்தப்பெருமாள். குலம், வடமாள். குடி, வட்டமணி; கோத்ரம், பாரத்வாஜம். தாஸ்யநாமம், ஸ்ரீ கோவிந்ததாஸர், ராமாநுஜபதச்சாயையார். புருஷகாரம், பெரிய திருமலைநம்பி. ஆசார்யர், எம்பெருமானார். திருவாராதனம், அழகிய சிங்கர்: சிஷ்யர், பட்டர், சீராமப்பிள்ளை. இவர் 105 திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவர் பாஸநிர்முக்தராகையாலே இவருக்கு இருப்பிடம் எம்பெருமானார் சந்நிதி. இவர் அருளிச்செய்தருளிய ப்ரபந்தங்கள் விஜ்ஞான ஸ்துதி. இவர் பெரியதிருமலைநம்பிக்கு மருமகனார்.]

[கூரத்தாழ்வான்—இராமாம்சபூதரான கூரத்தாழ்வானுக்குத் திரு அவதாரஸ்தலம், கூரம் என்கிற அக்ரஹாரம். திருநக்ஷத்ரம், தை மீ ஹஸ்தம். திருத்தகப்பனார், அனந்தர்; திருத்தாயார், பெருந்தேவி நாயகி. தேவியார், ஆண்டாள். குமாரர், பட்டரும் (பராசரபட்டர்) சீராமப்பிள்ளையும் (வேதவ்யாஸபட்டர்). ஆசார்யர், எம்பெருமானார். இருப்பிடம், கோயில். வேதசாஸ்த்ர ப்ரபந்தங்கள் சாதித்தருளினவர், திருத்தகப்பனார். ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தங்களும் சகலரஹஸ்யார்த்தங்களும் சாதித்தருளினவர், எம்பெருமானார். இவர் மந்த்ரார்த்தத்துக்காக மாஸோபவாஸம் பண்ணினார்! இவர் செய்தருளின க்ரந்தங்கள், பஞ்சஸ்தவம், யமகரத்நாகரம், கத்யத்ரயவ்யாக்யானம். சிஷ்யர், பிள்ளைப்பிள்ளையாழ்வான், திருவரங்கத்தமுதனார், நாலூரான் முதலானவர்கள். இவர் 108 திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.] —பெரிய திருமுடியடைவு.

போன் : 55781. தந்தி : [illegible]

எல்லாவித எலக்ட்ரிக் சாமான்களுக்கும்

எல்லாவித எலெக்ட்ரிக் வேலைகளுக்கும்

**ஜெனரல் டிரேடர்ஸ்.**

எலக்ட்ரிகல் கண்ட்ராக்டஸ், வியாபாரிகள்,

3-21, மைனு பஜார், மதராஸ்-1

கிளை ஆபீஸ்: 12-135, கான்வென்ட் தெரு, விஜயவாடா-1.

Known For Quality. Available In Five Colours

**Iris Inks**

BEST for COSTLY PENS.


Madras-4. Bangalore-3.

டிரேட் **A** மார்க்

**கொட்டைப் பாக்கு சீவல்**

**தியாகராஜ் சீவல் ஸ்டோர்ஸ்,**

**கும்பகோணம்.**



# ஸ்ரீத்யாக ப்ரஹ்ம கீர்த்தன ஸாரஸாம்

ஸ்ரீரங்கம் சுந்தரம் அய்யர்


ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் பக்தியில் வால்மீகி அம்சமும், கானத்தில் நாரதாம்சமும் பெற்ற ஒரு அவதார புருஷர். வால்மீகி அம்சம் என்பதற்கு சூசகமாக அவருடைய பூர்வ சரித்திரத்தை துடுகுகலநன்னே தொரசொடுகுப்ரோசுரா, எடுலப்ரோதுவோ தெலிய என்கிற கீர்த்தனங்களால் தெரிவிக்கிறார். புட்டினநாடே, நிஜபக்திநிமெடகட்டி, ப்ருத்யுடைன த்யாகராஜுசெய் பட்டிவிடுவராது; பிறந்தன்றையதினமே நிஜமான பக்தியை என் கழுத்தில் கட்டி என்னைக் காப்பாற்றின நீ இப்பொழுது கைவிடப்படாது என்பதாலும், துடுகுகல, எடுலப்ரோதுவே என்கிற கீர்த்தனங்களில் விவரித்த செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் செய்யக்கூடாதவைகளைச் செய்தல் ஆகிய பாதகங்களை த்யாகராஜஸ்வாமியாக அவதரித்து செய்ய ஸவுகாசத்திற்கோ அவகாசத்திற்கோ இடமில்லை. என்னரானி ஊடிகமுகைகொனி சின்னநாடேந: மேலும் தனக்கு ராமநாமத்தை மரா என்று அக்ஷரத்தை மாற்றி உபதேசமானதை எவரநிகிர்ணயிம்சிரிரா (உன்னை யார் என்று நிர்ணயிப்பது) என்கிற கீர்த்தனத்தில் சிவமந்த்ரமுனகு மஜீவமு மாதவமு

த்ரமுனகுராஜீவமு என்று சரணத்தில் ஸூசிப்பிக்கிறார். (சிவமந்த்ரமாகிய நமச்சிவாய என்கிற பஞ்சாக்ஷரத்திற்கு பீஜாக்ஷரம் ம, மாதவ மந்த்ரமாகிய நாராயணாய என்கிற அஷ்டாக்ஷரத்திற்கு ரா பீஜாக்ஷரம்).

நாரதாம்சம் என்பதற்கு, நாரத மஹர்ஷியே ஸந்நியாசியாக வந்து ஸ்வரார்ணவம் என்கிற நாத வித்தை க்ரந்தத்தை அருளப் பெற்றார் என்று ஸ்வரராகஸுதாரஸயுத பக்தி என்கிற கீர்த்தனத்தில் நான்காவது சரணத்தில் ரஜதகிரீசுடு—ஹிமோத்கிரிவாஸியான பரமசிவன்; நகஜகு—பார்வதிக்கி; தெல்புஸ்வரார்ணவ மர்மமுலு—உபதேசித்த ஸ்வரார்ணவ க்ரந்தத்தின் தத்வங்கள் த்யாகராஜனுக்குத் தெரியுமென்கிறார்.


நாரத மஹர்ஷியைப்பற்றி ஒருவரும் கீர்த்தனை பாடவில்லை. நாரத மஹர்ஷியை ஸ்வாமிகள் ஸ்தோத்திரம் செய்யும் பொழுது ஸ்ரீநாரதமுநீகுருராயகம்டிகனுலாரகனுகொம்டிகுருராய,—கண்ணாரக்கண்டேன் குருவே, த்யாகராஜுநிப்ரோசின குருராய—த்யாகராஜனைக் காப்பாற்றின குருவே! என்று வர்ணிக்கிறார். ஸ்ரீநாரத நாத ஸரஸீருஹ ப்ருங்க சுபாங்க—நாதமென்கிற தாமரை மலரிலிருக்கிற வண்டே என்றும், வேத ஜநித வரவீணா வாதன தத்வஞ்ச - வேத சாகைகளைக் கடைந்தெடுத்த சிறந்த வீணையை வாசிக்கிற தத்வங்களை அறிந்தவனே என்பதால் நாதோபாஸனைக்கு குரு எனவும், நாரத குரு ஸ்வாமி என்கிற கீர்த்தனத்தில் இதிஹாஸ புராணாகமசரிதமு எவ்வரிவல்லகலிகே—என்பதால் இதிஹாஸ—(பூர்வ கதைகளும்) புராணங்களும், ஆகம சாஸ்த்ரங்களும், எவரிவல்லகலிகே—யாரால் உண்டாயிற்று, என்று ஸ்தோத்திரம் செய்வதால் இவைகளை நாரத மஹர்ஷியே எல்லாவற்றிற்கும் ஸூத்ரதாரியாக இருந்து நடத்தி வைத்ததால் மேற்குறிப்பிட்டவைகளின் ஸாராம்சங்களின் குறிப்புகளோடு ராம சரிதமாக செய்யப்பட்ட கீர்த்தனங்களில் ப்ரகாசப்படுத்துவதற்கும் நாரதரே குருவாக அமைந்தார் என்பதை ஸூசிப்பிக்கிறது. இதை ஸ்வாமிகள் ராக ரத்ன மாலிகசே ரஞ்ஜில்லு நடசதாராக என்கிற கீர்த்தனத்தின் சரணத்தில் நைகமஷட் சாஸ்த்ர புராணாகமார்த்த ஸஹிதமட, யோகிவருலு ஆனந்தமு நொந்தே ஸன்மார்க்கமட பாகவதோத்தமுலு கூடிபாடே கீர்த்தனமுலட, த்யாகராஜு கடதேர தாரகமனி ஜேஸின சதாராக ரத்ன மாலிகசே என்று விவரிக்கிறார்.

ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனங்கள் ஸ்ரீவால்மீகியின் ஸ்ரீராமாயண காவி[illegible]ய ப்ரதிபலிக்கச் செய்கின்றன. ஸ்ரீராமன் தன் [illegible]துக்கொண்டு மனுஷாவதாரமாகவே மு[illegible] நடித்துக்காட்டின ரகஸ்யத்தைப் [illegible]கபடுத்தாமலே கா[illegible] செய்யவேண்டிய கட்டுப்பாட்டுக்கி[illegible] அனேக விஷய[illegible] தான் ப்ரத்யக்ஷமாகப் பார்த்துச் [illegible] காவியத்தின் ரஸ[illegible] வங்களையும் ஸ்ரீராமனின் பரத்வத்[illegible]ரங்கப்படு[illegible]யவில்லை. (தொடரும்)




மைசூர் லாம்புகள்
வாங்குங்கள்.
அவை நேர்த்தியானவை.
நீண்ட நாள் உழைக்கும்.
நம் நாட்டிலே செய்த பல்புகள்.
உங்கள் ஊர் கடைகளில் கிடைக்கும்.

Printed by V. M. Parthasarathy, at the Jaganmohini Press, 26, Car St, Triplicane. Edited and Published by M. O. Alasingra Chari, B.Sc., B. L., for the Bakthan, 71. Venkatarangam Pillai St., Triplicane, Madras. 5.




Available at:—

UNIVERSAL
AGENCIES

Authorised Dealers for Philips Radios,
Distributors for Philips Radio Components,
&
Specialists in dependable radio repairs at moderate charges,

2-18-C, Mount Road, Madras.
(Phone 86098)